# தமிழருவி

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான சஞ்சிகை

மலை – 3 அருவி – 1



விலை ரூபா. 100/=

வெளியுலகில் சிந்தனையிற் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


நிர்வாக இயக்குநர்,
உதவி ஆசிரியர்:
**த. கணேசமூர்த்தி**

பிரதம ஆசிரியர் :
**ம. பா. மகாலிங்கசிவம்**

கௌரவ ஆலோசகர் :
**சிவத்தமிழ் வித்தகர்**
**சிவ. மகாலிங்கம்**

முகவரி:
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**

தொலைபேசி :
**077 7743055**
**077 4736459**

அலுவலக முகவரி
**தமிழருவி, பலாலி வீதி,**
**டிப்போ அருகாமை,**
**உரும்பிராய்.**

E.mail :
tkm.tamilaruvi@gmail.com


## மாற்றம், காலத்தின் நியதி!

தமிழருவி சஞ்சிகை தனது வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்குச் செல்வதற்கும், வாசகர்களின் பரப்பை அதிகரித்துக் கொள்வதற்குமெனச் சில மாற்றங்களை மேற்கொள்வது காலத்தின் நியதியாக உள்ளது.

இவ்வகையில் வாசகர் அநேகரின் – மீண்டும் மீண்டும் விடுக்கப்பட்ட – கோரிக்கைக்கு ஏற்ப சஞ்சிகையின் அளவில் மாற்றம் செய்யப்பட்டுப் புதிய அளவில் உங்கள் கரங்களில் தவழ்கிறது. தொடர்ந்தும் இப்புதிய அளவிலேயே இச் சஞ்சிகை வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் வாசகர்களுக்கு 25,000 ரூபாவை வாரி வழங்கும் மாபெரும் பரிசுத்திட்டம் ஒன்றையும் தமிழருவியில் அறிமுகப்படுத்துகின்றோம். தமிழருவியின் 7வது சஞ்சிகையான இந்தச் சஞ்சிகையில் இருந்து 11ஆவது சஞ்சிகை வரையான 5 சஞ்சிகைகளைச் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். அவற்றில் இடம்பெறும் விடயங்களிலிருந்து 50 வினாக்கள் கேட்கப்படும். கேள்விகளுக்கு சரியான விடையளிப்பவர்களுக்கு முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே ரூபா 10000, 5000, 3000 வழங்கப்படும். மேலும் 7 பேருக்கு 1000 ரூபா வீதம் வழங்கப்படும். எனவே பெருந்தொகையான பணப் பரிசில்களைப் பெற்றுக் கொள்ள இப்போதிருந்தே தமிழருவியைப் பாதுகாத்து வைக்கத் தொடங்குங்கள்.

தமிழருவியின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லக் கூடிய இலக்கிய நாட்டமுடைய, அர்ப்பண சிந்தனையுடன் பணியாற்றக்கூடிய சிலரை உதவி ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ள விரும்புகிறோம். அது பற்றிய செய்தியை அடுத்த சஞ்சிகையில் அறிவிப்போம்.

**நிர்வாக இயக்குநர்,**
**உதவி ஆசிரியர்.**

**பிரதம ஆசிரியர்**

# இந்த இதழில்.....


| | பக்கம் |
|---|---|
| 01. நெறிதவறாத இளைஞர் சமுதாயமே நாட்டின் இதயம் | 3 - 10 |
| 02. மலர்கள் | 10 |
| 03. தேடல் இழந்த சமுதாய வெளி ஒன்றில் நின்றபடி.... | 11 - 14 |
| 04. எழுத்தாளர் கே.எஸ். ஆனந்தனுடனான நேர்காணல் | 15 - 22 |
| 05. வானொலி | 22 |
| 06. ஊனம் சிறிது தாக்கம் பெரிது | 23 - 28 |
| 07. வல்லமை தாராயோ பராசக்தி | 28 |
| 08. மாணவர் வலுவூட்டற் பகுதி | 29 - 34 |
| 09. பழமைக்கும் புதுமைக்கும் | 34 |
| 10. மரணமில்லாப் பெருவாழ்வு | 35 - 38 |
| 11. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகள் | 39 - 43 |
| 12. கவி அரங்கு | 44 - 59 |
| 13. குடும்பத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் | 60 - 66 |
| 14. நன்கு யோசித்து செயலாற்ற வேண்டும் | 66 |
| 15. நூல் வெளியீட்டு விழா | 67 |
| 16. இன்றைய மாணவர்களில் வாசிப்பின் நிலை | 68 - 70 |
| 17. புதிய வேதம் | 71 - 80 |
| 18. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் | 80 - 81 |
| 19. பாப்பாவிற்கு பாரதியார் சொல்லும் புத்திமதி | 82 - 87 |
| 20. கவலைவிடு என் தோழா! | 88 |
| 21. சினிமாத் திரையும் சின்னத்திரையும் | 89 - 96 |
| 22. பால(ன்) பாடம் | 97 - 101 |
| 23. பெண் என்று பிறந்து விட்டால்..... | 101 - 103 |
| 24. பயணங்கள் முடிவதில்லை..... | 104 - 106 |
| 25. சித்தமருத்துவத்தில் தாய்ப்பாலும் நோய் எதிர்ப்புசக்தி மேம்பாடும் | 107 - 109 |
| 26. அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்கள் | 110 - 113 |
| 27. மழை அனுபவங்கள் | 114 - 115 |
| 28. விவசாயமும் நாமும் - நேற்று இன்று நாளை | 116 - 122 |
| 29. பனையோலை இராமன் க(ா)தைகள் | 123 - 125 |
| 30. இதய நோயும் இரத்த அழுத்தமும் | 126 - 128 |
| 31. ஆரம்பக்கல்வி ஆசிரியரும் மாணவர்களும் | 129 |
| 32. திறமைசாலிகளைத் தமிழருவி கௌரவிக்கும் | 130 |
| 33. பாராட்டுப்பத்திரம் | 131 |
| 34. வெண்பா, கட்டுரைப் போட்டி | 132 |

# நெறி தவறாத இளைஞர் சமுதாயமே நாட்டின் இதயம்



சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்

## கல்வியின் முக்கியத்துவம்




உயிர் வாழும் ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டிய செல்வங்களில் கல்விச் செல்வமே மிக உயர்ந்த செல்வமாகும். கல்வியினால் ஒருவன் பெற்றுக் கொள்ளும் அறிவு அவனுக்கு மூன்றாவது கண்ணாக, ஞானக் கண்ணாக மிளிர்கிறது. கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்தியா விஹீன பசு) எனக் கருதப்பட்டான். கல்வி அனைத்து மக்களுக்கும் அணிகலன் எனப் போற்றப்பட்டது. (வித்யா ஸ்வர்ய பூஸணம்) ஒருவனுடைய பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் அழியாமல் இருப்பதற்கு கல்விச் செல்வமே காரணமாக உள்ளது. வாழ்க்கையில் என்றும் துணையாக இருப்பது நற்கல்வியே எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. "சிந்தனைக் கனலை எழுப்பும் பொறியாகக் கல்வி அமைய வேண்டும்" எனக் கூறினார். கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வம் என்பதைக் "கைப்பொருள் தன்னில் மெய்ப் பொருள் கல்வி" எனத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் கொன்றை வேந்தனில் குறிப்பிடுகின்றார். ஒரு பிறப்பில் ஒருவன் பெற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் தொடரும் தன்மை உடையது என்பதை,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

எனத் திருக்குறளும் கூறுகிறது.

## கல்வியும் ஒழுக்கமும்

கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. ஒழுக்கமில்லாத கல்வி வாசனை இல்லாத பூவிற்குச் சமன். ஒருவனிடம் நல்ல குணங்களை வளர்த்தெடுப்பதே கல்வியின் நோக்க மாகும். *(Character hilling is essence of Education)* எனப் பாரத நாட்டின் தேச பிதா மகாத்மாகாந்தி கூறியுள்ளார். மனிதனை உருவாக்கும் கல்வியே தேவை *(Man Making Education)* என்பதே வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் கருத்தும் ஆகும்.



எண்ணத்திலே தூய்மை, சொல்லிலே வாய்மை, செயலிலே நேர்மை கொண்டு ஒழுகும் மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் பெற்றோர், பாடசாலைகள், சமய சமுதாய நிறுவனங்கள் என்பவற்றின் பங்களிப்பு இன்றியமையாததாகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா", "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பன நம்மிடம் உள்ள முதுமொழிகள் ஆகும்.

பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு விதைகளை விதைக்காமல் நல்ல விதைகளை விதைத்துப் பெரும் விருட்சமாக வளர வைக்க வேண்டிய பொறுப்பு சமூகத்தின் நலன் விரும்பிகள் அனைவரையும் சார்ந்ததாகும். அறவிழுமியங்களை மதித்து வாழ வேண்டும் என்ற சிந்தனை சிறிய வயதிலே தோற்றம் பெற்று விட்டால் வாழ்நாள் முழுவதும் அது நிலைத்து நிற்கும். திசையறி கருவியை எப்படிச் சுழற்றிப் போட்டு விட்டாலும் அது வடக்குத் திசையையே காட்டுவது போல சிறிய வயதிலே மனதில் பதியும் நல்ல சிந்தனைகள் வாழ்வு முழுவதும் நெறி பிசகாமல் வாழ்வதற்குத் துணையாக இருக்கும். எந்த நாட்டிற்குச் சென்றாலும், எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் தடம் புரளாது வாழ்க்கைத் தேரை ஓட்ட முடியும். "கசடறக் கற்க" "கற்றபடி நிற்க" என்பதை

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

எனச் செந்நாப் போதரும் தனது பொய்யா மொழியில் கூறியுள்ளார். இதனை டாக்டர் இலக்குவனார் சூத்திர வடிவில் "கல், நில்" எனக் கூறியுள்ளார். தனி மனித வாழ்வில் ஒழுக்கத்தைப் பேணாதவன் பட்டங்கள்

பல பெற்ற கல்விமானாக இருந்தாலும் உயர் பதவி வகிப் பவனாகக் காணப்பட்டாலும், நிறைந்த செல்வ வளம் உடைய வனாகத் திகழ்ந்தாலும் அவனால் எதுவித பயனும் இல்லை. அவர்களுடைய அறிவும், பதவியும், பணமும் நெறி பிசகிய நடத்தை உள்ளவர்களுக்கும் நாணயம் தவறியவர்களுக்கும் சமூகச் சீரழிவுகளுக்கு காரண மாக இருப்பவர்களுக்கும் மட்டுமே உதவியாக இருக்கும்.

"குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுமாறே"


என்ற திருமந்திர வாக்கிற்கு அமைய உதவியைப் பெற்றவரும். அதனைச் செய்தவரும் ஒன்று கூடிப் பாழ் நரகப் படுகுழியில் தான் வீழ்ந்து கிடப்பார்கள். "அறிவு வேறு ஒழுக்கம் வேறு" என்று சிலர் பிரித்துப் பார்க்கி றார்கள். அவன் நல்ல அறிவாளி ஆனால் ஒழுக்கம் கெட்டவனாக இருக்கிறானே என்கிறார்கள். நல்ல அறிவுள்ளவன் ஒழுக்கமற்ற வனாக இருக்கவே முடியாது. ஒழுக்கமற்றவனிடம் காணப் படும் கல்வி நச்சு மரத்திலே பழுத்த பழத்திற்கு ஒப்பானதாகும். இதனால் தான் சோக்கிரடீஸ் "நல்லறிவே நல் ஒழுக்கம்" என்று கூறியுள்ளார். மனித விழுமியங் களையும் மானிட நேயத்தையும் மாணவனிடம் கல்வி உருவாக் குதல் வேண்டும். மிருக இயல்புகள் மனிதரிடம் வளர்ச்சி அடையாமல் இருப்பதற்குத் தடுப்பு அரணாகக் கல்வி அமைதல் வேண்டும்.

## கல்விமான்கள் – உதாரண புருஷர்கள்

கல்வி அறிவினைப் பெற்ற ஒருவர் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களைப் பேணுபவராக இருப்பார் என்ற நம்பிக்கை நமது சமுதாயத்தில் தொன்று தொட்டு நிலவி வருகிறது. படித்தவன் என்றால் அவன் பண்புள்ளவன் என்றே நமது மக்களில் பலரும் கருதினார்கள். கல்வி கற்றவர்களின் நாளாந்த செயற்பாடுகளில் நடத்தைக் கோலங்களில் பல்வேறு மாற்றங்கள் காணப்பட்டன. அற விழுமியங்களைப் பேணி வாழ்தல் அவசியம் என்பதைக் கல்வி கற்றவர்கள் உணர்ந்தி ருந்தார்கள். கல்வி அறிவைப் பெற்றவர்கள் தான் வாழும் சமூகத்திற்கு வழிகாட்டக் கூடிய முன் மாதிரியான நடத்தை களைக் கொண்டிருந்தார்கள். உதாரண புருஷர்களாகத் திகழ்ந் தார்கள். சமுதாய நிறுவனங் களுக்குத் தலைமை தாங்கி மக்களைச் சரியாக வழி நடாத்தினார்கள்.

## மாணவர்களின் நெறி பிறழ்வு நடத்தைக்கான காரணங்கள்

நமது சமூகத்தில் வாழும் மாணவர்கள் இளைஞர்களின் நடத்தைக் கோலங்களில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. நெறி பிறழ்வான செயற்பாடுகளுக்குப் பலர் ஆளாகிவிடுகின்றார்கள். அற விழுமியங்களைப் பேணி வாழ்வதில் அக்கறை



கொள்வதில்லை. பெற்றோர், ஆசிரியர், குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களை மதிப்பதில்லை. மதுபானம், சிகரெட், போதை வஸ்து என்பவற்றுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். பாலியல் பிரச்சினைகளுக்கும் உள்ளாகி விடுகிறார்கள். இளம் வயது ஆண்களும் பெண்களும் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக காதல் கொள்கிறார்கள். பெரும்பாலான குடும்பங்களில் தாய் தந்தையர் இருவரும் தொழிலுக்குச் சென்று விடுகிறார்கள். தனியாக வீட்டில் இருக்கும் பிள்ளைகளைப் பெரும்பாலும் பெண் பிள்ளைகளைக் காமப்பசி கொண்ட கயவர்கள் தங்கள் இச்சைக்கு ஆளாக்கி விடுகிறார்கள். மதுபோதையிலே நிதானம் இழந்து புத்தி கெட்டுத் தடுமாறி கொலை, களவு போன்ற செயல்களிலும் சிலர் ஈடுபடுகின்றார்கள். சந்திச் சண்டித்தனங்கள், கோஷ்டிச் சண்டைகள் எல்லாம் அதிகரித்து விட்டன. எங்களுடைய பிள்ளைகள் இவ்வாறு நெறிதவறிய நடத்தைப் பிறழ்வுகளுக்கு ஆட்பட்டதற்கான காரணம் யாது? என்பதைச் சமூக நலன் விரும்பிகள் ஆகிய அனைவரும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். இந்தப் பிள்ளைகள் ஒருவரும் ஆகாயத்தில், விமானத்திலிருந்து பாரசூட்டில் குதிக்கவில்லை. இவர்கள் அனைவரும் நமது சூழலில் வாழும் பெற்றோர் பெற்றெடுத்த பிள்ளைகள். நமது பிரதேசத்தில் இருக்கும் பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள். இவர்கள் ஏன் இப்படியான நெறி பிறழ்வு நடத்தைகளுக்கு உள்ளானார்கள் என்பதை சமுதாய நலன் விரும்பிகள் அனைவரும் உணர்ந்து அதற்கான தீர்வினைக் காண முயற்சிசெய்தல் வேண்டும். குடும்பம், அயல், பாடசாலை, சகபாடிகள், சமய சமூக நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் மாணவர்கள். இளைஞர்களின் தவறான செயற்பாடுகளுக்குக் காரணம் என்பதை அனைவரும் இதய சுத்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## I – குடும்பம்

இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற சினிமாப் பாடலும் கூறுகிறது. பாலூட்டிச் சீராட்டிக் கண்ணை இமை காப்பது போலத் தான் பெற்ற பிள்ளைகளை வளர்த்து எடுக்கும் தாயானவள் அற விழுமியங்களைப் பேணி வாழ்தலின் அவசியத்தையும் பிள்ளையின் அடி மனத்தில் பதியச் செய்தல் வேண்டும். தான் பெற்ற பிள்ளை சான்றோன் எனப் பலராலும் பாராட்டப் படுவதையே பெற்ற தாய் பெரிதும் விரும்புவாள் என்பதை,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்றே தெய்வப் புலவர் வள்ளுவரின் திருக்குறளும் செப்புகிறது. குழந்தைகளை நல்ல பண்புள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது. ஒரு குழந்தையைப் பெற்றுத் தருவது தாயின் கடமை என்றால் அவனைச் சான்றோனாக வாழ வைப்பது தந்தையின் கடமை என்பதை,

"ஈன்ற புறந்தருதல் என்தலைக்
கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக்
கடனே"

எனப் புறநானூறு கூறுகிறது. தான் பெற்ற பிள்ளையை அறிவாளியாகக் கற்றறிந்த சபையிலே முந்தியிருக்கச் செய்வது தந்தையின் கடமை என்பதை,

"தந்தை மகற்காற்றும் நன்றி
அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

எனச் செந்நாப் போதராகிய வள்ளுவரும் திருக்குறளில் கூறுகின்றார்.

குழந்தைகளின் மொழி உருவாக்கம் வீட்டிலே தான் ஆரம்பிக்கிறது. பெற்றோர் பேசும் வாக்கியங்கள் அனைத்தையும் குழந்தைகள் ஆப்த வாக்கியங்களாகவே எடுத்துக் கொள்கிறார்கள். சில குடும்பங்களில் தந்தையானவர் மதுபோதையில் வந்து பல தீய சொற்களை உளறித் தள்ளுவார். மனதில் வேதனைகள் ஏற்பட்டால் தாயும் பொல்லாத வார்த்தைகளைத் தன் வாயால் பேசுவார். வெள்ளை மனம் படைத்த கள்ளம் கபடமற்ற குழந்தைகள் பெற்றோர் பேசும் வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டே வீட்டில் தாய்மொழியினைக் கற்கிறார்கள். நடத்தைப் பண்புகளைப் பெற்றோரிடமிருந்தும் குடும்பத்தில் தங்கி வாழ்வோரிடமிருந்தும் குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். வெகுஜனத் தொடர்பு சாதனங்களால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. இன்று வீடுகள் பல சினிமாத் தியேட்டராகவே மாறியுள்ளன. பல்வேறு

தொலைக்காட்சி நிலையங்களில் இருந்து நாள்தோறும் நாடகங்கள், சினிமாப்படங்கள் என்பன காண்பிக்கப்படுகின்றன. தனி அறைகளில் நடைபெறும் லீலைகள் பல பகிரங்கமாகக் காட்சிப்படுத்தப் படுகின்றன. கொலை, களவு, மாமி மருமகளிடம் ஏற்படும் முரண்பாடுகள் போன்ற பல்வேறு காட்சிகளைத் தொலைக் காட்சியில் பார்க்கும் சிறுவர்களின் மனம் ஆரோக்கியமற்ற நெறிதவறிய உறைவிடமாகி விடுகிறது. பல பிள்ளைகளின் நெறி தவறிய நடத்தைகளுக்கு குடும்பச் சூழலே மூல காரணமாக அமைந்து விடுகிறது.

## II – அயல்

குழந்தைகள் வாழும் அயலும் அவர்களின் உருவாக்கத்தில் முக்கியஇடம் வகிக்கிறது. பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்ட அயல் அமைந்து விட்டால் அவர்களின் வளர்ச்சி சீரானதாக இருக்கும். குழந்தைகளைத் தூசிக்காது, வெறுப்புக் கொள்ளாது அரவணைத்து நெறிப்படுத்துபவர்களாக அயலவர்கள் இருக்க வேண்டும். அயலில் உள்ள குழந்தைகள் அனைவரும் ஐக்கியமாக ஒன்று சேர்ந்து வாழும் சூழல் உருவாக்கப்படல் வேண்டும்.

மாணவப் பருவத்திலே கல்வியை ஒழுங்காகப் பெறாத குடும்பத்தின் மூத்த பிள்ளை, எரிகின்ற நெருப்பு போலப் பொறாமை பிடித்த அயலவன், குடும்பத்தின் கட்டுக் கோப்பை அழிப்பவளாகிய மனைவி ஆகிய முத்திறத்தாரும் அட்டமத்துச் சனிபோல மாறிவிடுவார்கள் என்பதைக் காலையிலே பல்கலை நூல் கல்லாத் தலைமகனும் ஆலையெரி போன்ற அயலவனும் மனைக் கட்டழிக்கும் மனையாளும் – இம் மூன்றும் தனக்குஅட்டமத்துச் சனி” என ஔவையாரின் பாடல் குறிப்பிடுகிறது. சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள், நெறிபிறழ்வு நடத்தை உள்ளவர்கள் அயலவர்களாக இருந்தால் அதன் தாக்கம் வீட்டில் வளரும் பிள்ளைகளையும் பாதிக்கும்.

## III – சமய சமூக நிறுவனங்கள்

எந்த ஒரு மனிதனும் தான் வாழும் சமூகத்திலிருந்து பிரிந்து வாழமுடியாது. மாணவனைத் தான் வாழும் சமூகத்தோடு பொருத்தப்பாடு அடையச் செய்ய வைப்பது கல்வியின் மிக முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். பல்வேறு பட்டங்களைப் பெற்றிருந்தாலும் பல நூல்களைக் கற்றிருந்தாலும் தான் வாழும் உலகத் தோடு பொருந்த ஒழுகுதலைக்கல்லாதவர்கள் அறிவில்லாதவர்கள்

ஆகவே மாறிவிடு வார்கள் என்பதனை,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்
பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்"

எனத் திருக்குறளும் கூறுகிறது. ஆலயங்கள், சமய நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொதுசன நூல் நிலையங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகிய சமுதாய நிறுவனங்கள் அனைத்தும் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் பெரும் பங்காற்று கின்றன. குழுச் செயற்பாடுகள் வளர்ச்சியில் பெரும் பங்காற்று கின்றன. குழுச் செயற்பாடுகள், சகிப்புத் தன்மை, தலைமை வகிக்கும் ஆற்றல், சமூகப் பொறுப்புணர்வு ஆகியன உருவாகுவதற்கும் சமுதாய நிறுவனங்களே வழிகாட்டு கின்றன. ஆலயங்களில் சடங்குகள் கிரியைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் ஆன் மீக போதனைகளுக்கு கொடுக்கப் படுவதில்லை. உடலை ஆரோக் கியமாக வைத்திருப்பதற்கு நாளாந்தம் உடற்பயிற்சியில் ஈடுபடுதல் அவசியமாகும். மாலை முழுதும் விளையாட்டு என்றே பாரதியும் தனது பாடலில் கூறியுள்ளார். நூல் நிலையங்கள் மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டு வதற்கு வழி செய்தல் வேண்டும்.

**IV – சகபாடிகள்**

பாடசாலை மாணவர் களின் நடத்தைக் கோலங்கள் மாற்றமடைவதில் சகபாடிகளின் செல்வாக்கு அதிகமாக உள்ளது. சிறுவயதில் அதிகமாக ஒன்று சேர்ந்து விளையாடுவதற்காகவே



சகபாடிகள் இணைந்து கொள்கி றார்கள். ஆனால் குமரப் பருவத்தில் ஏற்படும் தோழமை பலவிதமான குழு ஊக்கங் களுக்கும் வழிவகுக்கிறது. தனியாகச் செய்யத் துணியாத செயற்பாடுகளைக் குழுவாக இணைந்தால் குமரப் பருவத் தினர் செய்து விடுவார்கள். இவர்களிடம் ஆக்க பூர்வமான செயல்களைச் செய்யும் ஆற்றலும் உண்டு. அழிவு ரீதியான செயல் களைச் செய்யும் தன்மையும் உண்டு. மாணவர்களின் உந்துதல்களையும், செயல் வேகத்தினையும் தவறான பாதையில் வழி நடாத்த முனையும் சமூக விரோதக் கும்பல்களிடமிருந்து அவர் களைப் பாதுகாக்க வேண்டியது

சமூக நலன் விரும்பிகள் அனைவரதும் கடமையாகும்.

**V – பாடசாலைகள்**

ஒரு மாணவனுடைய உருவாக்கத்தில் குடும்பமும் பாடசாலையுமே முக்கிய இடம் பெறுகின்றன. மாணவனுக்குப் பாடசாலை இரண்டாவது வீடாக அமைகிறது. பாடசாலைகள் ஒரு சமூகத்தின் இதயம் போன்றவை. பண்பாட்டு விழுமியங்களை ஒரு தலைமுறையினரிடமிருந்து தொடர்ந்து வரும் தலைமுறையினருக்குக் கடத்திச் செல்வதற்கு குடும்பத்திலும் பார்க்க பாடசாலைகளே கூடிய செல்வாக்குச் செலுத்துவதாகக் கல்விச் சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். எதிர்காலப் பிரஜைகளைத் தயாரிக்கும் கலைத்திட்டத்துடன் தொழிற்படுகின்றன.

நமது பண்பாட்டில் பாடசாலைகள், ஆலயங்கள் போலவே போற்றப்பட்டன. இதனால்தான் பாடசாலைகள் வித்தியாலயங்கள் என அழைக்கப்பட்டன. பாடசாலைகள் மாணவனின் அறிவை வளர்க்கும் இடமாக மட்டும் இல்லாமல் அவனின் ஆளுமை வளர்ச்சிக்குத் துணைபுரியும் இடங்களாகவும் மிளிர வேண்டும்.

உயிருள்ள ஜீவன்களுடன் உறவாடும் உன்னதமான தொழிலைச் செய்யும் ஆசிரியர்கள் தங்கள் தொழிலின் புனிதத்துவத்தை உணர்ந்திருக்க வேண்டும். சுய ஒழுக்கம் நிறைந்த மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. தனிமனித ஒழுக்கத்தை வெறும் வார்த்தைகளால் மட்டும் கற்பித்துவிட முடியாது. வாழ்ந்து காட்டுபவர் தான் வழிநடாத்த முடியும். ஆசிரியர் முன் மாதிரியானவராக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## மலர்கள்

வண்ண வண்ண மலர்கள்
வடிவு நிறைந்த மலர்கள்
மனம் மகிழ் மலர்கள்
மணம் வீசும் மலர்கள்

சின்னச் சின்ன மலர்கள்
சித்திரம் போல் மலர்கள்
காலை மலரும் மலர்கள்
களங்க மில்லா மலர்கள்

மென்மை இதழ் மலர்கள்
மேன்மையான மலர்கள்
அழகு நிறை மலர்கள்
அருமை யான மலர்கள்

தேன் கொடுக்கும் மலர்கள்
தெவிட்டிடாத மலர்கள்
பட்டாம் பூச்சி அமர்ந்தால்
பட்ட படக்கும் மலர்கள்

நிறங்கள் பலவும் உண்டு
நிஜமாய் அழகும் உண்டு
ஒருநாள் உலகை ஆளும்
உலக அழகி அவளே

செல்வி. ஆரபி நவதீசன்
பட்டர்பிளை சர்வதேச
பாடசாலை, சங்கானை

# தேடல் இழந்த சமுதாய வெளி ஒன்றில் நின்றபடி......



**புலோலியூர் வேல்நந்தகுமார்**
**(ஆசிரியர்)**

தேடல் இழந்த சமுதாய வெளி ஒன்றில் நின்றபடி வாசிப்பு மாதம் பற்றி எண்ணிப் பார்க்கிறேன். எதை எழுத புரியவில்லை, என்றாலும் தேடிய மனம் சும்மா இருக்கமுடியாமல் எதையோ எழுதச் சொல்கிறது. அதனால், இன்று எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, வளர்ந்து கொண்டிருக்கின்ற தலைமுறையின் தேடல் கோலங்களை அவதானிக்கின்ற



பொழுது அறிவியல் யுகம் தந்த சுதந்திரம் குறித்ததான பயம் மிஞ்சுகிறது. இவர்கள் வயதில் நாங்கள் எதைத் தேடினோம். ஆனால் இவர்கள் பிஞ்சிலே பழுத்துப் போகின்ற நெஞ்சு களாய் போனார். பாவம், அந்த நாளில் நான் சிறுவனாய் இருந்த பருவத்தில் தினமும் பத்திரிகை படிக்காமல் தூங்காத நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். சிறுவயதில் அம்புலிமாமா, பாலமித்திரா, கோகுலம், அருச்சுனா எனத் தொடங்கிய எங்கள் வாசிப்பு அனுபவத்தில் பின்னர் ராணி காமிக்ஸ்சு களின் ஆதிக்கம், அதன் பின்னரோ தமிழ்வாணனின் துப்பறியும் நாவல்கள், பின்னர் சிவகாமியின் சபதம், பொன்னி யின் செல்வன், பார்த்திபன் கனவு என நீண்டு, கரித்துண்டு, வாடாமலர் எனத் திசைமாறி பின் வீரகேசரிப் பிரசுரங்கள், ஈழத்து நாவல், சிறுகதைகள், சஞ்சிகைகள் பரிச்சயப்படுத்திக் கொண்ட வாசிப்பின் நாட்களை இப்போதும் எண்ணிப் பார்க் கிறேன். எத்தனை சுகமான அனுபவமாய் நெஞ்சுக்குள் இன்னும் இன்னும் ஊறும் ஞாபகங்களாய் நான் கற்ற ஹாட்லிக்கல்லூரி நூலகம், என் ஊர் தந்த நாவலர் சனசமூக நிலையம், கதிரைவேற்பிள்ளை

சனசமூகநிலையம், பாரதிதாசன் நூலகம் என நீளும் அந்த நினைவுகள் அற்புதமானவை. இந்த அழியா நினைவுகளோடு சமகால வாசிப்புச்சூழலை எண்ணிப் பார்க்கிறேன், வேதனையே மிஞ்சுகிறது.

அறிவுசார், பண்புசார் வாசிப்புத் தேடலை இழந்து நிற்கிறது எங்கள் சமுதாயம். அன்று நூல் விநியோகம், இரவல் பகுதி என வழங்கி வந்த பல நூலகங்களில் இன்று அந்த சேவை இல்லை. கேட்டால் யாரும் பெற்று வாசிப்பதற்கு முன்வருகிறார்கள் இல்லை என்பதே விடையாகிறது. அந்தளவிற்கு எங்கள் வாசிப்புச் சூழல் வறண்டு போய்க் கொண்டிருக்கிறது.

இன்றைய நவீன தேடல் மிக்க உலகிலே வாசிப்பின் அர்த்தம்கூட மாறுபட்டிருக்கிறது. ஒரு காலத்தில் புத்தகங்களே வாசிப்பின் பிரதானமான மூலாதாரங்களாய் விளங்கின. இன்று பத்திரிகைகள், கணனி, இணையம், தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் நிகழ்வதே எனக் கருதப்படுகிறது. ஆனால் இந்தத் தேடற் பொறிகளுக்கூடாக பெற்றுக் கொள்ளப்படும் வாசிப்பு அனுபவங்களில் ஆரோக்கியமானவையா, முழுமையானவையா, ஆழமானவையா என்பது கேள்விக்குரியதாகவே விளங்குகிறது. பெரும்பாலும் இவற்றினூடாக இளவயதினர் பெற்றுக் கொள்ளும் தேடல் அனுபவம் என்பது வக்கிரமானதாக, ஆபாசமானதாகவே விளங்குகிறது.

மறுவளமாக எங்கள் சூழலில் நூல் வெளியீடுகளுக்கு மட்டும் பஞ்சமில்லை. வாரம் ஒரு நூலாவது வெளிவருகிறது. ஆனால் அந்த நூலைப் பெறுபவர்கள் அனைவரும் அதை முழுமையாக வாசிக்கிறார்களா என்பது கேள்விக்குறியே. அந்த வெளியீட்டுக்கு எத்தனைபேர் வருகிறார்கள் என்பதும் கவலைக்குரியது. சில இடங்களில் அதுவே ஒரு வியாபாரமாகவும் மாறி வருவதும் வாசிப்பின் உண்மையான சுவாசிப்பை படைப்பின் ஆத்மதாகத்தை அர்த்தமில்லாததாக்கி விடுகிறது.

எங்கள் இளவயதினர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பதற்காக நிர்ப்பந்திக்கப்பட்டு வாசிக்கச் செய்யப்படுகிறார்கள். அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட விடயங்களே. வாசிப்பு என்பது மொழித்திறன் விருத்தியில் ஒரு தேர்ச்சியாக அமைகின்றபோதும் இன்றைய மாணவ மையக் கல்வியில் தமிழ், ஆங்கில வகுப்புக்களில் பெரும்பாலும் அது மாணவரால் முழுமையாக நிகழ்த்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை.

பின்னர் க.பொ.த. சாதாரண தரம் வரை கூட பரீட்சை நோக்குடைய கல்வியால் மாணவர்கள் தமக்கு வழங்கப் படும் இலவச பாடநூல்களின் விடய உள்ளடக்கங்களைக் கூட முழுமையாக வாசிப்பதில்லை. க.பொ.த. உயர்தர மாணவர்கள் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களது வினா – விடை சார் பாடக்குறிப்புக்களையே மந்திரங்களாகக் கருதுவதால் மேலதிக வாசிப்பு நூல்கள் எவற்றையும் அவர்கள் வாசித்து தேடுவதில்லை. அதற்கான தேவையும் முதன்மைப் படுத்தப்படுவதில்லை. இதனால் பாடசாலை நூலகங்களை உயர்தர வகுப்பு மாணவர்கள் பயன்படுத்துவதும் குறைவாக உள்ளது. இத்தகையதொரு தலைமுறை பல்கலைக் கழகம் சென்றும் அங்கும் மிகப்பெரும் நூல்களை சரியான முறையில் பயன்படுத்துவதில்லை. பரீட்சைக் காலங்களில் மட்டும் அதற்குத் தேவையான விடயங்களை நோக்கமாகக் கொண்டே தமது வாசிப்பை நிகழ்த்துகின்றனர். இதனால் பல்லாயிரக் கணக்கான துறைகள் புதிய புதிய நூல்கள், பழம் நூல்கள் பலரால் வாசிக்கப் படாமலே வாழ்கின்றன. மற்றொரு புறம் பன்மொழி ஆற்றல் என்பது இவ் வாசிப்புத் தேடலுக்குத் தடையாக உள்ள அதேவேளை, ஆழமான வாசிப்பு அனுபவத்திற்கு உரிய மரியாதை, மதிப்பு வழங்கப் படாமையும் இதற்குக் காரணமாகிறது. நேரமில்லை என்பது வாசிப்பதைக் குறித்து பலரும் சொல்லும் ஒரு விடயம். இதனை முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாது. தொடர் நாடகம், சினி–மா போன்ற கவர்ச்சிகரமான காட்சி ஊடகங்களில் கழிக்கும் நேரத்தைக் கணக்கிட்டால் இது முழுப் பொய் என்பது புரியும்.



இன்று எமது தேடலும் ஆர்வமும் எதன் மீது குவிக்கப் பட்டுள்ளது என்று நோக்கினால் புதிதாய் வெளிவரும் திரைப் படங்கள், இசைக்குழுக்கள், மித்திரன் சினிமா, தினமுரசு சினிமா, பொதுவாக சினிமாப் பக்கங்கள், ஆபாச இணையத் தளங்கள், பேஸ்புக் அரட்டைகள், *SMS*கள், ரமணிச்சந்திரனின் நாவல்கள், புதிய புதிய வடிவங் களில் வரும் கான்போன்கள், மெமரிக்காட்டுகள் நிரப்பல்,

மின்...... அட்டைகள் என நீளும் ஒரு பெரிய பட்டியலையே வழங்கலாம். இதன் விளைவாக மிகப்பெரிய அறிவுத்தேட்டமும் பண்புத் தேட்டமும் கொண்ட எமது சமுதாயம் மெல்ல மெல்ல அதனை இழந்து வருவதையே அண்மைய சமூகக் காட்சிகள், அதிகரித்துவரும் வக்கிரங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதன் விளைவாக மனிதாபி மானம், ஒழுக்கம், அமைதி, நிம்மதி போன்ற சில விடயங் களை சமூகத்தில் தேடிப் பார்க்க வேண்டியிருக்கிறது. உண்மையான தேடலை இழந்து நிற்கும் எமது சமுதாயத்தை இப்படியே குற்றம் சாட்டிவிட்டு தப்பி ஓடிவிட முடியுமா? நாமும் இத்தகைய தொரு சமூகத்திற்குள்ளேயே வாழ்கிறோம். எல்லாமே பணத் திற்காய் போன எமது சமூகத்தின் போலித்தேடல் வாழ்வில் இருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பலருக்குண்டு. ஆனால் நம்மில் பலர் அதனை சரியாகச் செய்யாமல் வெறும் குற்றம் சாட்டுபவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது தவறானது. என்னைப் போல் எனது பிள்ளை இல்லையே என்று கவலைப்படுகின்ற அதே வேளை என்னைப் போல என் பிள்ளை இருக்கமுடியாது என்ற நிஜத்தையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் இன்றைய தலைமுறையிடம் உண்மையான தேடல் வாசிப்பு இல்லை என்று சொல்லும் நம்மில் எத்தனை பேர் அவர்களுக்கான உண்மை யான முன்மாதிரிகளாக இருக்கி றோம் என்பதையும் சிந்திக்க வேண்டும். எனவே பெற்றோராய், ஆசிரியர்களாய், சகபாடிகளாய், படைப்பாளியாய் அவர்களது தேடல்களைச் சரியான திசையில் வழிப்படுத்தி, தேடல் இழந்து நிற்கும் எமது சமுதாயத்தை வெறும் பொருட்தேடலே வாழ்வு என்ற மாயைக்குள் அகப்பட்டி ருக்கும் எமது சமூகத்தை மீட்டெடுக்க பொறுப்பும் கடமை யும் அனைவருக்கும் உரியது என்பதை உணர்ந்து செயற்படுவது அவசியமாகும். இல்லையேல் எமது வாழ்வும் படைப்பும் வாசிக்கப்படாமல் படைப்பாளி யுடன் சேர்ந்து பிரதியும் செத்து விட்டது என்ற நிலையே மிஞ்சும். இறுதியில் தேடுங்கள் கண்டடை வீர்கள் என்பது விஞ்ஞானம் மட்டுமல்ல மெய்ஞ்ஞான முந்தான். வாசிப்பு நதி இன்னும் முழுதாய் வற்றிவிடவில்லை. அருவியாய் வாருங்கள் வளம் சேர்க்க.!



# எழுத்தாளர் கே.எஸ். ஆனந்தனுடனான நேர்காணல்

ஈழத்தின் இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர் கே.எஸ்.ஆனந்தன். எழுத்துத் துறையில் குறிப்பாகச் சிறுகதை, நாவல் போன்ற இலக்கியத்துறைகளிற் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியவர். யாழ்ப்பாணம், இணுவில் என்ற விவசாயக் கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அவர் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 23 நாவல்களையும் இலக்கிய உலகிற்கு அளித்திருக்கிறார். இன்னும் எழுத்துத்துறையில் பல புதுமைகள் செய்ய வேண்டும் என வாஞ்சை கொள்ளும் இவர் தற்போதைய ஆக்க இலக்கியப் படைப்புக்களின் வரவுகளும் வாசகர்களும் குறைவடைந்து செல்வதாக பிரலாபப்படுவதை அவருடனான உரையாடல்களிலிருந்து தெட்டத் தெளிவாக உணர முடிந்தது. முதுமையிலும் புதுமைகள் படைக்க வேண்டும் என எண்ணும் அவர் தமிழருவி சஞ்சிகைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியை வாசகர்களுக்காகத் தருவதுடன் அவரது படைப்பாக்கச் செயற்பாடுகள் நீண்டகாலம் தொடரவும் வாழ்த்துகின்றோம்.

நேர்காணல்:
S. நதிபரன்

கேள்வி : உங்களது இளமைக்காலக் கல்வி மற்றும் குடும்பப் பின்னணி பற்றிச் சுருக்கமாக கூறுங்கள்?

பதில் : எனது சொந்த ஊர் இணுவில். எனது தந்தையார் விவசாயத்

தொழில் செய்பவர் என்பதனால் எனது குடும்பம் விவசாயப் பின்னணியைக் கொண்டது. இப்போதும் நான் தந்தையின் தொழிலான விவசாயத் தொழிலையே ஆர்வமுடன் செய்து வருகின்றேன். எனது இயற் பெயர் கார்த்திகேசு சச்சிதானந்தன். நான் ஆரம்பக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும், உயர்கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்று, பட்டப்படிப்பை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றேன். கலைத்துறையில் கல்விகற்கும் போதுதான் எழுத்துத் துறையில் அடியெடுத்து வைக்கும் வாய்ப்புக் கிட்டியது. நான் தெரிவுசெய்த துறை கலைப்பிரிவு என்றபடியாலும் தமிழ்மொழியைப் பிரதான பாடமாகக் கொண்டதாலும் எழுத்துத்துறையில் எனது ஆளுமையைப் பதிக்க வேண்டும் என்ற உந்துதல் பிறந்தது. ஆய்வு, ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும் என்ற அவா அடிமனதில் விரைந் தெழுந்தமையின் காரணமாகவும் யாழ்ப்பாணக் கல்லூரியில் எனக்குக் கல்வி போதித்த குருமார்களால் கொடுத்த ஆழமான ஊக்கம் காரணமாகவும் எழுத்து லகில் பிரவேசிக்கும் எனது இலட்சியம் பிரகாசமானது.

கேள்வி : உங்களது எழுத்துலக பிரவேசம் பற்றிய விளக்கம்?

பதில் : யாழ்ப்பாணக் கல்லூரியில் மேற்படிப்புப் படிக்கும் காலத்தில் அப்போது எழுத்தாளர்களுக்குரிய அங்கீகாரம் வழங்கும் ஊடகமாக பத்திரிகையே விளங்கியது. அக்காலத்தில் ஒரு சில பத்திரிகைகளே வெளிவந்த காலம். ஆனால், ஏராளமான எழுத்தாளர்கள் தமக்கு களம் கிடைக்காதா என்று ஏங்கி அலைந்த நேரம். இப்போது என்றால் அதிகமான பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி வெளிவந்து கொண்டிருக்கும் நிலையிலும் எழுத்தாளர்களின் தொகை என்பது குறைவாகவே காணப்படுகிறது. குறிப்பாக சிறுகதை, நாவல் எழுதுவோர் தொகையானது மிகக் குறைவாக காணப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இவ் இலக்கிய வடிவங்களை நுகரும் வாசகர்களின் தொகையிலும் பாரிய வீழ்ச்சி நிலை காணப்படுகிறது. ஆனால் அன்றைய நிலை அப்படியானதல்ல. இலக்கிய லயம் நிறைந்த இலக்கிய

ரசனை மிகுந்த காலப்பகுதி அது. இலக்கியத் தேடல் என்பது வற்றாத அருவியாகப் பிரவாகித்துக் கொண்டிருந்தது. அத்தகைய இலக்கிய தாகம் நிறைந்தவர்களுக்கு தாகம் தணிப்பதற்காக ஏராளமான இலக்கிய கர்த்தாக்களின் உற்பவம் என்பது காலத்தின் தேவையாகவே காணப்பட்டது. மேலும் ஆக்க இலக்கியப் படைப்பாளர்கள் சமூகத்தில் நன்னிலையில் வைத்து நோக்கப்பட்டதை எனது எழுத்துலகப் பிரவேசம் 1962இல் நிகழ்ந்தது. உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளாலும் உன்னதப்படுத்தப்படிருக்கின்ற புனித ஜீவனை, தாயை மேன்மைப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினாலும் எனது எழுத்துலகப் பணிக்கு முத்தாய்ப்பாகவும் ஒரு சிறுகதை எழுத வேண்டும் என்ற உந்துதல் என்மனத்தில் உதித்தது. அதற்கு செயல்வடிவம் கொடுத்தேன். எனது முதற்பிரவேசமாக 1962 இல் வீரகேசரி பத்திரிகையில் "அம்மா வேண்டும்" என்ற சிறுகதை அமைந்தது. இச்சிறுகதை எனது வாழ்விலும் பல திருப்பங்களை ஏற்படுத்தியது. ஏராளமான வாசகர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்த கதையாகவும் அமைந்தது.

இதனைத் தொடர்ந்து 1974 வரையான காலப்பகுதியில் ஏராளமான சிறுகதை, நாவல்களைப் படைக்கும் வாய்ப்பும் கிட்டியது. 1962 – 1974 வரையான 12 வருட காலப்பகுதி எனது வாழ்வின் பொற்காலம் என்றே கூறவேண்டும். இக் காலப்பகுதியில் 60க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், 18 வரையான நாவல்களையும் வாசகர்களுக்கு அளித்திருக்கிறேன் என்பதை நினைக்கும் போது இறும்பூது எய்துகிறேன். குறிப்பாகச் சொல்லப்போனால் நான் எழுதிய சிறுநூல்களுள் கோழைகள், தீக்குள் விரலை வைத்தால், காகித ஓடம், கர்ப்பக்கிரகம், ராதையின் நெஞ்சம், பூசைக்காக வாழும் பூவை, காலங்கள் மாறும், பனிமலர் போன்ற நாவல்களும் காத்திரமானவையாக விளங்குகின்றன. அதுமாத்திரமன்றி 1967ல் சிந்தாமணி பத்திரிகையில் வெளிவந்த இதயமலர் என்ற நவீனம் எனக்கென தனியான இடத்தைத் தேடித்தந்தது என்று கூறலாம். சிறுகதை, நாவல் என்ற பிரதான இலக்கிய

வடிவிங்களில் எனது ஆழமான ஆளுமையை செலுத்தி னாலும் நாடகம், ஆய்வு, விமர்சனம் போன்ற துறைகளிலும் ஆர்வத்தை செலுத்தினேன். இவற்றை விளக்கமாக இவ்விடத்தில் கூறத் தேவையில்லை எனக் கருதுகிறேன். ஏனெனில் எனது பிரதானத்துவமான ஆர்வங்கள், ஆசைகள் எல்லாம் சிறுகதை, நாவல்களின் மீதே குவிந்திருந்தன.

நான் எழுதிய சிறுகதைகள், நாவல்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்கியமையினால் பலரது விருப்பங்களுக்கும் வேண்டுகோளுக்கும் இணங்க சிறுவர் இலக்கியங்கள் படைக்கும் விருப்பம் மனதில் முளை விட்டது. சிறுவர்களுக்கான கதை எழுதுவது என்பது சிரமமான விடயம். எழுத்தாளன் தனது வித்துவத் திறமையை மறந்து சிறுவர்களின் மனநிலைக்கேற்ப அவர்களின் வாசிப்புத்திறனைத் தூண்டி மேலும் பலவற்றைத் தேடி வாசிக்கும் ஆர்வத்தை வளர்க்கும் திறன் படைத்தவையாக விளங்க வேண்டும். சிறுவர்களது மனம் யதார்த்தத்தை விட அதீத கற்பனை வளம் கொண்ட கதைகளையே விரும்புமாதலால் ரசனைமிகு மந்திர தந்திர மர்மங்கள் செறிந்ததாக கதாபாத்திரங் களில் மனம் ஒன்றியதாகவும் அமைந்து உரையாடல் மொழிநடையில் அவர்களுக்குப் பிடித்தமானதகவும் அமைந்திருக்க வேண்டும். மேற்சொன்ன அம்சங்களை உள்ளடங்கியதாக படைக்கப்பட்டது தான் இராவணன் கோட்டை என்ற சிறுவர் நாவல் ஆகும். இந்த நவீனத்திற்கு யாழ். இலக்கிய வட்டத்தில் பரிசும் கிடைத்தது. அதுமட்டுமன்றி மித்திரன் வார மலரில் 'மர்மயோகி' என்ற சிறுவர் நாவல் பல வாசகர்களின் பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. அக்காலப் பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த சிந்தாமணி சுதந்திரன், வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் தான் எனது முயற்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. இப்பத்திரிகைகள் இல்லை என்றால் எனது கற்பனைகள் முயற்சிகள் எல்லாம் வீண் போயிருக்கும்.

கேள்வி : நீங்கள் இலங்கையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் மாத்திரமன்றி தமிழக சஞ்சிகைகளிலும் எழுதியிருப்பதாக

கேள்விப்படுகின்றோம். அப்படியாயின் எந்தெந்த ஊடகங்கள் உங்கள் படைப்புக்களுக்கு களம் கொடுத்தன என்பது பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?

பதில் : ஆம். தமிழக பத்திரிகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவரவில்லை. ஆனால் தமிழகத்திலிருந்து வெளிவருகின்ற முன்னணி சஞ்சிகைகளான ஆனந்தவிகடன், கல்வி, கலைமகள், குமுதம் போன்ற சஞ்சிகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவந்தன. அதுமாத்திரமன்றி பத்திரிகைகளில் வெளிவந்த சில ஆக்கங்கள் தமிழகத்தின் முன்னணி வெளியீட்டகமான மணிமேகலை பிரசுரத்தினால் நூலுருப்பெற்று வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக 1987ல் வெளிவந்த எனது நாவலாகிய காலங்கள் மாறும், சந்திரிகை மற்றும் மர்மயோகி போன்ற பல நாவல்கள் மணிமேகலை பிரசுரத்தினால் நூல்வடிவில் அச்சேற்றம் செய்யப்பட்டமையானது எனது எழுத்துக்குக் கிடைத்த பெரும் அங்கீகாரமாகவே கருதுகிறேன்.

கேள்வி : உங்கள் எழுத்துலக வாழ்வை தீட்சண்யப்படுத்தியவர்கள் என்று எவர்களைக் கருதுகிறீர்கள்?

பதில் : எழுத்தாளன் என்பவன் தன்னிலை சார்ந்து தன் சமூகம் சார்ந்த பிரக்ஞையைப் பிரதிபலிப்பவன். அவனது திறமையை விமர்சிக்கச் செய்வதற்கு அவன் வாழும் சூழலமைவு குறிப்பாக பெரியோர்களின், குடும்பங்களின், அறிஞர்களின் ஆதரவுகள் என்பது மிக முக்கியமானவை. பல எழுத்தாளர்களின் எழுத்துக்கள் மக்கள் மத்தியில் சென்றடையாமைக்கு இத்தகைய பெரியவர்களின் ஆதரவின்மையும் ஒரு காரணமாகும். அந்த வகையில் எனது எழுத்துலக வாழ்விற்கு ஆதார புருஷர்களாக விளங்கியவர்களாக மூவரைக் குறிப்பிட முடியும். கலாநிதி க. குணராசா (செங்கையாழியன்), புலவர்மணி ம.பார்வதிநாதசிவம் மற்றும் வீரகேசரியின் அப்போதைய ஆசிரியராக இருந்த எஸ்.டி.சிவநாயகம் போன்றோர்களின் ஊக்கமும், ஆதரவும் இல்லாவிடின் நான் இந்தளவிற்கு வெற்றி பெற்று இருக்க முடியாது என்றே கருதுகிறேன். இவர்கள் மூவரும் எனது எழுத்துக்கு உரமூட்டியவர்கள், எழுத்துலக வழிகாட்டிகள் எனலாம்.

கேள்வி : ஒரு எழுத்தாளனுக்குரிய பண்புக்கூறுகள் குறித்தும் அவை இன்றைய எழுத்தாளர்களின் படைப்புக்களில் துலக்கம் பெறுகின்றனவா என்பது குறித்தும் உங்களது கருத்து என்ன?

பதில் : ஆம். இது முக்கியமான கேள்வி. அதாவது எழுத்தாளன் என்பவன் தான் ஒரு எழுத்தாளன் என்ற நிலையினின்று எழுதக்கூடாது. வாசகன் என்ற நிலையில் நின்றே எழுத வேண்டும். ஆனால் இன்றைய எழுத்தாளர்களிடம் அதைக் காணமுடியாதுள்ளது. மற்றையது படைப்புக் களிலுள்ள பாத்திர வார்ப்பு மிகமுக்கியமானது. சிறுகதைகளிலோ, நாவல்களிலோ பாத்திரங்களில் சித்தரிக்கப்படும் கதாபாத்திர நிலைகள் அவற்றின் தன்மை நிலைக்கேற்ப படைக்கப்படல் வேண்டும். உதாரணமாக ஒரு சிறுகதையில் வருகின்ற உரையாடல் ஒன்றை எடுத்தால் பாத்திரப்படைப்பு ஒரு வைத்தியராக சித்தரிக்கப்பட்டால் உயர்ந்த பேச்சு வழக்கு நடையில் இடையே ஆங்கிலக் கலப்புடன் இருக்கும். ஆனால் சாதாரண பாமர மக்களின் உரைநடை வழக்கு மிகவும் எளிமையாகவும் கிராமப்புற வாசனையைத் தழுவியதாகவும் அமைய வேண்டும். மேலும் இயன்றவரை வசனங்கள் எளிமையாக இருக்க வேண்டும்.

**எழுத்தாளன் என்பவன் ஒழுக்கக்கேட்டை வர்ணிப்பவனோ அல்லது ஒழுக்கத்தை போதிப்பவனோ அல்லன். யதார்த்த நிலையை ஜயனரஞ்சமாக சமூகத்திற்கு அளிப்பவனே உண்மையான எழுத்தாளன் ஆவான். எழுத்தாளன் சமூகத்திற்கு முன்னுதாரணமாக திகழ வேண்டியது அவசியம். அப்போது தான் அவனது படைப்புக்களுக்கு வாசகர் மத்தியில் வரவேற்பு இருக்கும்.**

எழுத்தாளன் என்பவன் ஒழுக்கக்கேட்டை வர்ணிப்பவனோ அல்லது ஒழுக்கத்தை போதிப்பவனோ அல்லன். யதார்த்த நிலையை ஜனரஞ்சமாக சமூகத்திற்கு அளிப்பவனே உண்மையான எழுத்தாளன் ஆவான். எழுத்தாளன் சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டியது அவசியம். அப்போது தான் அவனது படைப்புக்களுக்கு வாசகர் மத்தியில் வரவேற்பு இருக்கும். அது மாத்திரமன்றி இன்றைய எழுத்தாளர் களுடைய படைப்பு வேகம், வீதம் குறை வென்றே

கூற வேண்டும். காரணம் பல படைப்புக்கள் முன்னர் வெளிவந்த ஆக்கங்களின் தழுவல்களாகவே காணப்படுவதனை அவதானிக்கமுடிகிறது. யதார்த்த பூர்வமாக, ஆழமாக சிந்தித்து அவற்றை ஜனரஞ்சமாக படைக்கும் திறன் இன்றைய இளம் எழுத்தாளர்களிடம் குறைவு என்றே கூற வேண்டும். கால மாற்றத்திற்கேற்ப சமூகத்தின் தேவை அறிந்து, ரசனை அறிந்து சிந்திக்கத் தூண்டும் விதத்தில் புதிய பார்வையில் படைப்பதற்கு முன்வர வேண்டும். அப்போது தான் அவர்களது படைப்புக்கள் சமூகத்தில் வெற்றி பெறும்.

**யதார்த்த பூர்வமாக, ஆழமாக சிந்தித்து அவற்றை ஜனரஞ்சமாக படைக்கும் திறன் இன்றைய இளம் எழுத்தாளர்களிடம் குறைவு என்றே கூறவேண்டும். காலமாற்றத்திற்கேற்ப சமூகத்தின் தேவை அறிந்து, ரசனை அறிந்து சிந்திக்க தூண்டும் விதத்தில் புதிய பார்வையில் படைப்பதற்கு முன்வர வேண்டும். அப்போது தான் அவர்களது படைப்புக்கள் சமூகத்தில் வெற்றி பெறும்.**

கேள்வி : இந்த நேர்காணல் ஊடாக இறுதியாக நீங்கள் என்ன கூற விழைகிறீர்கள்?

பதில் : என்னைப் பொறுத்த வரையில் எழுத்துத்துறையில், வாசிப்புத்திறனில், ஆய்வுப்புலத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பவனே எழுத்தாளனுக்குரிய பூரணமான தகுதிப்பாட்டைக் கொண்டவன். வெறுமனே ஓரிரு கதைகளையோ, கவிதைகளையோ எழுதிவிட்டுச் செல்பவன் இலக்கியப் படைப்பாளி அல்லன். எனவேதான் வளர்ந்து வருகின்ற எழுத்தாளர்கள் எழுத்துத்துறையில் முழு ஈடுபாட்டுடன் எழுத வேண்டும். சமூகப் பிரக்ஞை கொண்ட ஒருவன் தான் எழுத்தாளனாக மிளிர முடியும்.

மேலும் இன்றைய இளம் எழுத்தாளர்களுக்கும், எழுதத் துடிப்பவர்களுக்கும் ஊடகங்கள் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அவர்களது திறமைகளை இனங்கண்டு, சமூகத்தில் அவர்களை இனங் காட்டுவதற்கு ஊடகங்கள் உறுதுணை புரிய வேண்டும். எழுத்தாளர்களை படைப்பாளிகளை சமூகத்தில் இனம் காட்டுவது ஊடகங்களே. குறிப்பாக தமது ஆற்றல்களை,

அனுபவங்களை, உணர்வுகளை தத்ரூபமாகவும் கலாபூர்வமான முறையிலும் வெளிப் படுத்த வல்ல படைப்பாளிகளுக்கு ஊடகங்களின் பணி காத்திரமானது. முன்னர் போன்றல்லாமல் இன்றைய காலகட்டத்தில் பல ஊடகங்கள் யாழ் குடாநாட்டை மையமாகக் கொண்டு வெளிவருகின்றன. ஆனால் இலக்கியத்துறைக்கு அவற்றில் பக்கங்களை ஒதுக்க தவறிவிடுகின்றன. இதற்கு காரணம் எழுத்தாளர்களின் வெறுமையா? அல்லது வாசகர்களின் வாசிப்பதிலுள்ள பொறுமையின்மையா? என்பது தெளிவில்லை. முன்னர் என்றால் நான் சிறுவனாக இருந்த போது காசு யாரிடமிருந்தாவது கிடைத்தால் புத்தகம் போன்ற பயனுள்ள பொருட்களையே வாங்குவோம். ஆனால் இன்று உள்ள தலைமுறையினரின் வாழ்க்கை வரன்முறைக்குட்பட்டதாக இல்லை. பணம் கிடைத்தால் பயனுள்ள வழிகளில் செலவிடும் மனப்பக்குவம் இல்லை. நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். நல்ல விடயங்களை பெரியோர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் இன்றைய எமது சமூகத்தை நன்நிலைக்கு மாற்ற முடியும்.

## வானொலி

என்றும் செய்தி தருகின்ற
எங்கள் நண்பன் வானொலியாம்
கண்டு பிடித்தார் மார்க்கோனி
நன்றி சொல்வோம் மகிழ்வோடு

எட்டுத் திக்கு செய்தியையும்
எமக்கு உடனே அள்ளித்தரும்
உத்தம நண்பன் வானொலியாம்
உள்ளம் எங்கும் நிறைந்தவனாம்

கல்வி அறிவு அற்றோர்க்கும்
காதில் கானம் பாடிடுமாம்
இளைஞர் மனதையும் கவர்ந்திடுமாம்
இளம் சிட்டுக்களதும் தோழனாம்

நாட்டு நடப்பு மட்டுமன்றி
நல்ல கல்வியும் எமக்களிக்கும்
மக்கள் தோழன் வானொலியை
மனநிறைவுடனே வாழ்த்திடுவோம்

செல்வி புஷ்பராசா நிவேகா
தரம் 12
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
(தமிழருவி நடத்திய 6வது கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற ஆக்கம்)

# ஊனம் சிறிது தாக்கம் பெரிது

பூநகர்
பொன். தில்லைநாதன்

"நொண்டி சேர் நல்ல சேர்... படிப்பிச்சு நல்லாய் விளங்கப்படுத்துவார்" இப்படிக் கொஞ்ச மாணவர் பேசிக் கொள்வாங்க... "நொண்டி சேர் ஊன்றுகோலோடை வகுப்புக்கு வரேக்கை பாவமாய் இருக்கும்... கடவுள் இப்படி அவரைப் படைத்து எங்களை மாதிரி ஒடி ஆடி வேலை செய்ய முடியாமல் செய்து விட்டாரு" இப்படியும் சில மாணவர்.

அந்தப் பெரிய பாட சாலையில் கல்வி கற்கும் சிறிய மாணவர்களும், ஏன் பெரிய மாணவர்களும் பெயரை அறியாதவர்களாக நொண்டி சேர் என்ற பெயரை உச்சரிப் பதை சரவணன் கேட்டும் கேளாதவனாக, பார்த்தும் பாராதவனாய் குமறும் உள் மனத்தைக் கொண்டவனாய் வாளாவிருந்தான். தனக்கு எப்போ... எப்படி... இந்த நிலை வந்ததென்பதை அறியாத வர்கள்... அறிய முயலாத வர்கள் தானே இவர்கள். எனைப்பற்றி நன்றாகத் தானே பேசிக்கொள்கிறார்கள். பேசித் தொலையட்டுமே எனக்கென்ன போச்சு. இப்படித்தான் அவனது நெருங்கிய நண்பன் ஸ்ரீ கணேஸ் இவ்விடயம் சம்பந்தமாக விவாதித்த போது சரவணன் கூறினான்.

ஸ்ரீ கணேசனுக்கு பெருங் கோபம் வந்தது. சேவையிலும் வயதிலும் இருவருடங்கள் மூத்தவனாக யாழ்ப்பாணத்தில் ஒரு சிற்றூரைச் சேர்ந்தவன். "சரவணன் நீ மடையன் மாதிரி கதைக்காதே உனக்கொரு அழகான பெயருண்டு. நீ கணித பாடத்தை போதிக்கும் ஆசிரியர்களில் ஒருவன். இது இரண்டும் போதாதா? என்னடா நொண்டி சேர் என்ர பட்டமா இங்கை சூட்டு கிறார்கள். இவ்விடயம் பற்றி ஏனைய ஆசிரியர்களும் வாளா விருப்பதை அவதானித்து என்மனம் பொறுக்குதில்லை. சரவணா இதற்கு ஒரு முற்றுப்



புள்ளி வைத்தே ஆகணும்."

"கோவிக்காதை ஶ்ரீ... வீண் வம்பு ஏன்... உன்ரை பேச்சும் ஒரு பக்கத்துக்கு நியாயமாய்ப் பட்டாலும் என்ன இதுக்கு போராட்டமா நடத்தப் போறாய்."

"இந்தப் பாடசாலையில் இருந்து நான் போறகட்டம் வந்தாலும்... என்ரை மனத்தை அழுத்தும் இந்த நிலையை அறவே மாற்றிக் காட்டுகிறேன். ஒண்டில் சரவணன் சேர் என்று சொல்லுவாங்க.... இல்லை கணித சேர் என்று சொல்லு வாங்கள். ஆரம்பப்பிரிவு மாணவர்களில் இருந்து வளர்ந்த மாணவர் நாவிலை மறந்தும் இந்தப்பட்டம்... வார்த்தையை உச்சரிக்காமல் செய்து காட்டிறன்."

சரவணன் ஒரு சாதாரண குடும்பத்தில் தேனும் பாலும் ஓடும் ஒரு விவசாயக் கிராமத்தில் பிறந்தவன். பிறக்கும் போதும் தரம் 5 வரை படிக்கும் வரை நன்றாகத்தான் இருந்தான். அவனுக்கு எந்த ஊனமும் இல்லை.

ஶ்ரீ கணேஸ் ஒரு படித்த அந்தஸ்துள்ள பண்பான புகழ் பூத்த குடும்பத்தைச் சேர்ந்தவன் மட்டுமல்ல... அவர்கள் ஒரு ஆசிரிய குடும்பம் என்றே துணிச்சலுடன் கூறலாம். எந்தவித பெருமையும் அற்ற அவன் மற்றையோர் உயர்விலும் வளர்ச்சியிலும் வழிகாட்டு தலிலும் அதிதீவிர நாட்டம் கொண்டவன். அவனுக்கு மாணவர் மத்தியிலும்... ஆசிரி யர்கள் மத்தியிலும் மதிப்பும் பற்றும் உண்டு.

அந்த பாடசாலையில் ஆங்கில பாடத்திற்கென ஆங்கிலப் பாடமாணவர் மன்றம் அமைத்து அதன் மூலம் அந்நிய பாஷையில் சாதனை படைக்கும் மாணவர்களை உருவாக்கியதன் மூலம் அவனுக்கு அப்பாடசாலையின் அதிபரிடம் மிகுந்த செல்வாக்கு. சரவணன் உள்ளத்தில் மிகுந்த மனப் போராட்டம் உருவாகிவிட்டது. நான் பாடசாலையில் நியமனம் பெறுவதற்கு இரண்டாண்டு முன்னதாகவே நியமனம் பெற்றவன் ஶ்ரீ. பாடசாலையில் செல்வாக்கு மிக்கவன். தனக் காக ஏதேனும் நடவடிக்கை களில் அல்லது மாணவர்களைக் கண்டிக்கும்... இல்லை தாக்கும் நிகழ்வு ஏற்பட்டால் எனக் கெதிராக ஏதும் வன்முறை வெடித்துவிட்டால் முதல் நியமனம் பெற்ற இப் பாடசாலையில் குறைந்த சேவைக் காலத்தைக் கொண்ட எனக்கு ஏதும் பாதிப்பு ஏற்படாது என்பதற்கு யார் உத்தரவாதம் தரப் போகின்றார்கள். சரவணனுக்கு பெரும் மனப் போராட்டம்.

அன்று சனிக்கிழமை எப்படியும் ஶ்ரீ வீட்டிற்குச் சென்று தனது விடயம் சம்பந்தமாக

பாடசாலையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கெஞ்சிக் கேட்பதாக முடிவெய்து கொண்டான். அன்று மாலை அந்தி நேரம் பகலவன் தன் பகல் யாத்திரையை முடித்து விடைபெறத் தயாராகிக் கொண்டான். குளிர்மையான பொன்னிற கதிர்களின் குளிர்ந்த வெயிலில் அவன் உள்ளத்தே பட்டு குளிர்மை அடையும் நிலையில் தன் ஊன்றுகோலை எடுத்தான். முச்சில்லு சைக்கி ளிலில் ஏறிக் கொண்டான். விரைந்து கைப்பெடலை சுற்றுகிறான். உள்ளத்தின் வேகம் ஒருபுறம் சைக்கிளின் வேகம் மறுபுறம்.

இன்று நான் இந்த நிலைக்கு ஆளானேன் என்றால் அதற்கு யார் காரணம்? கடவுளையும்..... இல்லை பாழாய்ப் போன விதி.... பாழாய்ப் போன விதி என விதியில் பழி சுமத்தலாமா? நானே காரணம்.... என்னால் தேடிக்கொண்ட வினைதானே.. யாரையும் நோவானேன். வேதனையில் குளிப்பானேன்.

இரண்டு தசாப்தங்கள் கடந்து விட்டது. அந்தக்கொடிய சம்பவம் இடம்பெற்று அதே இடத்தில் இரண்டு கால்களும் சிதறிய நிலையில் இரத்த வெள்ளத்தில் இருந்து மீட்கப் பட்டு அப்பகுதியில் நிலை கொண்டிருந்த படைமுகாம் அதிகாரியின் உதவியோடு அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் பலமாதங் களாக சிகிச்சை பெற்று சமூகத்தோடு இணைந்தவன்.

போர் நடவடிக்கை யினால் பெரும் முற்றுகைக்கும் போரினால் சின்னாபின்னப் பட்டு பாடசாலை, தபால் கந்தோர், வைத்தியசாலை என அத்தனையும் தரைமட்டமாகி மீண்டெழும் கிராமம் தான் கௌதாரிமுனை. பனை, தென்னை, நெல் வளமும், கடல்வளமும் கொண்ட அக்கிராமத்தின் இயற்கை அழகே தனிச்சிறப்பு. வானளாவ உயர்ந்து நெடுத்திருக்கும் பால் வண்ண பெரும் மணல் குன்றுகள் அக்கிராமத்தில் தான் மீளக்குடியமர்வு என்ற பெயரில் குடியமர்ந்தார்கள் சரவணன் குடும்பத்தவர். பாடசாலை மீளப் புனரமைக்கப்பட்டு ஆரம்பமாகி ஒருவாரம் கடந்து விட்டது. பாடசாலையின் அண்மித்த பகுதி பெரும் பனந்தோப்பும் அப்பால் யாழ் குடாக் கடலும் அழகையூட்டிக் காட்சியளித்தது. குறுக்கே தொடராக நீளமுட் கம்பிவேலி போடப்பட்டு மிதிவெடி அபாயம் என மண்டை யோட்டின் படங்கள் கம்பி வேலியில் தொங்க விடப்பட்டி ருந்தது. அப்போ சரவணனுக்கு அகவை பத்து இருக்கும். தன் பள்ளி நண்பர்களுடன் பந்து

விளையாட்டில் ஈடுபட்டி ருந்தனர். வேகமாக அடிக்கப் பட்ட பந்து ஒன்று மேல் நோக்கி சென்று கம்பி வேலியைத் தாண்டி பனந்தோப்புப் பக்கம் வீழ்ந்தது. உற்சகமாக விளை யாட்டில் ஈடுபட்டிருந்த சரவணன் தான் செய்வது பெருந்தவறு என்பதை உணராமல் கம்பி வேலியில் இடைவெளியை உண்டாக்கி அதனுள் புகுந்து பந்தை எடுக்க ஓடினான். விளையாட்டில் ஈடுபட்டிருந்த ஏனைய நண்பர்கள் தடுக்கவும் கேட்காத நிலையில் ஓடிச்சென்று பந்தை எடுத்துவிட்டான். திரும்ப ஓடிவருகையில் பெரும் சத்தத்துடன் ஒன்றன் பின் ஒன்றாக இரு வெடிச்சத்தங்கள் இருகால்களும் சிதறிய நிலையில் இரத்த வெள்ளத்தில் துடித்தான். சுய நினைவு இழந்தான். அருகே இருந்த படைச் சிப்பாய்களும் படைமுகாம் அதிகாரியும் சம்பவ இடத்திற்கு விரைந்து சரவணனை உடன் சிகிச்சைக் காக உலங்குவானூர்த்தியை அழைத்து அனுப்பி வைத்தனர். இந்த வரலாற்றை அறியாத வர்கள் எதனையும் பேசலாம்... பேசுவார்கள்... பேசிக் கொண்டேயிருப்பார்கள்.

பொழுது படும் நேரம் எதிர்பாராத விதமாக தன் வீட்டிற்கு வந்து சேர்ந்த சரவணனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த ஸ்ரீ கணேஸ் ஏன்டா ஒரு சொல்லு சொல்லியி ருந்தால் நானே வந்திருப்பேனே நீ ஏன்டா... இப்படி வந்து எனக்கு பாபத்தை தேடுகிறாய்...

உன்னோடை முக்கியமான ஒரு விடயத்தை கதைத்து முடித்துவிட வேண்டும் அது தான் வந்தேன். குறை விளங்காதே... கோபம் கொள்ளாதே என்னடா இது... நேத்து பாடசாலையிலை என்னோடை பேசிக்கொண்ட விடயம் அதை மறந்திடு... எந்த நடிவடிக்கையும் வேண்டாம். கெஞ்சிக் கேட்டான்.

சரவணன்.. தெரிந்தோ... தெரியாமலே சில மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்கள் வாயிலும் கூட தாம் செய்யும் பெருந்தவறை புரியாமல் இலகுவாக நொண்டிசேர் இந்த வார்த்தை உச்சரிக்கும் போது பாதிக்கப்பட்டவனின் உள்ள நிலையை நீ மறைக்கலாம். என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. தவறை ஏற்றுக் கொள்வதனால் நான் அப் பாடசாலையில் ஓர் ஆசிரியராக இருக்க முடியாது. நீ போய் வா என்னை மன்னித்து விடு. நாளை மறுதினம் திங்கள் பாடசாலையில் நடப்பதைப் பார். நீ... போயிற்று வா... ஸ்ரீ கணேஸ் அந்த இடத்தில் இருந்து விலகிக் கொண்டான்.

இரவு முழுவதும் சிந்தனையில் ஆழ்ந்த ஸ்ரீகணேஸ் திங்கள் காலை நேரத்தோடு பாடசாலைக்கு வந்துவிட்டான்.

அதிபர் மிகுந்த அன்போடு அவனை கணேஸ் என அழைப்பார். கணேஸ்... என்னோடு ஏதும் பேச வேண்டுமா?

கணேஸ் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத் தினான். அவன் உயர்ந்த பண்பைப் புரிந்து கொண்ட அதிபருக்கு மிகுந்த மகிழ்வோடு அன்று காலை நற்சிந்தனைக் குரிய நேரம் அவனுக்கு வழங்கப்பட்டது.

பத்து நிமிட நற்சிந்தனை அதில் பொதிந்துள்ள தத்துவங்கள் ஆசிரியர்களையே ஒரு உலுப்பு உலுப்பி விட்டது. தாம் தெரியாமல் செய்து கொண்டி ருக்கும் தவறுக்காக கண்ணீர் சிந்தி அழுதார்கள். சரவணனிடம் மன்னிப்புக் கேட்க அவனை பாடசாலை வளாகம் எங்கும் தேடிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீ... அவன் என்னுடைய நீண்டகால நண்பனும் கூட. அவன் முன்வைத்த காலை பின்வைத்ததாக வரலாறு இல்லை. தன்மீது அளவற்ற அன்பைச் செலுத்துபவன். என்னுடைய கதையை புறக் குடத்தில் வார்த்த நீராகவே ஏற்றுக்கொண்டவன். அவன் சொன்னது போல் பாடசாலை யில் ஏதும் பிரளயத்தை உண்டாக்கியே தீருவான் என்பதை உணர்ந்திருந்தான்.

அன்று திங்கட்கிழமை பாடசாலைக்கு லீவுக் கடிதம் அனுப்பிவிட்டு வீட்டில் அமைதியாக இருந்துவிட்டான்.

பாடசாலை வளாகத்தில் சரவணனைத் தேடிய மாணவர்கள் அதிபரிடம் விசாரித்தார்கள். "நியமனம் கிடைத்த நாளில் இருந்து கடந்த ஒருவருடத்தில் ஒரு நாள் கூட லீவு பெறாத சரவணன் இன்று லீவு என அறிவித்துள்ளார்" என பதில் விடுத்தார்.

அன்று பாடசாலை விட்டவுடன் பல மாணவர்கள் நேரடியாக சரவணன் வீட்டிற்கு வந்திருந்தார்கள். "சேர் தெரிந்தும் தெரியாமலும் எம்மவர்கள் தங்கள் ஊனத்தை முதன்மைப்படுத்தி அழைத்தமை, பேசியமை உங்களுக்கு பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியை எம்மால் உணர முடிகிறது. கடந்துபோன சம்பவங்களுக்காக நாம் மன்னிப்புக் கோரவே வந்தோம். இன்னும் பலர் வரு வார்கள் எங்கள் பாடசாலையை விட்டு மாறிவிடாதீர்கள்." கெஞ்சிக் கேட்டு அவர் உறுதி மொழியைப் பெற்றுத் திரும் பினார்கள். மறுநாள் பாட சாலையில் சரவணனைச் சுற்றி ஒரு பெரிய மாணவர் கூட்டம். மீண்டும் அவனுக்கு உண்மை யாக இருப்பது போன்ற உணர்வு.

சரவணன் சேர் என்ற வார்த்தை நீண்டு ஒலித்தது. நொண்டி சேர் என்ற வார்த்தை அவர் களது உதட்டிலும் இல்லாமலே அற்றுப் போய் விட்டது. ஸ்ரீ கணேஸ். அவன் ஒரு உன்னத நோக்கமும் இலட்சியப் பற்றும் கொண்ட தூரநோக்காளன். அவனை என் வாழ்நாளில் மறக்க முடியுமா? சரவணனது உள்ளத்தில் மீண்டும் மீண்டும் எதிரொலிக் கிறது. அன்றைய தினம் எதிர்பாராத சம்பவம் ஒன்றும் அரங்கேறியது.

முன் கூட்டியே அதிபர் எடுத்திருந்த நடவடிக்கைகளின் படி அன்று பாடசாலை மூடப் படுவதற்கு சற்று முன்பதாக ஒரு வெள்ளை கயஸ் வான் வந்து நின்றது. ஜெய்ப்பூர் நிறுவன பணிப்பாளருடன் அவரது குழுவினர் செயற்கைக் கால்கள் இரண்டோடு வந்திறங்கினார். பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது.

## வல்லமை தாராயோ பராசக்தி

ஏர்பூட்டி உழவு செய்து
பார்போற்றி வாழ்ந்திருந்தோம்
வங்கக் கடல் எங்கும் – நம்
சங்கத் தமிழ் வளர்த்தோம்.
ஊழி வினையனைத்தும் – நாம்
உன் புகழ் பாடியறுத்தோமே
ஆடியடிங்கிடினும் எம் வாழ்வில்
கூடி உனைத் தொழுவோம்
ஏக்கம் கலந்த இந் நாட்களிலே
ஊக்கம் தரும் எம் தாயே
பாரினில் பயனுற வாழ்ந்திடவே
வல்லமை தாராயே பராசக்தி

**கொட்டடி**
*சி. சிறீதரன்*

**தமிழருவி சஞ்சிகையால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவரிடையேயான கவிதைப் போட்டி முடிவுகள் (06)**

கவிதைப் போட்டி

- *1ஆம் பரிசு 500/=*
  *புஷ்பராசா நிவேகா*
  *தரம் 12*
  *யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்*
- *2ஆம் பரிசு 300/=*
  *கு. லக்சிகா*
  *தரம் 9*
  *யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்*
- *3ஆம் பரிசு 200/=*
  *ப. ரிலக்ஸி*
  *தரம் 13*
  *யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி*

பரிசில் பெற்ற மாணவர்களைத் தமிழருவி வாழ்த்துகின்றது. பரிசில்கள் விரைவில் மாணவர் களுக்கு வழங்கப்படும்.

# மாணவர் வலுவூட்டற் பகுதி



திருமதி. உதயலதா நவதீசன்
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி

மாணவர்களே இதோ! இது உங்கள் பக்கம். உங்களுக்காகவே ஆரம்பிக்கப்படும் பகுதி இது. க.பொ.த சா/த, க.பொ.த உ/த மாணவர்களாகிய உங்களுக்காகவே உங்கள் 'தமிழருவி' இப்பக்கத்தை ஒதுக்குவதில் பெருமை கொள்கிறது. இப்பகுதி உங்கள் தேடல்களுக்கும், ஆர்வத்திற்கும் அடித்தளமிட்டுத் தரப்போகின்றது. உங்கள் பாடப் பகுதிக்குள், நீங்கள் கற்ற விடயங்களை மீட்டிப் பார்க்கவும், அப் பகுதியில் ஒரு தெளிவினை ஏற்படுத்தவும், பரீட்சைக்கு உங்களைத் தயார்ப்படுத்தி, உயர்புள்ளிகளைப் பெற்றுத் தருவதற்குமாய் இப்பகுதியை உங்கள் 'தமிழருவி' உங்களுக்காகத் தருகின்றது.

உங்கள் பாடப்பகுதிக்குரியதான வினாக்களைத் தெரிவு செய்து, அவற்றுக்குரிய விடைகளையும் எங்கள் ஆசிரிய குழாம் உங்களுக்காய்த் தரவிருக்கிறது. படித்துப் பயன் கொள்வீர். தொடரும் ஒவ்வொரு அருவியிலும் உங்களுக்கான இப்பகுதி தொடர்ந்து கொண்டேயிருக்கும். எமது மாணவச் செல்வங்களின் பயனுறுதி மிக்க எதிர்கால நம்பிக்கைக்குத் தமிழருவியும் ஒரு படிக் கல்லாய் அமைவதில் அது அகமகிழ்ந்து கொள்கின்றது.

இந்நோக்கில் இதோ, க.பொ.த உ/த மாணவர்களே, உங்கள் தமிழ்ப் பாடப் பகுதியின் வினாவொன்றையும், அதற்குரிய விடையையும் இன்றைய 'தமிழருவி' தன்னகத்தே சுமந்து வருகின்றது.

க.பொ.த உ/த தமிழ்ப் பாடக் கவிதைப் பகுதியில், 'பாரதியார் கவிதை'யில் 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' என்ற கவிதையின் வினாவிடை இதோ!. கற்றுக் கருத்திலேற்றிப் பயன்பெற வாழ்த்துகிறோம்.

**பாரதியார் கவிதை**

**பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி**

பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்ற கவிதையில் பாரதி வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?
அந்த விடயத்தை அவர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?

### சொல்லவந்த விடயம்

பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்ற கவிதைப் பகுதியினூடாக பாரதி வெளிப்படுத்த விழைந்த விடயம், தாய்நாட்டுப் பற்றோடு சுதந்திர வேட்கையையும் உணர்வு பூர்வமாக ஏற்படுத்தலாகும்.

### அதனை வெளிப்படும் விதம்

இவற்றில் முக்கியமானது அவர் கையாண்ட வடிவமாகும். திருப்பள்ளி எழுச்சி என்கின்ற மரபுசார் வடிவத்தினைக் கையாண்டு தான் கூறவந்த விடயத்தைக் கூறுகின்றார். அரசன், போர்வீரன் போன்றோரை இனிமையான உயர்ச்சிமிக்க உரிய சொற்களைக் கொண்டு காலையில் எழுப்புதல் என்ற வழக்கம் ஆரம்பத்தில் இருந்தது. மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சி என்பது நாமெல்லாம் அறிந்தது. சந்தச்சுவை செறிந்த பள்ளி எழுச்சி வடிவம் பாரதியின் உத்தியாக அமைந்தது சிறப்பிற் குரியதாகும். போராட்டக் காலத்தில் போர்வீரர்களைச் சலிப்படைய வைக்காது அவர்களுக்கு உற்சாகமூட்டிப் பேசுவது அவர்கள் வெற்றி இலக்கை எட்டுவதற்கு உறுதுணையாய் அமையும். அவ்வாறே பாரதியும்,

“பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி”

என்று அடிமைப்பட்டுக் கிடந்த பாரத மக்களுக்கு விடிவுகாலம் வந்துவிட்டது எனக் கூறிப் போராட்ட தியாகிகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்துகிறார்.

காலை விடிந்துவிட்டது. அதற்குரிய காலை நிகழ்வுகள் எல்லாம் இதோ நடந்தேறிவிட்டன.

"புள்ளினம் ஆர்த்தன ஆர்த்தன; நாதம்
பொங்கியது எங்கும் சுதந்திர முரசம்
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்
வீதியெ லாம் அணுகுற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றனர்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற்கின்றார். இவ்வளவு ஆகியும் அன்னை நீ பள்ளியெழுந்தருளவில்லையே என துயிலெழுதலைத் துரிதப்படுத்துகின்றார்.

ஒருவரிடம் ஒரு காரியத்தைப் பெறச் செல்லும் போது முதலில் அவரை வாழ்த்தி வணங்கி அவர்தம் புகழ்பாடி அதன்பின் தாம் வேண்டுங் காரியத்தைக் கூறும் வழக்கமுளது. "வேதங்களை அளித்தனை, பலகோடி சொல்லுதற்கரிய மாண்பினையுடைய சாத்திரங்களைப் பெற்றனை. அரக்கர்கள் நடுங்குமாறு சூலத்தைக் கையில் ஏந்துவாய் நிர்மலையே, வெண்மையான பனிமுடியில் உள்ள இமய மலையத்தவள் தந்த பெரிய தவப்பொருளே" என்று அன்னையின் புகழ்பாடி பள்ளி எழுந்தருளுமாறு கேட்கிறார். அன்னையின் அருள் வேண்டுகின்ற பொழுது "நாம் எவ்வளவு வறியவர்கள் உன் அழகு ஒளிரும் விழியின் அருளைக் காண்பதற்கு எம் உள்ளங்கள் கொண்டுள்ள ஆசையை நீ அறிய மாட்டாயோ என்று கேட்கின்றார். மேலும் அன்னை புகழைக் கூறும் போது பெரும் பாரதத்திற்குத் தாயே என்றும் பாரதத்தின் பதினெட்டு மொழிகளுக்கும் தாய் என்றும் அம்மொழிகளாலேயே உனைப் பாடுகிறோம் என்றும் கூறுகின்றார்.

ஈற்றில், மனவுணர்வை, தாய்மையுணர்வைத் தட்டி யெழுப்பி அன்னையைத் துயிலெழுப்பும் உத்தியைப் பாரதி கையாண்டுள்ளமையையும் காணலாம். சாதாரணமாக பிள்ளைகள் துயில் கொள்ளும்போது தாய்தான் துயிலெழுப்புவாள். இங்கே குழந்தைகள் எழுப்பவும் தாய் துயில் கொள்வதைச் சுட்டிக்காட்டி பெரிய மாநிலத்தையே பெற்ற தாய் நீ இந்த மழலை மொழிக்கு இரங்காயோ மதலைகள் எழுப்பவும் தாய் துயில்வாயோ? என்று அன்னையின் தாய்மையுணர்வைத் தட்டியெழுப்பி மழலையாகத் தம்மைப் பாவித்துத் துயிலெழுப்புகிறார்.

இன்னும் எளிமையான மொழிநடை, இனிய சந்தம், வினாத்தொகுப்பு முறை, உவமைச் சிறப்பு முதலான பல்வேறு உத்திகளைக் கையாண்டு பாரதியார் தான் கூறவந்த விடயத்தைக் கூறுகின்றார்.

# க.பொ.த உயர்தரம்
# இந்து நாகரிகம்

இந்து சமயத்தை வளப்படுத்துவதில் முதல் நூல்கள் என்ற நிலையில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினையும் சிறப்பையும் மேல்வரும் விடயங்கள் கொண்டு ஆராய்க.

1. வேதங்கள்
2. வேதங்களின் வகையும் அமைப்பும்
3. வேதகாலத் தெய்வங்களும் வழிபாடும்

## வேதங்கள்

இந்து இலக்கியங்களுள் வேதம், ஆகமம் என்பன முதல் நூல் எனவும் பிரமாண நூல்கள் கொள்ளப்படுகின்றது. வேதம் என்னும் சொல் "வித்" என்னும் வினையடியில் இருந்து தோற்றம் பெற்றது. அது அறிவு எனப் பொருள்படும். அதனால் வேதங்களை அறிவு நூல் என்பர். வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டது.

வேதங்களை வகுத்தவர் "வியாசர்" ஆவார். வியாசர் என்பது ஒரு காரணப் பெயர் அதற்கு தொப்பிசிரியர் எனப் பொருள் கொள்ளப்படும். வரலாற்றுக் கால அடிப்படையில் வேத இலக்கியங்கள் கி.மு. 1500 – கி.பி 600 வரையான காலப் பகுதியில் தோற்றம் பெற்றது. வேதத்தை ஆராய்ந்த அறிஞர்களாக மாக்ஸ்முல்லர், திலர், ஐகோடி போன்றவர்கள் குறிப்பிடப் படுகின்றனர். இவ்வேதங்களை எழுதாமறை, எழுதாக்கிழவி, சுருதி, மறை, ஆம்நயம், அபௌருஷேயம், சுயம்பு போன்ற பல பெயர்களால் அழைப்பார்.

## வேதங்களின் வகையும் அமைப்பும்

ஆரம்பத்தில் வேதங்கள் "திரயீவித்யா" என மூன்றாக சொல்லப்பட்டன. அவை இருக்கு, யசுர், சாமம் என்பனவாகும். பின் வழக்கிலிருந்து அதர்வவேதம் இணைக்கப்பட்டு நான்காக கூறப்பட்டன. வேதங்கள் நான்கு என்பதால் அவை சதுர்மறை, சதுர்வேதம் என அழைக்கப்பட்டன.

இருக்கு வேதம் பத்து மண்டலங்களையும் 1028 சூத்தங் களையும் கொண்டுள்ளது. 101 சாகைகளைக் கொண்ட யசுர் வேதம் சக்கிலியர்யசுர், கிருஸ்ணயசுர் என இரு பிரிவுகளைக்

கொண்டுள்ளது. அதர்வவேதம் 20 காண்டங்களையும் 731 சூக்தங்களையும் 6000 பாடல்களையும் கொண்டுள்ளது.

நான்கு வேதங்களும் இரண்டு காண்டங்களையும் நான்கு பகுதிகளையும் உடையன. இதில் சங்கிதை, பிரமாணம், ஆரணியம், உபநிடதம் என்ற நான்கு பகுதிகளாக உள்ளன. இதில் சங்கிதை என்பது மந்திரங்களின் தொகுப்பாகவும் பிராமணம் என்பது வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும் பகுதியாகவும் ஆரணியம் என்பது வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்களைக் கூறும் பகுதியாகவும் உபநிடதம் என்பது உண்மைப் பொருள் பற்றிய விசாரணைகளைக் கொண்ட பகுதியாகவும் உள்ளது.

இவ் வேதங்கள் கர்ம காண்டம், ஞான காண்டம் என்ன இருபகுதிகளாக உள்ளன. இதில் சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்மகாண்டம் என்றும் ஆரணியகம், உபநிடதம் என்பன வேதத்தின் ஞானகாண்டப் பகுதியைச் சார்ந்தவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேதகாலத் தெய்வங்களும் வழிபாடும்

இயற்கை சக்திகளை வழிபாட்டுத் தெய்வமாக கொண்ட காலமாகவே வேதகால முற்பகுதி நிலவுகின்றது. இவ் இயற்கை அம்சங்களே நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றன. வேதங்களில் கூறப்படும் 33 தெய்வங்களையும் அவை வாழும் இடங்களைப் பொறுத்து விண்சார்ந்த தெய்வங்கள், மண்சார்ந்த தெய்வங்கள், இடை சார்ந்த தெய்வங்கள் என வகைப்படுத்தினர்.

வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே பிற்கால சமய வளர்ச்சியின் தெய்வீக நம்பிக்கையின் பிரதான இட்த்தைப் பெறுகின்றன. வேதகால மக்கள் தெய்வங்களுக்கு செய்த வழி பாடுகள் கிரியைகள் பற்றி வேதங்கள் கூறுகின்றன. அதாவது வேதங்களில் அஷ்வவேதம், இராஜசூயம், வாஜபோகம், புருஷ மேதம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. இந்த வேள்வி வழிபாட்டில் பிரதான இடம் பெற்றவர்கள் புரோகிதர், அக்கினி பகவான், சோமன் போன்றோர் ஆவார்.


வேள்விக் கிரியைகளின் போது ஓமகுண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானஸ்துதி பாடுதல், பலியிடுதல், தானம் வழங்குதல், தட்சனை வழங்குதல் முதலான கிரியைகள் இடம் பெற்றன. வேள்வியின் பிரதான நோக்கமாக நீண்ட ஆயுள்,

போரில் வெற்றி, நோய்நீக்கம் முதலான உலகியல் இன்பங்களை அவாவி வேள்வி செய்யப்பட்டது.

இருக்கு வேதம் தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக என்று இசையில் இறைவனை வழிபடுதல் பற்றிக் கூறுகின்றது. யசுர் வேதத்தில் சுக்கிலயசுர் வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களை கூறி வழிபடும் முறையைக் கூறுகின்றது. உதாரணம் (சதுருத்திரியம்) சாமவேதம் இறை வழிபாட்டிற்குரிய இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது. அதர்வ வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய மாந்தீரிக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

திருமதி. சாந்தினிதேவி ஜீவிதரன்
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி


# பழமைக்கும் புதுமைக்கும்



இருந்த இடத்தில்
எல்லாமே உனக்கு
வருந்தி உழைக்க
வாய்ப்பின்றிப் போனபோது
முப்பது வயதிலேயே
ஐயோ மூட்டுவலி
முடியவில்லை களைக்குது
என்ற ஏக்கக் குரல்கள்
ஆனால்,
அறுபதிலும் அவர்களால் மட்டும்
எப்படி அலுப்பில்லாமல்
நோயில்லாமல் நிமிர்ந்து
இன்னமும் அதே பழைய
கம்பீரமும் துடிநடையும்
இலட்சிய வெறியும்
ஓய்வில்லா உழைப்பும்
பற்றும் பாசமும்
எப்படி அவர்கட்கு மட்டும்
எல்லாம்
குரக்கனுக்கும்
பாணுக்குமான இடைவெளியா?
கைகளிற்கும் கருவிகளுக்குமான
இடைவெளியா.....
பழமைக்கும் புதுமைக்குமான
இடைவெளியா....
எயார் கொண்டிசன் அறைக்குள்
கூல் றிங்ஸ்
அருந்திக் கொண்டிருப்பவனே
சற்றுச் சிந்தித்துப் பார்.

புலோலியூர்
வேல்நந்தன்





# மரணமில்லாப் பெருவாழ்வு

இணுவில்
யோகாநி

எப்படிக் கருவறையில் குழந்தை வளர்கிறது. அதில் இருந்துதான் எண்களை கண்டு பிடித்தார்கள் என்றும் அசத் தலப் பயிற்சியால் மன அலைச் சுழலைக் குறைத்து நொடிக்கு 1 – 3 வரையான சுழல் அலையில் விழிப்போடு இறப்புக்கு பின் உயிரின் நிலையை வான்சார்ந்த களத்தோடு இணைத்து உணர லாம் எனக் கொண்டு முதல் வெளியீட்டில் பார்த்தோம்.

இப்போது எப்படி கரு மையம், பருஉடல், நுண் உடல், காந்த உடல், இயங்குகின்ற மற்றும் எண்ணங்களும், செயல் களும் பதிவாகின்றன என்பதை ஆராய்ந்தால் மரணம் இல்லாப் பெருவாழ்வை நாம் அடைவது சாத்தியமான ஒன்று என்று மகான்கள் வழிகாட்டினார்கள் என்பதை புரிந்து கொள்ளவும் முடியும். அந்தப் பாதையில் நாமும் வாழ முடியும்.

பிறப்பிற்கும் வாழ் விற்கும் இறப்பிற்கும் இயக்க நிலையமாக அமைந்துள்ளது கருமையம். காந்த சுழலின் மைய ஈர்ப்பு, உயிரியக்கமான சூக்கும உடலின் இயக்க மையம், விந்து நாதக் குழம்பின் இருப்பு மையம் மூன்றும் ஒன்று கூடிய இயக்கத்தக்க ஓர் உயிரின் மறைபொருள் புதையல் தான் எந்த உயிரினத்திற்கும் மைய பகுதியில் அமைந்துள்ள கருமையம் ஆகும்.

இந்தக் கருமையம் தான் ஆன்மா, ஜீவன், அகம், உயிரினக் கருவூலம், நெஞ்சம் என்ற சொற்களால் வழங்கப் பெறுகின்றது. கருமையத்தில் அடங்கியுள்ள ஆற்றலையும் அதன் மதிப்பையும் எவராலும் மொழியைக் கொண்டு உணர்த்தி விடமுடியாது. மனிதனின் கருமையத்தில் இறைநிலையின் பரிணாமம், இயல்பூக்கம் எனும் முறையான நிகழ்ச்சிகளால் இறை நிலையிலிருந்து தொடங்கி இன்று வரையில் நிகழ்ந்த அத்தனையும் தன்மை வாய்ந்த காந்த அலைத் திவலைகளாகச் சுருங்கி அமைந்துள்ளன. தக்க காலத்தில் தேவையாலும் மன இயக்க நிலையாலும், சூழ்நிலை களாலும் கருமையத்துள் சுருங்கியிருக்கும் அனைத்தும் ஒவ்வொன்றாக எண்ணங் களாகவும் செயல்களாகவும், உருவங்களாகவும் வெளிப்படும்.

இத்தகைய பேராற்றல் அமைந்த தெய்வீகத் திருவிளை யாட்டின் சூக்கும அரங்கம் கருமையாகும். இத்தகைய கருமையத்தில் காலம், தூரம், பருமன், இயக்கம் என்ற நான்கு கணக்குகளுக்கும் எட்டாத

இறைநிலையிருந்து இன்று நாம் காணும் விரிந்த பேரியக்க மண்டலத்தில் நிகழும் கோடான கோடி இயக்கங்களையும் பிரதி பலிக்கும் காந்த கண்ணாடி யாகவும் வானங்கும் தெய்வீகத் திருந்தியே கருமையமாகும்.

இத்தகைய மதிப்பு மிக்க கருமையத்தின் தொடரியக்கமாக எண்ணிறைந்த தலைமுறை களையும் கடந்து ஒவ்வொருவரும் பிரதி எடுக்கின்றோம். இந்த தெளிவின் மூலம் ஒவ்வொருவர் பிறவிக்கும் முன்நிலை, பெற்றோர்கள் தான் என்பதும் ஆதி நிலையில் இயற்கையின் ஆதிநிலையாகிய இறை நிலையே என்பதும் ஐயமிலாத் தெளிவாகும்.

நீண்டகால தொடராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கோடிக் கணக்கான பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளில் ஒரு சீவனின் பிறப்புக்கும் இறப்புக்கு மிடையே அற்ப கால நிகழ்ச்சியாக நடைபெறுவது ஒரு சீவனின் வாழும் காலமாகும். வாழும் காலத்தின் உயிரின் நிலை என்னவென்று ஆராய்வோம். அதை அடிப்படையாக கொண்டு அதன் தொடராக நிகழும் இறப்பு பற்றியும் இறந்த பின் உயிரின் நிலை பற்றியும் சிந்திப்போம்.

பருவுடல், நுண்ணுடல், காந்த உடல் ஆகிய மூன்றும் இணைந்த ஒரு கூட்டுச் சிறப்பி யக்கமே சீவன் எனப்படும் பரு உடல். கோடிக்கணக்கான சின்னஞ்சிறு செல்களால் கட்டப்பட்டது. பருவுடலுக்கு ஊடே நுண்ணுடல் என்ற உயிர்த்துகள் சுழன்றோடிக் கொண்டிருக்கின்றது. இந்த உயிர்ச் சத்துகள் என்பது தான் பரமாணு. ஒரு பருவுடலின் ஊடே சுழன்று ஓடிக் கொண்டி ருக்கும் பரமாணுக்களின் தொகுப்பு இயக்கம் தான் நுண்ணுடல் எனும் சூக்கும உடல்.

சூக்கும உடலின் நுண் பகுதித்துகள் ஒவ்வொன்றும் தன்னைத் தானே விரைவாக சுற்றிக் கொண்டிருப்பதால் அதைச் சுற்றிலும் அமைந்துள்ள இருப்பு நிலையான இறை வெளியில் மோதும் போது அவ் உரசலில் இருந்து எழும் அலைகள் இறை வெளியொடு கூடி சீவ காந்தமாகிறது. இச் சீவகாந்தம் பருவுடலில் விரைவாக இடைவிடாமல் சுழன்றோடும் போது அந்த உரசலை சீவன் உணர்வாகப் பெறுவதே ஊறுணர்வு. இந்த சீவகாந்தம் சுழற்சியால் உடலில் உள்ள செல்களிற்கிடையேயும் பேரணுக்களுக்கிடையேயும் காந்த அலை தொடர்பான துருவங்கள் மூலம் ஒவ்வொரு செல்லும் சீவகாந்தத்தை இழுத்து அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, மனமாக மாற்றி உடலியக்கத்தை சீராக நடத்துகிறது.

இதே காந்த உடலில் விரைவாகச் சுழலும் போது அதற்கு மையச் சுழலாக உடல் மையத்தில் அமைவதே காந்தக் கருமையம். இதே இடத்தில் உயிர் ஆற்றலும் மையம் கொள் கிறது. இந்த மையம் மூளைச் செயலுக்கும், புலன்களுக்கும் உடலில் அமைந்துள்ள மற்ற எல்லா செயல்களுக்கும் தனது காந்த ஆற்றலால் தொடர்பு கொண்டு இயங்கிக் கொண்டி ருக்கிறது.

கருமையத் தொடர்பான மனிதர் வாழ்வில் ஏற்படும் வினைப் பதிவுகள், அவற்றின் அடையாளங்கள், விளைவுகள் இவற்றைப் பற்றியும் இங்கு சிந்திப்போம். கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐந்தும் ஞானேந்திரியங்கள். கை, கால், வாய், குதம், பால் குறி என்ற ஐந்தும் கர்மேந்திரியங்கள். இந்த பத்து இந்திரியங்கள் எந்த ஒன்று அசைந்தாலும் குறிப்பிட்ட இயக்கம் நடந்தாலும் உடலில் நிறைந்துள்ள சீவகாந்தத்தில் அசைவுக்குத்தக்க அலைகள் இந்த இடத்திலிருந்து எழும். அது உடல் முழுவதும் பரவி எல்லாச் செல்களிலும் மோதும். இந்த மோதுதலால் அழுத்தம் ஒலி, ஒளி, சுவை, மணம், மனம், இவையாகத் தன் மாற்றம் பெற்று இயங்கிக் கொண்டி ருக்கும் காந்த ஆற்றல் ஓரளவு அதன் தன் மாற்ற நிகழ்ச்சியில் தூண்டுதல் விரைவு கொள்கிறது.

இதே அளவு செயலிலும் இருக்கிறது. உயிர்ச்சத்துக்களின் எண்ணிக்கைக்கேற்ப அவற்றின் தற்சுழற்சியால் சீவகாந்த ஆற்றல் உற்பத்தியாகிறது. அழுத்தம் முதலிய ஐவகை தன் மாற்றங் களால் காந்த ஆற்றல் செலவா கிறது. மீதம் ஓரளவு இருப்பு ஒரு உடலில் தானியங்கி நரம்பு மண்டலம், மனவிரும்பி நரம்பு மண்டலம் இரண்டு இயக்கங் களில் இரண்டு பிரிவும் இயங்கும் போது சீவகாந்த ஆற்றல் வரைவை விடச் செலவு அதிக மாகும். இதனால் சீவகாந்த ஆற்றலின் அளவும் அழுத்தமும் குறையும் போது நரம்பு மண்ட லத்தில் விரைப்புக் குறைந்து சோர்வு உண்டாகும். அதன் விளைவாகத் தானாகவே மன விரும்பி நரம்பு மண்டல இயக்கம் நின்றுவிடும். இதுவே தூக்கமாகும்.

உடலியக்கத்தின் போது சீவகாந்தத்தின் மாற்றம் அளவோடு இருக்குமானால் மனதுக்கு அமைதி யான உணர்வு ஏற்படும். ஊக்கு விக்கப்பட்ட தன் மாற்றம் உடலி லுள்ள காந்த சக்தி இருப்பின் அளவில் மிஞ்சியிருப்பது செல வாகும்போது புலன்கள் கருவிகள் இவற்றின் செல்அடுக்கி தாங்கும் அளவுக்கு மேல் போகாம லிருந்தால் இன்ப உணர்வாகும்.

காந்த ஆற்றல் குறைந்த பட்ச அளவில் இருக்கும் போது செலவானாலும் உடல் கருவிகள் புலன்கள் தாங்கும் சக்திக்கு மேல் தன் மாற்றமோ செலவோ

ஆனாலும் செல்களில் காந்தத் துருவங்கள் சூடு பெற்று மின் குறுக்கு ஏற்பட்டுத் துன்ப உணர்வாகும்.

உணவு, உழைப்பு, உறக்கம், பாலுறவு, எண்ணம் ஆகிய ஐந்து தொழில்கள் அளவோடும் காலத்தோடும் இருக்க வேண்டும். இவற்றைவிட அலட்சியப்படுத்தினாலும் அதிகமாக அனுபவித்தாலும் முரணாக அனுபவித்தாலும் அதற்கு ஏற்ப உறுப்புக்களில் அமைந்துள்ள செல்களின் துருவங்கள் இணைப்புச் சீர் குலைந்து மின் குறுக்காகி உடல் காந்த ஆற்றல் முறை மாறிச் செலவாகும் நிலைமைக்கு ஏற்ப வலி, வியாதி, மரணம் இவை உண்டாகும்.

எந்தக் காரணத்தாலும் உடலிலுள்ள செல்களில் துருவங்கள் சீர்குலைந்தால் சுழன்று ஓடிக் கொண்டேயிருக்கும் காந்தம் அந்த இடத்தில் தேக்க முற்று மின் குறுக்காகும். அப்போது அந்த இடத்தில் வலி உணர்வு உண்டாகும். அதே வலி இடத்தால் அகன்றும் காலத்தால் நீடித்தும் இருக்குமானால் அதுதான் வியாதி. வியாதி என்றால் உடல் காந்த ஆற்றல் மின் குறுக்கால் உடலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வீணாகிக் கொண்டேயிருக்கிறது என்று பொருள்.

ஒரு வியாதியின் நன்மைக்கும் இடத்திற்கும் ஏற்ப உடலிலுள்ள சீவகாந்த ஆற்றல் ஒரு நிமிடத்திலோ ஒரு மணி நேரத்திலோ ஒரு நாளிலோ பல நாட்களிலோ பெரும் அளவில் வெளியேறி விட்டால் உறுப்புக்கள் முறையாக இயக்க முடியாது உயிர்த்துகளைக் கொண்டதே சூக்கும உடல் உடலில் சரியாக ஓடமுடியாத இந்த நிலையில் உயிர்ச்சக்தி மிகுதியாக கருமையத்தில் கூடி அங்கேயே சீவகாந்த ஆற்றல் பெருகித் தடைபட்டு மின்குறுக்காகும். கருமையம் உடைந்து போகும். வித்துக் குழம்பு பிறப்பிற்கும் முன்னும் இறப்பிற்கும் பின்னும் உயிரின் நிலை உடலை விட்டு வெளியேறி விடும். காந்தமையச் சுழலான கருமையம் நிலஉலக ஈர்ப்பு சக்தியிலிருந்து விடுபட்டு வெளியில் நிலஉலகைச் சுற்றியுள்ள காந்தக் களத்தில் மிதக்கும். இதுவே மரணம். இந்த நிலையில் உடலில் சீவகாந்த ஆற்றல் இருப்பும் இல்லை. உயிர்ச் சக்தி வெளியேறிவிட்டதால் காந்த ஆற்றல் உற்பத்தியும் இல்லை செல்களில் இருந்து துருவங்கள் செயலற்றுப் போய் ஒவ்வொரு செல்லும் உடலை விட்டுப் பிரிந்து போகும்.

இந்த விளக்கங்களினால் எந்தச் சீவனுடைய உயிரும் காலம் கணக்கிட முடியாமல் தாய் தந்தையாகி பெற்றோர் மூலமே தொடர்ந்து தலை முறைகள் பலவாகத் தொடர்ந்து வருகின்றது என்பது விளக்கப் பட்டது.




# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகள்



பாடசாலை வாழ்க்கையில் தனது வயதுக்குரிய வகுப்பிலும் பார்க்க வகுப்புக் குறைவான தரத்தில் இருப்போர் மெல்லக் கற்கும் மாணவராவார். இவர்கள் கல்வி அடைவுகளில் மிகக் குறைவாகவே சித்தியடைகின்றனர். இதனால் இவர்கள் பாட சாலை வாழ்க்கை, பாடசாலைசார் நடவடிக்கைகள் வேலைகள் செயற்பாடுகளில் அதிருப்தியும் விரக்தியும் கொண்டவராக காணப்படுகின்றனர். இதனால் தீய நடத்தைகளுக்கும் சிக்கல்களுக்கும் உள்ளாகின்றனர்.

இவற்றை நீக்கி அவர்களின் திறன்களை வெளிக்கொணர சில கற்பித்தல் முறைகளைக் கையாள்வதுடன் திட்டமிட்டுச் செயற்படுவதும் அவசியம் என உளவியலாளர் கருதுகின்றனர். வகுப்பறையில் கல்வி கற்கும் மாணவருள் ஆசிரியரின் உதவி மிகவும் அதிகமாகத் தேவைப்படுவது இவர்களுக்கேயாகும். பின்வரும் முறைகளைக் கையாள்வதன் மூலம் மெல்லக் கற்கும் மாணவரில் நல்ல அடைவுமட்டத்தைப் பெறமுடியும்.

## திட்டமிடல்



மெல்லக் கற்றல் எனும் போது தாமதமாகக் கற்றல் எனவும் பொருள்படும். பொதுவாக இவர்களுக்கு மனதை ஒருமுகப் படுத்தும் திறனும் நினைவுப் படுத்தலும் குறைவாகவே இருக்கும். இவர்களை பொறுத்த மட்டில் ஆசிரியர் தன் கற்பித்தல் நடவடிக்கைகளை நன்கு திட்ட மிடல் வேண்டும். எனவே இவர் களுக்கென செயற்பாடுகள் கொண்ட பாடவேளைகள், பொதுவான அமைதியுடன் கற்கும் பாடவேளைகள் என நேர சூசிகள் அமைக் கப்படல் வேண்டும்.

தனியே வகுப்பறையில் மட்டுமல்லாமல் வெளியிலும் கற்றல் அனுபவங்களை பெறத்தக்க வகையில் இத்திட்டமிடுதல் அமைதல்

வேண்டும். இவ்வாறு திட்டமிட்ட கற்பித்தல் முறைகள் எளிய முறையில் அமைதல் நன்று. போதனைகள் தெளிவானவையாகவும், பெரிய வாக்கியங்கள் தவிர்க்கப்படுவதும் நன்று. ஆனால் எளிமை என்னும் போது மிகவும் தேவையற்ற அளவில் எளிதாக அமைவதும் பொருத்தமற்றது. ஒரு தடவையில் ஒரு விடயம் மட்டும் வலியுறுத்தப்பட வேண்டும். பல விடயங்களைப் புகுத்த முயற்சித்தல் நல்லதல்ல. அத்துடன் விளக்கமளிக்கும் போது தொடர்ச்சியாக அல்லாமல் குறுகிய கால அவகாசம் கொடுக்கலாம். இவ்வாறில்லாமல் திணிக்க முயலும் போது மாணவர்கள் குழப்பமடையக்கூடும்.

## செயன்முறைக் கற்பித்தல்



மெல்லக் கற்கும் மாணவர்களுக்குரிய கற்பித்தல் முறையில் பயனுள்ள கற்பித்தல் முறை செயன்முறைக் கற்பித்தல் ஆகும். தாம் கற்கும் போது விடயங்களை, இடங்களை நேரடியாகச் சென்று பார்த்து அனுபவம் பெறுதல் இவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.


தபாலகம், சந்தை, வேலைத்தளங்கள், வைத்தியசாலை, நூலகம், பூங்கா போன்ற இடங்களை நேரில் கண்டு விளக்கம் பெறுதல் இவைகளுக்கு உதாரணங்களாகும். இவற்றைவிட சிறந்த கட்புல செவிப்புல உபகரணங்களை உபயோகித்தல், ஒலிப்பதிவு நாடா, சித்திரங்கள், மாதிரி வரைபுகள் என்பனவும் இவர்களுக்கேற்ப முறைகளில் அமைக்கப்பட்டு அளிக்க வேண்டும். சிறந்த கற்றல் துணைசாதனங்களை கையாளும்போது அவர்களுடைய மனதைக் கவரத்தக்கதாகவும் இலகுவாகக் கையாளக் கூடியதாகவும் உண்மையான உபகரணங்களாக இருப்பதும் நன்றாகும்.

இவை தவிர கற்றலை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நுட்பங்களையும் ஆசிரியர் கையாள வேண்டும். இவர்களிடமிருந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டுமாயின் கையாளப்படும் நுட்பங்கள் மாற்றி மாற்றி அமைக்கப்பட வேண்டும். செயற்பாடுகளில் ஈடுபட்டு அதன்மூலம் பெறக்கூடிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு அளிக்கப்படும் உபகரணங்களோ அல்லது நுட்ப முறைகளோ மிகவும் கடுமையாக அமைவதும் விரும்பத்தக்கதல்ல.

ஏனெனில் எளிமை அதிகம் எனின் மாணவர்களுக்கு அவை உந்து சக்தியாக இருக்காது. கடுமை அதிகம் எனின் வெற்றிகரமான அனுபவங்களைப் பெறமுடியாது சலிப்படைவர். எனவே மாணவரின் திறமை, உளவளர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு கவனமாக தொழில்நுட்பங்களை அமைத்தல் வேண்டும்.

## பின்னூட்டல்

மெல்லக் கற்கும் மாணவருள் பெரும்பாலானோர் முதல்நாள் கற்பித்த விடயங்களை மறந்து போகின்றனர். இதனால் மனக் கிலேசமும், விரக்தியும் அடைப வரும் உண்டு. இதற்கு குறுங்கால நினைவு பலவீனமுற்று இருப்பதும் மனதை ஒருமுகப்படுத்தும் திறனும் அவதானமும் குறைவாக இருப் பதும் காரணங்களாகும். இத்தகைய மாணவர்களுக்கு திரும்பத் திரும்பக் கூறி மனதில் பதித்தல் திரும்பவும் அனுபவங்களைப் பெறச் செய்தல் வேண்டும். மேலும் ஒரு விடயம் தொடர்பாக வேறுவேறு விதமான அணுகுமுறை களையும் எடுத்து விளக்கலாம். போதியளவு கால அவகாசம் கொடுத்தல், மனதில் பதித்தல், பாடசாலையிலும் வெளியிலும் புதிய கற்றல் உபகரணங்களின் உதவியுடன் அவர்களை ஊக்குவித்தல் என்பன அவசியமாகும். தமது வயதுடைய மாணவர்களுடான கலந்துரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்களுக்கான சந்தர்ப்பங்களையும் ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.




## வெகுமதி அளித்தல்

இவ்விதமாக எளிமையான கற்றல் நடவடிக்கைகளின் பின் அவர்களின் செயற்பாடுகளைப் பாராட்டி வெகுமதிகள், பரிசுப் பொருட்கள் அளித்தல் மிக அவசியமாகும். முதலில் மாணவர் விரும்பும் செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். இவர்கள் மட்டில் ஆசிரியர் கடுமையானவராக இல்லாது அவர்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமுடையவராக இருக்க வேண்டும். மாணவருக்கு விருப்பமான முறையில் புன்னகை, நன்றி, அக்கறை காட்டுதல், பாராட்டு, நட்புரிமை போன்றனவும் விருப்பமான விளையாட்டில் ஈடுபடவிடல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அவதானித்தல், கதை, பாட்டு போன்ற செயற்பாட்டு ரீதியான

செயற்பாடுகளில் ஈடுபடவிட்டும், இனிப்பு, படம், பொருள் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளினுடாகவும் மாணவர்களின் புதிய செயற்பாடுகளை வெற்றிகரமாக மாற்ற முடியும். ஆனால் இவ்வாறான வெகுமதிகள் அளித்தலானது கற்ற அனுபவங்களை பெற்ற உடன் தாமதமின்றி அளிக்கப்பட வேண்டும்.

## ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் பொறுப்பளித்தலும்



மெல்லக்கற்கும் மாணவரை ஆசிரியரும் ஏனைய மாணவர்களும் ஏற்றுக் கொள்ளும் தன்மை மிக அவசியமாகும். இவர்களுக்குள்ள ஏமாற்றம் தாழ்வுணர்ச்சியைப் போக்கி ஊக்கமளிக்கும் வகையில் சில பொறுப்புக்களை இவர்களுக்கு வழங்க வேண்டும். உதாரணமாக அதிபர் அலுவலகத்திற்குப் பெயர்ப்பதிவேடுகளை கொண்டு செல்லல், திருத்தப் பட்ட கொப்பிகளை வகுப்பு மாணவருக்குக் கொடுத்தல், செய்திகளைப் பரிமாறுதல், தன்னை விடக் குறைவாகக் கற்கும் மாணவருக்குக் கற்றுக் கொடுத்தல், விளையாட்டு நிகழ்ச்சிகளில் தலைமை தாங்குதல் என்பன இவர்களை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் படிகளாகும். பாடசாலையும் ஆசிரியர்களும் ஏனைய மாணவர்களும் தம்மை ஏற்றுக் கொண்டார்கள் என்ற மனநிறைவு இவர்கள் புதிய அனுபவங்களைப்பெற பெரிதும் உதவும்.

## சுயவிபரக்கோவை தயாரித்தல்

பொதுவாக மாணவர்களுக்கென சுயவிபரக் கோவை இருத்தல் அவசியமாகும். அதிலும் மெல்லக்கற்கும் மாணவருக்கான சுயவிபரக்கோவை இருப்பது மிகவும் நல்லது. இதில் குறிப்பிடும் விபரங்கள் ஆசிரியருக்குப் பரந்த அளவில் துணைபுரியும் இவர்களைப் பொறுத்த வரையில் சாதாரண மாணவருக்குக் கற்பிக்கப் பயன்படும் அதே கற்பித்தல் வேளைகளை திட்டமிட்டுச் செயற்படுத்தல் பயனுடையதாகும். இங்கு தான் சுயவிபரக்கோவை தேவைப்படுகிறது. மாணவர்களின் விபரங்கள் மதிப்பீடுகள் இங்கு குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும். மாணவரின் முன்னேற்றங்கள் பிரதானமாக குறிக்கப்பட்டு தனது திட்டம் வெற்றியளித்துள்ளதா? இல்லையா? என்ற குறிப்பும் இடம்பெற வேண்டும். இவற்றைக் கொண்டு பின்பு புதிய வேலைத்திட்டங்களை அமைக்கலாம்.

## ஆசிரியர் பெற்றோர் தொடர்பு

மெல்லக்கற்கும் மாணவர்களைப் பொறுத்தவரையில் ஆசிரியர் பெற்றோர் தொடர்பு கூடிய அளவிற்கு இருப்பது சிறந்ததாகும். அடிக்கடி தொடர்பு கொள்ளுவதன் மூலம் பிள்ளைகளின் பிரச்சினைகளை அறியவும் சரியான வழிமுறைகளை மேற்கொள்ளவும் முடியும். பெற்றோர் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்தித்து வழிப்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளனர். இன்று பிள்ளைகளை எவ்வளவு பணம் கொடுத்தாவது பாடசாலைகளில் சேர்த்தால் போதும் தமது கடமை முடிந்துவிட்டது; ஆசிரியர்கள் இனிப்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைப் பார்த்துக் கொள்வார்கள் என்ற எண்ணம் எத்தனையோ பெற்றோர் மனதில் நிறைந்துள்ளது.

இன்று தாய் தந்தை இருவரும் வேலை செய்யும் நிலையில் வீட்டில் வேலைக்காரர்களுடனும் தனித்தும் இருக்கும் பிள்ளைகளை நல்வழிப்படுத்த எவரும் இல்லாத நிலையில் பெற்றோரால் கிடைக்க வேண்டிய அன்பை இழக்கின்றனர். இத்தகைய மாணவர்களை ஆசிரியர் இனங்கண்டு வகுப்பு நேரத்தில் பாடம் ஆரம்பிக்கும் முன் ஐந்து நிமிடங்களை மாணவர்களின் நலனுக்காக ஒதுக்கி நல்லொழுக்கத்தையும் வாழ்க்கை முறைகளையும் தினமும் கற்றுக்கொடுத்து வாழ்வில் முன்னேற வழிப்படுத்துவது ஆசிரியரின் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். ஆசிரியர்களைப் போலவே பெற்றோரும் இவர்கள் மட்டில் அக்கறை உள்ளவர்களாக அவர்களால் முடியக் கூடிய அடைவுகளை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். பொருத்தமற்ற, சுமக்க முடியாத சுமைகளை மாணவர் மீது திணித்தல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட வழிகளில் மெல்லக் கற்போரை ஊக்கத்துடன் கற்கும் சாதாரண மாணவராக உருவாக்க முடியும் என்பது உறுதியாகும். இது ஆசிரியர் ஒருவருக்குக் கிடைக்கும்பெரு வெற்றியும் சாதனையுமாகும். மெல்லக் கற்கும் மாணவரை ஒரேயடியாக கைவிட்டு ஒதுக்குவதிலும் பார்க்க மேற்சொன்ன அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அவர்களிடம் இயல்பாக உள்ள திறன்களை அறிந்து அவர்களை வளர்ப்பது ஆசிரியரின் கடமையும் பாரிய பொறுப்புமாகும்.

திருமதி. விஜிதா பிரதாபன்
யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை

# அன்பார்ந்த தமிழருவி வாசகர்களே!.....

அன்பென்ற மழைதனிலே
அகிலமே நனைந்திடும்
கார்த்திகை மாதம் தனிலே
சொல் எடுத்துப்
பொருளும் தேடி
கூட்டியும் பிரித்தும்
என் கவிதைகளைத் தொகுத்து
புதுப் பாத்திரங்களைப் படைத்து
"தமிழருவி" எனும்
சஞ்சிகை தனிலே
"கவியரங்கம்" எனும்
அரங்கு ஏறி நான்
பவனி உலா வர
ஆசைப்படுகின்றேன்!

அதற்காய் வித்திட்ட
தலைப்பே
"அன்பென்ற ஆலயத்தில்
அன்னையா தந்தையா
தெய்வம்" என்பதாகும்.

"ஆசைப்பட்ட எல்லாவற்றையும்
காசிருந்தால் வாங்கலாம்
அம்மாவை வாங்கமுடியுமா"
என்றவர்கள் தந்தையை
புகழ்ந்து பாட மறந்து
விட்டார்கள் போலும் -
இதனால்
நான் தந்தையின் புகழைக்
கவியரங்கம் மூலம்
மெருகூட்ட முனைகின்றேன்

நான் இட்ட வித்தனாது
விதையாகி முளையாகி
கருத்தாகி இலையுமாகிக்
கொப்பாகி கிளையுமாகிப்
பூவாகிக் காயுமாகிக்
கனியாகி பயன்தருவது போல்
என் கவி அரங்கம் - நான்
இட்ட கவி வரிகளின் மூலம்
சமூகத்தின் மனக்கதைவை
தட்டி எழுப்பும் என
நம்பிக்கையை
முனைகின்றேன்!

இன்றைய நவீன உலகிலே
கண்ணை வெட்டி
அசைத்து நோக்கும்
இடமெங்கும்
"முதியோர் இல்லமே"
குவிந்து
காணப்படுகிறது - அதிலும்
பிள்ளைகள் தம்
முதியோரை
மறந்திடுவார்களோ
என்ற அச்சத்தில்
வருடா வருடம்
ஒக்டோபர் மாதம் தனில்
01ம் திகதி வரை
07ம் திகதி வரை
முதியோர் வாரம்
எனக் கொண்டாடி
வரும் காலம் இது!

இதுவெல்லாம் இன்றைய
கல்வி கற்ற
பார் தனிலே
உயர்ந்த எம்

சமுதாயத்திற்கு அவசியமே!
இதனை நோக்கியே
மாணவ சமுதாயத்திலே
விழிப்புணர்வை
ஊட்டுவதற்காய்
“தமிழருவி”
எனும் ஊடகத்தைக்
களமாய்ப்
பயன்படுத்தி
உணர்த்த முனைகின்றேன்!


மாணவர்களே!
பெற்றோரின் அன்பிற்கு
எத்தனை ஜென்மம்
எடுத்தாலும்
ஈடாகாது......
எம்மருகில் இருக்கும் வரை
பெறுமதி தெரியாது
எமக்கு
இல்லாத போதே
அருமை புரியும்.....
எனக் கூறி
என் கவியரங்குதனை
ஆரம்பித்து
மகிழ ஆசைப்படுகின்றேன்!

நன்றி

தலைவர் : ஆம்! தாய்ப் பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கின்றாரோ! தெரியவில்லை. அன்னையின் சிறப்புத்தனை எடுத்துரைத்த மிதுஷாவிற்கு பதில் அடி கொடுக்க வருகின்றார் லக்ஷனா.

லக்ஷனா : அன்பென்ற ஆலயத்தில் தந்தையே தெய்வம் என வாதிட வந்திருக்கும் என் தரப்புவாதிகளே முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்கப் போகிறேன் என வந்திருக்கும் எதிர் தரப்பினரே! நடுவர் அவர்களே! உங்கள் அனைவருக்கும் என் வந்தனங்களைக் கூறி – அன்பென்ற ஆலயத்தில் அன்னையா? தந்தையா? தெய்வம் என்ற வாதத்திலே தந்தையே தெய்வம் என கவிமழை மூலம் எனது கருத்தினைப் பொழிய வந்திருக்கின்றேன்.
இமயமலையின் உச்சிக்கு இரண்டு நொடியில் சென்றுவிடுவேன் நடுக்கடலின் ஆழத்திற்கு அரைநொடியில் சென்று விடுவேன் கண்காணாத கண்டத்திற்கு கண்ணிமைக்கும் நொடியில் சென்றிடுவேன் – தந்தையே! நீ இல்லாத வாழ்க்கை நிஜமாகத் தெரியவில்லை.

பூக்களின் புன்னகையை உன் முகத்தில் கண்டேன்
செந்நிற முழுநிலவை உன் நெற்றியில் கண்டேன்
ஆண்மையின் இலக்கணத்தைத் தந்தையில் கண்டேன்
பாசத்தின் அரவணைப்பை மார்பிலே கண்டேன் – உன்
புன்னகை ஒன்றே போதும் அப்பா பூ கூட குதூகலிக்கும்



இனிமையிலும் வறுமையிலும்
எம்மோடு நீ இருந்தாய்
தடைக்கல்லில் இடறுகையில்
படிக்கல்லில் நீ இருந்தாய்


பட்டப்படிப்புக்களை எமக்களித்தாய்
பள்ளியினை நீ அறிவாய்
நீ அறியாப் பள்ளி கூட
என்றொரு நாள் உன்னைப் பார்க்கும்

நட்சத்திரங்களில் வசிக்க
நான் ஆசைப்படவில்லை
சூரியனில் விளையாட நான்
இடம் கேட்கவில்லை – அப்பா
உன் அரவணைப்பில் அன்பு மழை தான் கேட்கிறேன்

ஆராரிரோ பாடிய தாய்க்கு நிகரானவரே
கண்டிப்புடன் பாசத்தையும் ஊட்டியவரே
கருவாய்க் கனிந்த காலத்தில் – நீ
உயிராய் உருகி நின்றாய்!

மகள் என்னைப் பெற்றெடுக்க
அன்னையவள் அழுது புரள
காடு மேடெல்லாம் காவிச் சென்றாய் – அப்பா
அடி அடியாய் நான் வளர
அணு அணுவாய் நீ நின்றாய்!

மருத்துவம் தெரிந்த எனக்கு
மருந்து தெரியவில்லை
சட்டம் தெரிந்த எனக்கு
சரித்திரம் தெரியவில்லை
செதுக்கத் தெரிந்த எனக்கு
செந்தமிழ் தெரியவில்லை



சிரிக்கத் தெரிந்த எனக்கு
சிந்திக்கத் தெரியவில்லை – தந்தையே!
போதிக்க நீ இல்லையே
போகத்தான் தெரியவில்லையே!

அடியெடுத்து வைத்த போது
ஆசானாக நீ இருந்தாய்
தோள்தொட்ட போது
தோழனாய் நீ இருந்தாய்
கை பிடிக்கும் நேரத்தில்
மலர் தூவி நீ நின்றாய் – நான்
கை காட்டும் நேரத்தில் – அம்மா
கண்ணீருடன் தெற்காய் நின்றாய்!

போனது நாட்கள்
புரண்டது வருடங்கள்
வாழ்விழுந்து போன செய்தி
வஞ்சி நான் செய்த வினைதானென்ன!

நிழல் படமாய் என் வீட்டு சுவர்க்கத்தில்
நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை
நிற்கதியான எனக்கு நீயே என நிதி!
இனியார் என் கதி!

கடவுள் என்று கடைசி வரை இருந்திருந்தார்
என் தந்தை எனக்கு மகனாக – வரும்வரை
வழி மீது விழி வைத்துக் காத்திருப்பேன்
அன்பென்ற ஆலயத்தில் தந்தையே தெய்வம் என்று!

நன்றி

தலைவர் : ஆம் உண்மையாகக் கூறப்போயின்
லக்ஷனா அவர்கள் தந்தை மீது
அளவு கடந்த அன்பு கொண்டவர்
அதற்கு எடுத்துக் காட்டாக இக்கவி வரிகள்
அமைந்துள்ளன! அடுத்ததாக
இல்லை இல்லை அன்பென்ற
ஆலயத்தில் அன்னையே தெய்வம் என
வாதிட வருகின்றார் நிஷாரிகா!

நிஷாரிகா : காகம் கறுப்பு என்று தெரிந்தும்
வெள்ளையென வாதிட வந்திருக்கும்
எதிர்த் தரப்பு வாதிகளே! உங்கள்
தலைவர் கூறுகின்றார்.

"இமயமலையின் உச்சிக்கு இரண்டு நொடியில் செல்லப் போகிறேன், நடுக்கடலின் ஆழத்திற்கு அரை நொடியில் சென்றிடுவேன், அதுவும் கண்காணாத கண்டத்திற்கு கண்ணிமைக்கும் வேளையில் சென்றிடுவேன்" என்றார்.

இன்னொரு முறை

"நட்சத்திரங்களில் வசிக்க
நான் ஆசைப்படவில்லை
சூரியனில் விளையாட நான்
இடம் கேட்கவில்லை" என்கிறார்.
இவர் கேட்டவுடன் இவ்வாறெல்லாம்
நடந்து விடுமோ! என்னவோ?
இவையாவும் அவரின் கற்பனையே!

நடுவரே மருத்துவம் தெரிந்தால்
மருந்து தெரியவேண்டும்
சட்டம் தெரிந்தால்
சரித்திரம் தெரிய வேண்டும்
இதை மறந்து விட்டு தந்தையே
போதிக்க நீ வேண்டும் வேண்டும்
என அழுது புலம்புகின்றார்
எனக்கு ஒன்றும் புரியவில்லை!

இன்றைய கால தந்தையர்
எத்தனை அன்னையர்க்கு
பிள்ளைகளைக் கொடுத்து விட்டு
தன் பிள்ளை இல்லை என்று கூறி
மறு திருமணம் புரிந்து விட்டு
வாழும் சமுதாயம் இது!

எவ்வாறிருப்பினும் அன்னையவள்
சமைத்து அன்பாக அரவணைத்து
பாசத்துடன் பாலூட்டி சீராட்டி
எம்மை நன்கு கல்வி கற்க வைத்து
இறுதி வரை எம்மோடு இருந்து
கஷ்டத்தினை அனுபவிப்பார்
எனவே அறுதியும் இறுதியுமாய்

கூறுகிறேன் அன்பென்ற ஆலயத்தில் அன்னையே தெய்வம் என்று!

நன்றி

தலைவர் : என்ன போட்டி! இவ்வாறல்லவா கவியரங்கம் இருக்க வேண்டும்.
மாறி மாறிப் பதிலடி வழங்குகிறார்கள்
இறுதியில் பார்ப்போம் தீர்ப்பினை!
அடுத்ததாக அன்பென்ற ஆலயத்தில் தந்தையே தெய்வம் என வாதிட வருகிறார் நவனிதா!

நவனிதா : நான் பிடித்த முயலுக்கு நான்கு கால் என்று தெரிந்தும் மூன்று என வாதிட வந்திருக்கும் – என் எதிரத்தரப்பு வாதிகளே!

பத்துமாதம் சுமப்பவர் அன்னை
என்றால் – பத்து வருடங்கள்
சுமப்பவர் தந்தை
உலகத்திலே பல உறவுகள்
இருந்தாலும் அதில் அம்மா
மட்டுமா உண்டு இல்லையே
தந்தையே இல்லாமல் தாயில்லை
தந்தை இல்லாமல் சந்ததி இல்லை.

எத்தனையோ குழந்தைகள்
எத்தனையோ யுத்தத்தில்
தாயை இழந்து தந்தையின்
அரவணைப்பில் வாழ்ந்ததும் உண்டு.
பாலூட்டி சோறூட்டி
வளர்ப்பவர் அன்னை என்றால்
சோற்றிற்கும் பாலிற்கும்
சுகம்கொடுப்பவர் தந்தை

பாலர் முதல் பள்ளி வரை
கற்பித்தவர் தந்தையன்றோ
உறங்காமல் உழைப்பதும்
குழந்தைக்குத் தானே!
தாய்ப்பால் கொடுப்பதும் அழகில்லையாம்
தாய்மை ஆவதும் சிறப்பில்லையாம் என்று
தாய்மையை இழக்கும்
பெண் ஒருவரும் தாய் தானே!

தாலாட்டும் பாடவில்லை
தாய்ப்பாலும் கொடுக்கவில்லை
தந்தையின் அன்பொன்றே
பிள்ளைக்குப் புகழிடம்!

வழி தவறி செல்லும் பிள்ளையை
வழிநடத்துவது அன்னையாம்
தந்தை வழிகாட்டினால் பிள்ளை
வழி நடந்து கொள்ளாதோ?
உழவனாக உழைப்பதுவும்
ஒரு தந்தை
அவர் சேற்றில் நடந்து
செல்வில்லையா?
இது தெரிந்தும் தெரியாத
மாதிரி எமது காதில்
பூச்சுத்துகின்றனர்!

தாய் ஒரு குழந்தைக்கு
எவ்வாறு முக்கியமோ
அதிலும் இரண்டு மடங்கு
தந்தையின் பங்கென்றும்
அன்பு என்ற ஆலயத்தில்
தந்தையே தெய்வம் என்று
முற்றுகையிட்டு அமர்கின்றேன்!
நன்றி

தலைவர் : மிகவும் சாந்தமான முறைதனிலே
தன் கருத்துக்கள் தனை
அன்னையுடன் தந்தையை ஒப்பிட்டு
வாதிட்டு அமர்ந்துள்ளார்
இறுதியாக அன்பென்ற ஆலயத்தில் அன்னையே
தெய்வம் என வாதிட ராஜ்குமார் வருகின்றார்!

ராஜ்குமார் : எதிர்த் தரப்பு வாதியினரே! சாதனைகள் விருதுகள்
பெற்ற மனிதன் வாழும்
உலகம் இது – அந்த
சாதனை வாழ்வை இமயமாக்கி
விட்டு அத்திவாரமாய் மறைந்து
நிற்பவள் அன்னைதான்
சிறப்புடையதன்றோ – என்றும்
பெருமை உடையதன்றோ!

கல்வி தனை உயிராக்கி
அறிவுதனை உயிர் நாடியாக்கி
நம்வாழ்வில் இமயம் தொட
ஏணிகளாய் உயர்ந்து நிற்கும்
அன்னை அன்பு தான்
என்றும் விடியல்களோ!

நீ இன்று நிலவாய்
ஜொலிக்கிறாய் என்றால்
அதற்கிந்த அன்னை தான்
காரணம்!

கோள்கள் கூட
குதித்தெழும் அம்மா
உன் மடியில்
தலை வைத்துத் தூங்க!
பத்துத் திங்கள்
பக்குவமாய் கருவில்
சுமந்து காத்தவள்
என் அன்னை
அன்பென்ற உறவுக்கு
அர்த்தமானவளும் என் அன்னை!

ஆலயங்கள் தேவையில்லை
அம்மா உன்னோடு வாழும் வரை
ஆன்மாக்கள் அரங்கேறும்
உன் அன்புக்கு அர்த்தம் கூற!

உன்னோடு வாழும் வரை
உறவோடு வாழ்ந்த இன்பம்
உன் பிரிவை ஏற்ற பின்பு
உயிர் பிரியும் வலி எனக்கு!

பாலூட்டி பசியோட்டும்
பாசமுள்ள அம்மா
தாலாட்டி சீராட்டும்
தாய்மையுள்ள அம்மா!

சிந்தனைத் துளிகள்
சிற்பமாய் சிறகடிக்க
அந்த வான வெளியெங்கும்
உன் பெருமை எட்ட
நாம் கண்ட சாதனைகள்
அன்னை உன் வடிவில்
அமைந்திடுமோ?
என்றும் நம் வாழ்வை

உயர்த்திடுமோ? எனவே
அன்பென்ற ஆலயத்தில்
அன்னையே தெய்வம் என
அமர்கின்றேன்!

நன்றி

தலைவர் : தன் இனிய குரல் தனிலே
இனிமையுடன் பொறுமையுடன்
தன் தாயின் புகழ் பாடி
முற்றுகையும் இட்டுள்ளார்.
இறுதியாக தன் வாதத்தினை
முன் வைக்கின்றார் லவணியா!

லவணியா : தந்தையால் பிறந்தும்
தந்தையின் அரவணைப்பிலே வாழ்ந்தும்
தந்தையை விட உயர்ந்த தெய்வம்
தாய் என வாதிட வந்திருக்கும் எதிர்த்தரப்புவாதிகளே!

ஓராயிரம் வார்த்தைக்கு
அர்த்தம் சொல்லும் எமக்கு – அந்த
"அப்பா" என்ற சொல்லுக்கு மட்டும்
அர்த்தம் தெரியவில்லையே?

ஆலமரத்திற்கு மூலம் விருதி – அதுபோல்
எம்மை விழுதுகளாய் காலம் முழுவதும் தாங்கி
நிற்பவரே!
அறுசுவை உண்டி தருபவள் அன்னை என்றால்
– அந்த
உண்டியை ஆக்குவதற்கு பணம் தருபவர் யார்
தந்தை தானே!

இறுதி யுத்தத்திலே பல குழந்தைகள்
தாயிழந்து தவித்துக் கதறியழுத போது
அவர்களின் கண்ணீரைத் துடைத்து விட்டு
தாயன்பை வழங்கியவர் தந்தை தானே
அவரின்றி வேறு யார்?

முடி நரைத்து தடி பிடித்துத்
தள்ளாடி நடந்து விடும் வேளையிலும்
தன்னழகைப் பாராது – தன்
பிள்ளையழகைப் பார்த்து மகிழ்வார் தந்தை

வெறுமனே குழந்தைகளை மட்டும்பெற்று விட்டு
குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு
வேலைக்குச்செல்ல அடம்பிடிக்கும் தாய்மையினம் எத்தனை?
தன் பிள்ளை வாழட்டும் என தன் வேலை பாராது
நாள் முழுவதும் காவல்காக்கும் தந்தையினம் எத்தனை?

உம்தோளோடு சாய்கையிலே தீர்ந்துவிடும் துன்பங்கள்
உம் மார்பிலே தூங்கையிலே பறந்து விடும் துயரங்கள்
தந்தையாய் அரவணைக்க தாயாய் பராமரிக்க
சகோதரனாய் பிரிவு காட்ட நண்பனாய் நல்லனசெய்ய – நம்
தந்தையை விட்டால் தரணியிலே வேறு யாருளர்?

காலமெல்லாம் என்னுடன் கூடவே இருந்தீர் – நான்
காணும் இடமெல்லாம் கொடுக்கும் வேளையிலே ஏன் தான்
கை பிடித்துக் கொடுக்கும் வேளையிலே ஏன் தான்
கண்ணீருடன் மனமுருகி நின்றீர் அப்பா!

மாணவனே! மனிதனே!
இதயத்தில் இதையும் குறித்துக் கொள்
தந்தை இருந்தால் தான் தாய் உண்டாவாள்
தாய் உண்டானால் தான் அன்பு பிறக்கும்
அன்பு இருந்தால் தான் மனித நேயம் பிறக்கும்
மனிதன் மனிதனாக வாழ மூல காரணம் தந்தையே!

இமயத்தின் பாதியை இழந்து விட்டோம்,
இலங்கையின் கால் வாசியைக் கடந்து விட்டோம்
வாழ்க்கையின் அரைவாசியையும் முடித்து விட்டோம்
ஏன்தெரியுமா நண்பர்களே?
நாம் அனைவரும் தந்தையின் அன்புதனை
இழந்து விட்டதனால் – எனவே
உறுதியும் இறுதியுமாய் கூறி அமைகின்றேன்
"அன்பென்ற ஆலயத்தில் தந்தையே தெய்வம்" என்று

நன்றி

நடுவர் : அன்பென்ற ஆலயத்தில் அன்னையா
தந்தையா தெய்வம் என்ற
வாதத்தின் தந்தையினை தெய்வம் என
தொகுப்புரை வழங்க வருகின்றார் லக்ஷனா!

லக்ஷனா : மீண்டும் ஒருமுறை வணக்கத்தினைக் கூறி என்
தொகுப்பினைக் கூற முனைகின்றேன்.
உன்னுடைய இமய வளர்ச்சிக்கு
இந்த அன்னைக்கும் பங்கிருக்கிறதல்லவா!
அருவி அழகான நதியாகி பிறகு
ஊற்றுக்களை உதாசீனம் செய்யலாமா?
நீ நதி! அன்னை ஊற்று என்றவர்களுக்கு
தந்தை என்பவர் வாய்க்கால் போல நீரை
கொண்டு செல்லும் வண்ணம் உன்னை
கொண்டு செல்கிறாரே மறந்து விட்டீர் போலும்!

தந்தை நெறிப்படுத்தி சீராக்கி விட்ட பின்
அவரைத் தூக்கி எறியும் சமூகமும் ஊரோ
தாய் இன்றி சேய் வளரவில்லை போலும்
எத்தனை எத்தனை குழந்தைகள்
தாயைப் பிரிந்து தந்தையின் அரவணைப்பிலே
பாலின்றி வெறும் பாசத்தால் வளர்ந்த பிள்ளையை
நீர் அறிவீரோ! எனக்குப் புரியவில்லை.

எதிர்த் தரப்பு வாதிகளே!
இன்றைய கால அன்னையோ
தன்னழகுகெட்டு விடும் என்பதற்காக
தாய்ப்பால் கொடுப்பதற்குப் பதில்
அங்கரைக் கரைத்து வெறுமனே பருக்கிவிட்டு
தாலாட்டுப் பாடுவதற்குப் பதில் வானொலியும்
போட்டு விட்டு வாழ்ந்து வரும் காலம் இது!

கல்விதனை உயிராக்கி
அறிவுதனை உயிர் நாடியாக்கி
நம் வாழ்வில் இமயம் தொட
ஏணிகளாய் உயர்ந்து நிற்கும்
தந்தை அன்பு தான் என்றும்! – என்

எதிர்க் கட்சியினருக்கு புரியவில்லை போலும்!
எதிர்த் தரப்பு வாதியினர் கூறினார்
அம்மா வாழும் இல்லத்தில் அன்பு உளதாம்
அம்மாவின் அரவணைப்பில் சுகம் உண்டாம்–ஏன்
தந்தையின் அரவணைப்பால் சுகம் கிடையாதோ
பதில் கூறுங்கள்

பாலர் முதல் பல்கலைக் கழகம் வரை
படிக்க வைத்தவர் தந்தை
தன் துன்பத்தை மறந்து
எம்மை படிக்க வைத்தவர் தந்தை!

உறங்காமல் எனக்காக
அல்லும் பகலும் பாராது
கண்ணும் கருத்துமாய் இருந்து
கடமையை கச்சிதமாய் முடித்து
வியர்வை தனைத் துடைத்து விட்டு
களைப்பு தனை எண்ணாது
சிக்கனத்தைத் தினம் பிடித்து
ஊர் ஊராய் அலைந்து திரிந்து
உழைத்த பணத்தை சேமித்து

எல்லோரிடம் பல்லிழித்து
கை நீட்டிப் பிச்சை கேட்டு
பட்டினியில் தினம்வாடி
நான் கற்க உழைத்தாயே – உனக்கு
நான் ஏழு பிறப்பு எடுத்து
கடமையைச் செய்தாலும் அதற்கு
ஈடாகாது! எனவே அறுதியும் இறுதியுமாய் கூறுகின்றேன்
அன்பென்ற ஆலயத்தில்
தந்தையே தெய்வம் என்று!

நன்றி

நடுவர் : ஆஹா! என்ன அழகு, என்ன அழகு
எத்தனை சொல்லழகு
அடுத்து தனது தொகுப்பினை வழங்க
முனைகின்றார் மிதுஷா!

மிதுஷா : மீண்டும் தாயின் புகழ் பாடுவதில்
பெருமையடைகின்றேன்!

தன் சுமை தீர்ந்தது என எண்ணி
மகிழும் தந்தை சமுதாயத்திலே
தந்தையைத் தூக்கிப் பாடியுள்ளார்கள்
ஆனால் தாயானவள்
அப்படியல்ல என்பதனை
மறந்திடாதீர்கள்!
எதிர்த் தரப்பு வாதிகள் கூறினார்கள்
தந்தை இல்லையேல் தாய் இல்லை
என்று ஆனால் அத்தாய்
காட்டித் தான் – ஒரு
குழந்தைக்குத் தெரியும்
தன் தந்தையார் யார் என்று

எதிர்த் தரப்பு வாதிகளையும்
பெற்றது தாய் தான்
தந்தை இல்லையே!
எந்தவொரு தந்தையும்
தன் பிள்ளைகளைச்
சுமையாகவே நினைப்பர் – ஆனால்
தாய் சுகமாக நினைப்பாள்!

தாய்ப்பால் இன்றி
வெறும் பாசத்தால்
வளர்ந்த பிள்ளை
என்றுமே
முரட்டுத் தனமாய்
செயற்படும் என்பதில்
எதுவித ஐயமுமில்லை!
"தாயிற் சிறந்ததோர்
கோயிலுமில்லை" என்றார்
ஒளவைப் பிராட்டியார்
அதை எதிர்த் தரப்பு வாதிகள்
புரிந்து கொள்ளவில்லை போலும்!

கை பிடிக்கும் நேரத்திலே
மலர்தூவி நீ நின்றாய் – நான்
கை காட்டும் நேரத்தில்
அப்பா.....
கண்ணீருடன் தெற்காய்
நின்றாய்? என
தந்தையைப் புகழ்கிறார்
ஆனால் – அவருக்குத்
தெரியாது போல்
தந்தைமார்
பெண் பிள்ளைகளை
தொல்லையாகவே
நினைக்கிறார்கள் என்று!
அவர்களின்
கவலையில் கண்ணீர்
வருவதில்லை!
மறந்து விடாதீர்கள்

தாய் என்ற உறவே மேலானது
உறவுகளில் முதலிடம் – தாய்
உதிரத்தைக் கரைத்து பாலாய்
தன் பிள்ளைக்கு ஊட்டுவாள்
எனவே அன்பென்ற ஆலயத்தில் அன்னையே
தெய்வம் என முற்றுகை இடுகிறேன்!
நன்றி

தலைவர் : என்ன அழகு! எத்தனை அழகு!
சொல் அழகு!
இக் கவியரங்கு தனிலே!

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
என்றார்கள் எமது முன்னோர்கள்
எமது வாழ்க்கையிலே
தாயானவள் வலது கண்ணாகவும்

தந்தையானவர்
இடது கண்ணாகவும்
திகழ்ந்து விளங்குகிறார்கள்!
இந்து சமயத்திலே
உமாதேவி தன் கணவனில்
பாதியிடம் பெற
கௌரி நோன்பினை நோற்று
சிவனிடம் வரம் பெற்று
தன் வேண்டுதலை
நிறைவேற்றியவளும்
ஒரு பெண்ணே!
இருவரும் இணைந்த
உருவமே
"அர்த்தநாரீஸ்வரர்"
என்பதாகும்!

ஒரு இல்லற வாழ்விலே
ஒரு ஆணும்
பெண்ணும்
இணைவது போல்
ஒரு பிள்ளையின்
வாழ்வுதனிலே
தாயும் தந்தையும்
இணைந்து
இருத்தலே
சிறந்ததாகும்!
மாணவர்களே!
இன்றைய சமுதாய
முதியோர் இல்லங்களை
குறைக்க
முயற்சிக்க வேண்டும்!

சமுதாயத்திலே
விழிர்ப்புணர்வுகளை
ஊட்டி எமதுள
மூதாதையர்களை
பேணிப்பாதுகாத்து
அவர்களின்
அனுபவங்கள் தனை
பெற்று
நாட்டின் முன்னேற்ற
பாதைக்கு நல்ல
வழிகள் தனை
வித்திட்டுவோம்!

பெற்றோருடன்
கூடி வாழ்ந்து
இன்ப துன்பங்களை
தினம் பகிர்ந்து
நல்ல பிரஜைகளாய்
நாட்டின் முன்னேற்றத்திற்காய்
உழைத்திடுவோம்! – எனவே
அன்பென்ற ஆலயத்தில்
அன்னையும் தந்தையும்
தெய்வங்களே! எனக்கூறி
கவியரங்கினை நிறைவு
செய்கிறேன்

நன்றி

ஆக்கம் :
லக்ஷனா ஸ்ரீரங்கநாதன்
தரம் 11C
யா/வயாவிளான் மத்திய
மகா வித்தியாலயம்.






குடும்பம் என்பது சமூகத்தின் கூறுகளில் மிகமுக்கியமான தொன்றாகும். தனி மனிதர்களின் இணைப்பாலே குடும்பம் என்ற அலகு தோற்றம் பெறுகின்றது. ஓர் சமூகத்தில் பல தரப்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. இக் குடும்பங்களை பல்வேறு காரணிகளைக் கொண்டு தரப்படுத்தி உள்ளனர். உதாரணமாக பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு வறிய குடும்பங்கள், நடுத்தரக் குடும்பங்கள், பணக்காரக் குடும்பங்கள் மேலும் கூட்டுக் குடும்பங்கள், தனிக் குடும்பங்கள் என்று பல்வேறாகப் பிரிக்கின்றனர்.

ஆசியக் குடும்பங்களானது பிரதானமாகத் தனி மனித ஒழுக்கத்தை நிலை நிறுத்துவதாக அமைகின்றன. ஒரு தனிமனிதனது ஒழுக்கத்தில் செல்வாக்குச் செலுத்தி அம்மனிதனின் சமூக நிலையைத் தீர்மானிப்பதில் குடும்பங்கள் பெரிதும் பங்களிப்புச் செலுத்துகின்றன. இத்தகைய குடும்பங்களை கருத்திற் கொண்டே அக் குடும்பங்கள் காணப்படும் சமூகத்தின் நிலை தீர்மானிக்கப்படுகின்றது. மேற்கத்தைய குடும்பங்கள் தனிப்பட்ட நபர்களுக்குக் கூடுதலான உரிமைகளைக் கொண்டுள்ளன. இது குடும்பத்தின் ஒற்றுமையை சீர்குலைப்பதாக அமைந்து விடுகின்ற சந்தரப்பங்களும் உண்டு. எப்படியிருந்தாலும் தற்பொழுது இலங்கையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், முதியோர்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெற்ற வண்ணமே உள்ளன. இத்தகைய வன்முறையானது மருத்துவ பொலிஸ் அறிக்கைகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் குடும்ப ஆற்றுப்படுத்துகையில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அறிக்கையில் இருந்து தினம் தோறும் சுட்டிக் காட்டப்படுகின்றது. மேலும் ஓர் தனிப்பட்ட மனிதனில் ஏற்படும் சிறு மாற்றமே அந்தக் குடும்ப அங்கத்தவர்களைப் பாதிக்கின்ற தன்மை காணப்படுகின்றது.

குடும்பமானது பிரதானமாக வீட்டுச் சூழலை அடிப்படையாகக் கொண்டு கணவன், மனைவி, பிள்ளைகள்,

மூத்தோர்கள் வாழுகின்ற ஒரு சீரான வாழ்க்கையை குறிக்கின்றது. இத்தகைய குடும்பத்தில் வன்முறைகள் புகுத்தப்படும் போது அங்கு பல தரப்பட்டவர்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதோடு இது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி சமூக கட்டுப்பாட்டை சீர்குலைக்க வழியமைக்கின்றது. ஆகவே தான் குடும்பங்கள் சமூக ஒழுக்கத்தைத் தீர்மானிப்பதாகக் காணப்படுகின்றன. இத்தகைய குடும்பங்களில் வன்முறைகள் இடம்பெறுவதினைத் தடுப்பதற்காக அரசுகள் பலமாறுபட்ட நடவடிக்கைகளைக் மேற்கொண்டு வந்துள்ளன.

வன்முறை என்று கூறும் போது ஓர் உயிர் மீது இன்னொரு உயிர் தனது விருப்பத்தை, செயற்பாடுகளைச் செய்யச் சொல்லித் திணித்தலாகும். அதுமட்டுமின்றி அடித்தல், தீய சொற்களால் திட்டல், மனதைக் காயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுதல், பாலியல் ரீதியான செயற்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கி நிற்கின்றது. அத்தகைய வன்முறையானது உடல் ரீதியான வன்முறைகள், உளரீதியான வன்முறைகள் என்று காணப் படுகின்றன.

குடும்பத்தில் கூடுதலாக வன்முறைக்கு உட்படுத்தப் படுவர்களாகப் பெண்கள், பிள்ளைகள், முதியோர்கள் காணப்படுகின்றனர். ஓர் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவனாக பிரதானமாக தந்தை அல்லது கணவன் காணப்படுகின்றார். தந்தையற்ற நிலையில் குடும்பத்தின் மூத்த மகனும் கணவனற்ற நிலையில் பெண்ணும் இருக்கிறார்கள். அத்தருணத்தில் பார்க்கும் பொழுது பெண்ணின் விருப்பு வெறுப்புக்கள் என்பன இரண்டாம் பட்சமாகத் தான் காணப்படுவதை அவதானிக்கலாம்.

பிரதானமாக குடும்ப அலகின் வன்முறைகளானது கணவனால் மனைவி மீதும், தந்தையால் தன் பிள்ளைகள் மீதும், தமையனால் ஏனைய சகோதரர்கள் மீதும், பெற்றோர்களால் தனது பிள்ளைகள், உறவுகள் மீதும் தோற்றுவிக்கப்படுகின்றது. இத்தகைய வன்முறைகளானது குடும்ப உறவுகளுக்கிடையே பாரிய தாக்கத்தை நொடிப் பொழுதிலும் காலம் தாழ்த்தியும் ஏற்படுத்துபவைகளாகக் காணப்படுகின்றன. குடும்பத்தில் வன்முறைகள் இடம்பெற பல காரணங்கள் வழி அமைக்கின்றன. அந்த வகையில் இந்த வன்முறைகளை பிரதானமாக

1. பெண், முதியவர் துஷ்பிரயோகம்
2. கணவன் மனைவிக்கு இடையே துஷ்பிரயோகம்
3. சிறுவர் துஷ்பிரயோகம்

என்ற மூன்று கட்டங்களில் உள்ளடங்கக் கூடியதாக உள்ளது.

இத்தகைய வன்முறைகள் குடும்பத்தில் ஏற்பட்டு, சமூகக் கட்டமைப்பைப் பெரிதும் பாதிப்பதாக அமைகின்றன. இவைகள் பிரதான சமூக பொருளாதார அரசியல் காரணிகளின் அடிப்படையில் தோற்றம் பெறுகின்றன.

குடும்பத்தில், சிறுவர்கள் மீது ஏற்படுகின்ற துஷ்பிர யோகங்களை அவதானிப்போமானால் "இன்றைய சிறுவர் நாட்டின் நாளைய தலைவர்" என்று கூறுவார்கள். இத்தகைய எதிர்கால தலைவர்களை வளர்த்துப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு குடும்பத்தவரினதும் பொறுப்பாகும். ஆகவே குழந்தைகள் மீதான வன்முறைகள் தடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். பிள்ளைகள்/ சிறுவர்கள் மீது இடம்பெறும் வன் முறைகளை அந்தப் பிள்ளைகள் அறிந்திருக்க மாட்டார்கள் என்பது தான் பரிதாபமான நிலையாகும்.


> **"இன்றைய சிறுவர் நாட்டின் நாளைய தலைவர்" என்று கூறுவார்கள். இத்தகைய எதிர்கால தலைவர்களை வளர்த்துப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு குடும்பத்தவரினதும் பொறுப்பாகும். ஆகவே குழந்தைகள் மீதான வன்முறைகள் தடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். பிள்ளைகள்/ சிறுவர்கள் மீது இடம்பெறும் வன்முறைகளை அந்தப் பிள்ளைகள் அறிந்திருக்க மாட்டார்கள் என்பது தான் பரிதாபமான நிலையாகும்.**

இத்தகைய சிறுவர்கள் மீதான வன்முறைகள் குடும்பத்தில் இருந்து ஆரம்பித்து சமூகத்திற்கு செல்கின்றன. இவை பல்வேறு வடிவங்களில் குடும்பத்தில் ஏற்படுகின்றன. அவையாவன.

1. சிறுவர்கள் மீது பெற்றோர்கள், குடும்ப அங்கத்தவர்கள்அக்கறை காட்டாமை.
2. சிறுவர்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பெற்றுக் கொடுக்காமை, (பொழுதுபோக்குகளைத் தடுத்தல்)
3. கல்வி கற்க வழியமைக்காது அதற்கு தடையாகக் காணப்படல்.
4. பெற்றோர்கள் பிள்ளைகளிடையே பாகுபாடு காட்டல்
5. சிறுவர்களை குடும்ப வறுமை காரணமாக தங்களது வீட்டிலும் பிறர் வீட்டிலும் வேலைக்கமர்த்துதல்.
6. சிறுவர்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், பாலியல் வல்லுறவுக்குத் தூண்டல்.
7. பெற்றோர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினை, ஏனைய பிரச்சினைகள் மூலம் ஏற்படும் விரக்தியை சிறுவர்கள் மீது காட்டல்.

8. சிறுவர்களின் உடல் உறுப்புக்களை குடும்ப வறுமை காரணமாக விற்பதற்குத் துணைபோதல்
9. யுத்தப் பாதிப்புக்கள், வறுமை, வீடில்லாமை, அகதிவாழ்வு, உடலில் ஏற்படும் காயங்கள், அன்புக்குரியவர்களின் இறப்புக்கள்.

இத்தகைய காரணங்களினால் சிறுவர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டு ஒரு பெறுமதியற்ற செல்லாக் காசாகக் காணப் படுகின்றனர். இனி இத்தகைய காரணங்களில் சிலதை ஆராய முற்படுவோம்.



சிறுவர்களைப் பாலியல் உறவுகளுக்கு உட்படுத்தல் அல்லது அதற்குத் தூண்டுதல் போன்ற விடயத்தை உற்று நோக்கினால், ஒரு குடும்பத்தில் காணப்படும் பெற்றோர்கள் தங்களது பிள்ளை களைத் தாங்களே பாலியல் வன் முறைக்கு உட்படுத்துகின்ற, தூண்டு கின்ற சம்பவங்கள் உள்ளன. அத்தோடு குடும்பத்தில் காணப் படும் வயதில் முதிர்ந்தோர்கள் சிறுவர்களைக் குறிப்பாகப் பெண் பிள்ளைகளை பாலியல் உறவுக்கு உட்படுத்தல். அல்லது சிறுவர் களுக்கு பிடிக்காத வகையில் சிறுவர்களை நடாத்தல் (சிறுவர்களை வயிற்றில் தடவச் சொல்லல், தகாத வார்த்தைகளைக் கைக் கொள்ளல்) அத்தோடு அந்தப் பிள்ளைகளின் குடும்ப உறவினர்கள் சில சமயங்களில் காம உணர்வுகளுடன் சிறுவர்களை அன்பு காட்டுகின்றோம் என்ற போர்வையில் அச் சிறுவர்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துகின்றனர். இது தற்காலத்தில் சிறுவர்கள் மீது ஏற்படுத்தப்படுகின்ற வன்முறைகளின் கொடூரமானதாகக் காணப்படுவதோடு பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இரண்டாவது முக்கிய பிரச்சினையாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்தலை நான் எடுத்துரைக்கின்றேன். வறுமையின் காரணமாக பல குடும்பங்கள் தங்களது பிள்ளைகளைத் தங்கள் வீட்டிலேயே ஒரு வேலைக்காரர் போல் நடத்துகின்ற நிலை காணப் படுகின்றது. அத்தோடு அப்பிள்ளைகளை பிறர் வீடுகளிலும் கடைகளிலும் பல இடங்களிலும் வேலைக்கு

அமர்த்துகின்றனர். இத்தகைய சிறுவர்கள் தங்களைப் போன்ற ஏனைய சாதாரண சிறுவர்கள் அனுபவிக்கின்ற அடிப்படை வசதிகளைக் கூட அனுபவிக்க நாதியற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட இடங்களில் பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்து உடலாலும், உளவளவிலும் பாதிக்கப் படுகின்றனர். அத்தோடு இத்தகைய வறிய குடும்பங்களில் காணப் படும் சிறுவர்கள் தங்களது இலட்சியம், விருப்பு வெறுப்புக்களை துறந்து வாழ்கின்ற நிலைக்குத் தள்ளப்படுகிறனர்.

இத்தகைய தன்மையானது ஆசிய, ஆபிரிக்க அபிவிருத்தி அடையாத நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள குடும்பங்களில் பெருமளவில் காணப்படுகின்றது. சிறுவர்கள் வேலைக்கமர்த்தலைத் தடுப்பதற்காக அரசு அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

சில பெற்றோர்கள் தாய் தந்தையற்ற பிள்ளைகளைத் தத்தெடுத்து தங்களது வீடுகளில் ஊதியமற்ற வேலைக்காரர் போல நடாத்துகின்றனர். அதே சமயம் அவர்களது கௌரவத்திற்காக அச் சிறுவர்களை சமூகத்திற்கு நற்பராமரிப்பிற்கு உட்பட்டுள்ள சிறுவர் போல் காட்டிக் கொள்வார்.

பெற்றோர்கள் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் சிறுவர் களுக்கிடையே பாகுபாடு காட்டுகின்ற தன்மையானது சிறுவர்கள் மனதைப் பாதிக்கச் செய்கின்ற தன்மையை உண்டு பண்ணி விடுகின்றது. இத் தன்மையை குறைக்க குடும்பம் என்ற சூழலே உகந்தது. ஆகவே குடும்பத்தவர்களின் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை கொண்டு வருவதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

சிறுவர்களுக்கு மிகவும் அடிப்படையாகத் தேவைப்படுவது பெற்றோரின் அன்பு. குறிப்பாக தாயன்பு. ஆனால் தற்கால நவீன உலகத்தில் சிறுவர்களைப் பராமரிப்பது, அன்பு காட்டுவது என்பன அருகிக் கொண்டே செல்கின்றன. தற்போதைய இயந்திர வாழ்க்கையில் செலவுகள், தேவைகள் என்பன அதிகரித்துக் கொண்டே செல்கின்ற பொழுது ஒவ்வொரு குடும்பத்திலும் ஆணும் பெண்ணும் வேலை பார்க்க வேண்டிய தருணத்தில் பிள்ளைகளை பராமரிப்பதற்காக வீட்டுக்கு வேலைக்காரர்களை நியமிக்கின்ற தன்மை காணப்படுகின்றது. அத்தோடு வேலை செய்யுமிடங்களில் ஏற்படுகின்ற பிரச்சினையில் கணவன் – மனைவிக்கிடையே

உண்டாகும் பிரச்சினையில் ஏற்படுகின்ற பாதிப்பைத் தங்களது சிறுவர்கள் அல்லது பிள்ளைகள் மீது காட்டுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. அத்தோடு தங்களது பிள்ளைகளோடு செல வழிப்பதற்காகச் சிறிதளவு நேரத்தையும் ஒதுக்காத தன்மையும் காணப்படுகின்றது. இத்தகைய பல காரணிகளினால் பெற்றோ ருக்கும் பிள்ளைகளுக்குமிடையே இடைவெளி விசாலமாகின்றது. இது எதிர்காலத்தில் தன் பெற்றோர்களை பராமரிக்கத் தவறுகின்ற நிலைக்கு வழியமைக்கின்றது.

தொகுத்துப் பார்க்கையில் குடும்பங்கள் சிறுவர்கள் வாழ்க்கையில் அதிகமாக செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே ஒரு பிள்ளையின் எதிர்காலம் அவர்களது வீட்டுச் சூழலை மையமாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. ஆகவே சிறுவர்களைப் பேண உகந்த வீட்டுச் சூழலை உண்டு பண்ணல் அவசியமானதொன்றாகும். இக் குடும்பங்களில் சிறுவர் வன்முறை உண்டு பண்ணாது அவ் அங்கத்தவர்கள் நடந்து கொள்ள போதியளவு விழிப்புணர்வை உண்டு பண்ணல் வேண்டும்.

இவை தொடர்பான ஏற்பாடுகளை ஆராயப் போனால் குடும்ப அங்கத்தவர்களிற்கு எதிராக உடல் ரீதியான வன்முறைகள் இலங்கைக் குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் ஓர் குற்ற நடத்தையாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு சிறுவரின் பெற்றோர் அவர்களை அடிக்க எந்த விதமான சட்ட உரிமையும் இல்லை. அத்தோடு இது கணவன் தன் மனைவிக்கு அடிப்பதற்கும் எந்தவொரு உரிமையும் வழங்கவில்லை. ஆனால் தற்காலத்தில் இப்படிப்பட்ட ஏதும் சம்பவங்களில் ஈடுபட்டால் அதற்கு பாதுகாப்பாக குடும்ப ஒழுக்க நலனுக்காகச் செய்தேன் என்பதைக் காட்ட முடியாது. ஆனாலும் ஒழுக்க ரீதியாக பிள்ளைகளைத் தண்டிக்க உள் வரையறைக்குட்பட்ட வண்ணமே உரிமை உள்ளது.

*Children & Young person's Ordinance (1939)* சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனால் இது நடைமுறையில் காணப்படுதில்லை. தற்காலத்தில் இலங்கைக் குற்றவியல் சட்டக்கோவையில் நிரந்தரமாக சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் ஒரு குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு துன்புறுத்தல், காயம் விளைவித்த *(Hurt)* லின் வரைவிலக்கணம் விரிவாக்கப்பட்டுள்ளது. குடும்ப வன்முறைகள் தொடர்பான குற்றங்கள் இலங்கைக் குற்றவியல் சட்டக்கோவைக் குற்றங்களாக கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகக் காணப்படுகின்றமை சிறப்பானதாகும்.

50 வருடங்களுக்கு மேலாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள சிறுவர்களின் நலன்களைப் பாதுகாக்க *Part IV of the Asoption of children ordinance (1941)* இருந்த பொழுதிலும் இன்னும் இது சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆகவே குடும்பங்களில் ஏற்படுகின்ற சிறுவர் துஷ்பிர யோகங்களைத் தடுப்பதற்கு உருவாக்கப்பட்ட சட்டங்கள் கால மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

வே. பிரசாந்தன்
இறுதியாண்டு சட்ட மாணவன்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## நன்கு யோசித்து செயலாற்ற வேண்டும்



நான்கு பேர் ஒரு குருவிடம் கற்க வேண்டிய கல்வியை முறையாகக் கற்றனர். பின்னர் குருவிடம் விடைபெற்றுச் சென்றனர். அப்போது கல்வி அறி வில்லாத உலகறிவுடைய ஒருவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

இந்த ஐவரும் சென்று கொண்டிருக்கையில் வழியில் ஒரு சிங்கத்தின் இறந்த எலும்புக் கூட்டைக் கண்டார்கள். மந்திரவாதிக் குருவிடம் கற்ற மந்திர வித்தைகளைப் பிரயோகித்து இறந்து கிடந்த எலும்பாகிய கூட்டிற்குச் சதை, நரம்பு முதலியவற்றை உண்டாக்கி சிங்கத்தை உயிருடன் எழும்ப அந்த நால்வரும் திட்டம் கொண்டார்கள். படிப்பறிவில்லாத அந்த ஒருவன் உலகறிவைக் கொண்டு சிங்கம் பொல்லாத மிருகம், மனிதரைக் கொன்று தின்றுவிடும் அதனால் சிங்கத்திற்கு உயிர் கொடுத்து எழுப்ப வேண்டாமென மன்றாடினான். ஆனால் குருவித்தை கற்ற அந்த நால்வரும் உலகறிவுடையவனின் சொல்லை மீறிச் சிங்கத்திற்கு வேண்டிய அங்கங்களும் உயிரும் கொடுத்து எழும்பினார்கள். இதனைக் கண்ட உலகறிவு படைத்த மனிதன் உயிர் பிழைக்க வேண்டி மரத்திலேறிவிட்டான். ஆனால் சிங்கத்தை எழுப்பிய நால்வரும் மரம் ஏறத் தெரியாமையால் அவர்களைச் சிங்கம் கொன்று தின்றுவிட்டுச் சென்றது.

**கல்வி கற்றால் மட்டும் போதாது உலகறிவும் வேண்டும்.**

திலகவதி

# நூல் வெளியீட்டு விழா

திருமதி. உதயலதா நவதீசனின் க.பொ.த உ/த தமிழ் இலக்கணம் ஐந்நூறு பல்தேர்வு வினாவிடைகளும் சுருக்க வினாவிடைகளும் நூல் வெளியீட்டு விழா யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் 28.05.2012 அன்று ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. ந. செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.



இவ்விழாவில் யா/ அனலை தீவு சதாசிவ வித்தியாலயத்தின் ஆசிரியர் திரு. இ. இராஜகோபால் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திரு. வே. சிவசுந்தரம் அவர்கள் ஆசியுரை வழங்க, சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை எங்கரசு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தலைமை யுரையைத் தொடர்ந்து வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.இராஜேந்திரன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார்கள். அவர் தமது வெளியீட்டுரையில் இலக்கணத்தின் அவசியம், இந்நூலின் இன்றைய தேவை என்பன கூறி இந்நூலாக்க முயற்சியைப் பெரிதும் பாராட்டி வாழ்த்தினார்.

இந்நூலின் முதன்மைப் பிரதிகளை யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. த. கலாமணி அவர்களும், யாழ் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி. ஜெ. இராஜநாயகம் அவர்களும் யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. வ. நவரத்தினம் அவர்களும் 'தமிழருவி' நிரவாக இயக்குனர் உதவி ஆசிரியர் திரு.த.கணேசமூர்த்தி அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து நூலின் மதிப்பீட்டுரையை 'தமிழருவி' பிரதம ஆசிரியரும் யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆசிரியருமான திரு. பா. மகாலிங்கசிவம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

நூலாசிரியர் திருமதி. உதயலதா நவதீசன் தனது ஏற்புரையில் மாணவரின் இலக்கணத் தேவையறிந்து அவர்களது இலக்கணப் பயிற்சிக்கும், பரீட்சைக்குமாக இந் நூலை ஆக்கி வெளியிட்டதாகக் கூறினார். ஈற்றில் பாடசாலையின் ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு. சூ. திலகதீபன் ஆசிரியரின் நன்றியுரை யுடன் நூல் வெளியீட்டு விழா நிறைவு பெற்றது.



# இன்றைய மாணவர்களில் வாசிப்பின் நிலை

**- கட்டுரைப் போட்டி**

"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆன்றோர் வாக்கு. கிரமமான வாசிப்பின் மூலம் சமூக, பொருளாதார, அரசியல், மருத்துவ, விளையாட்டு, நாட்டு நடப்பு, வெளி நாட்டு செய்திகள் போன்ற பல்வேறு துறைகளில் பரந்த அறிவைப் பெறமுடியும். அத்துடன் விஞ்ஞான,

**மாணவனுக்கு வாசிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு உடல், உள நலத்தையும் மேம்படுத்தும் செயல் திறனையும் அபிவிருத்தி செய்யும். உலக மக்களின் மொழி, சமய, பண்பாட்டு விழுமியங்களையும் பொருளாதார அபிவிருத்திகளையும் அறிய உதவும். வாசிப்பு அதிகரிக்க அதிகரிக்க சிறந்த சிந்தனைகளும் கருத்துக்களும் மனதில் தோன்றும்.**

சமய, கலை, இலக்கிய வரலாற்றுக் கண்டுபிடிப்பு, தொன்மைக் கால மனித வாழ்வியல் வளர்ச்சி வரலாறு போன்ற பல்துறைகளில் அறிஞர்கள், மேதைகள், தலைவர்கள், கவிஞர்கள், பன்மொழிப் புலவர்கள் போன்றோரை உருவாக்குவதும் இவ்வாசிப்பின் மூலமேயாகும்.

சுமார் ஐயாயிரமாண்டுகளுக்கு முன்னர் குருகுலக் கற்கை நெறிமூலம் மக்கள் அறிவைத் தேடிக் கொண்டனர். பின்பு பனை ஓலையில் எழுதி வாசித்தார்கள். அதன் பின்பு ஆன்மீகத்தை மேம்படுத்தவும் வளமான வாழ்க்கை வாழவும் பல்வேறு வகையான நூல்களை அச்சு வடிவில் உருவாக்கினார்கள். ஆனால் இன்றைய தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் கணனி, இன்ரநெற், ஈமெயில் போன்ற பல்வேறு வடிவங்களிலும் வாசிப்புத் திறன் முன்னேற்றம் கண்டுள்ளது. மாணவனுக்கு வாசிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு உடல், உள நலத்தையும் மேம்படுத்தும் செயல் திறனையும் அபிவிருத்தி செய்யும். உலக மக்களின் மொழி, சமய, பண்பாட்டு விழுமியங்களையும் பொருளாதார அபிவிருத்திகளையும் அறிய உதவும். வாசிப்பு அதிகரிக்க அதிகரிக்க சிறந்த சிந்தனைகளும் கருத்துக்களும் மனதில் தோன்றும். இவை பல்வேறு புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும் உதவும். ஒருவரிடத்தில் சகிப்புத் தன்மை, சாந்தம், சமாதானம் மேலோங்க வாசிப்பு மிகவும் அவசியமானதாகும். வாசிப்பு மூளைக்கு வேலை கொடுப்பதால் மூளையின் செயல்திறன்

அதிகரிக்கும். பகுப்பாய்வு, சிந்திக்கும் திறன், கிரகிக்கும் திறன், கற்பனைத் திறன் போன்றவை அதிகரிக்கும். இவை அனைத்தும் மனிதனின் வாழ்க்கை முறையை மாற்றிய மைத்து வளமாக வாழ வழி வகுக்கும். வாசித்தலின் வளர்ச்சி கல்வித்துறையில் பிரதான பங்கை வகிக்கின்றது. உயர்ந்த அறிவு, அந்தஸ்து, பதவி, பட்டம் ஆகிய வற்றிற்கு வாசிப்பு அடிக்கல்லாகும்.



எமது நாட்டில் தற்போது வாசிப்புப் பழக்கம் மிகவும் விரை வாகக் குன்றி வருவது கவலைக் குரிய விடயமாகும். வாசிப்புப் பழக்கமின்மை பிற்காலத்தில் எமது நாட்டில் சிறந்த இலக்கியவாதிகள், அறிஞர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள் உருவாகுவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது. தொலைக்காட்சி, கணினி, கையடக்கத் தொலைபேசி போன்ற பல்வேறு நவீன தொழில் நுட்ப சாதனங்கள் மக்களின் முக்கிய பாவனையாக உருவெடுப்பதால் மாணவர்களின் வாசிப்புத்திறன் மழுங்கடிக்கப்படுகின்றது. அதிக நேரம் இவற்றில் செலவிடப்படுவதால் வாசிப்பதற்கு நேரம் கிடைப்ப தில்லை.

பாடசாலை மாணவர்க ளிடையே இன்று வாசிப்புப் பழக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு நடைமுறை யிலுள்ள எமது நாட்டுக் கல்வி முறையும் ஒரு காரணமாகும். ஆரம்பப் பாடசாலை முதல் பல் 'கலைக்கழகம் வரை ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடத் திட்டத்தில் அடங்கிய பாடங்களையே கற்பிக் கின்றனர். மாணவர்கள் இயந்திரங்கள் போன்று அவற்றை மனனம் செய்து பரீட்சை எழுதிச் சிறந்த பெறு பேறுகளைப் பெறுகின்றனர். இக்கல்வி முறை மாணவர்கள் புதிய புதிய தகவல்களைத் தேடித் தேடி வாசிக்கும் ஆற்றலைக் குறைத்து விடுகின்றது.

ஆசிரியர்களும், மாணவர் களின் தேடல், மற்றும் ஆய்வை ஊக்குவிக்காமல் அவர் கொடுக்கும் குறிப்புக்களை மனனம் செய்ய வலியுறுத்துகின்றனர். எமது நாட்டுப் பரீட்சை முறைமையும் இதையே எதிர்பார்க்கின்றது. தேர்வு மையக் கல்வியின் ஊடாகவே மாணவர்கள் பயிற்றப்பட்டு வருவதால் விடைக் குறிப்புக்களை மட்டும் மனனம் செய்யும் பழக்கத்தை இன்றைய

கல்வி முறை ஏற்படுத்தி வருகின்றது. மாணவர்கள் மட்டத்தில் மாத்திர மல்ல ஆசிரியர்கள் மட்டத்திலும் வாசிப்புப் பழக்கமும் மொழி விருத்தியும் குன்றி வருவதை இன்று காண முடிகின்றது.

வாசிப்பில் ஆர்வம் காட்டு மளவுக்கு ஒரு மாணவனது அறிவு விரிவடைவதோடு மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்படும். எனவே வாசிப்ப தற்கான அடிப்படைத் திறன்களைப் பயிற்றுவதும் அவற்றுக்கான சூழலை ஏற்படுத்துவதும் ஆசிரியர் களின் இன்றியமையாத கடமை ஆகும்.

ஒவ்வொரு மாணவனையும் அவன் வாழும் சூழலுடனும் தனிப் பட்ட முறையிலும் கூர்ந்து கவனித்து வழிகாட்டல் வழங்குவதன் மூலம் மாணவர்களிடத்தில் நூல்கள் மீது விருப்பத்தை ஏற்படுத்தவும் அவற்றை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும் பல்வேறு உத்திகளைக் கையாள் வதன் ஊடாகவே அவர்களிடையே வாசிப்பு ஆற்றலை உயர்வடையச் செய்ய முடியும். மாணவர்களிடையே வாசிப்பு ஆற்றலை மேம்படுத்தி அவர் களை சிறந்த ஆளுமையுடை யோர்களாக்குவது இன்றைய முக்கிய தேவைகளில் ஒன்று என்பதைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியது ஆசிரியர் களது இன்றைய பாரிய கடமை யாகும். மாணவர்களிடத்து வாசிக்கும் கலாசாரத்தை அரசாங்கம் ஊக்கு விக்கும் செயல் திட்டங்களையும் அமுல்படுத்த வேண்டியது முக்கிய பொறுப்பாகும்.

அறிவியல் யுகம், தகவல் யுகம் என்று விருத்தியடைந்து செல்லும் இந்நாளில் புத்தகங்களே அவற்றைச் சிறைபிடித்து எமக்கு உறுதிப்படுத்துகின்றன. உலகியல் கல்வி வளர்ச்சிக்கும் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கும் மத்தியில் தேடல்.... தொகுத்தல்... வாசிப்புத் திறனையும் புத்தகப் பயன் பாட்டையும் பாடசாலை, வீடு, கிராமம் என்ற வகையில் பரவலாக்குவதன் மூலமாகவே பூரணத்துவம் மிகுந்த தொரு அறிவுச் சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்கு வழி வகை செய்வது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். அனை வரையும் வாசிப்பில் ஈடுபடுத்துவோம். கற்றலையும், கற்பித்தலையும் மேம்படுத்த உதவுவோம் என அனைவரும் உறுதி பூணுவோம்.

(தமிழருவி நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கட்டுரை)

**செங்கதிர்ச்செல்வன் சேந்தன்**
தரம் - 11
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# புதிய வேதம்

**தொடர்கதை – அத்தியாயம் 07**

போயா விடுமுறை தினம். இரண்டு நாட்களாக ஆஸ்பத்திரியிலிருந்துவிட்டு வீடு வந்து விட்டாள் சுவேதா. காலிலும் முழங்கையிலும் ரோட்டு கற்கள் உரஞ்சியதால் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து போட்டிருந்தாள். சாய்வு நாற்காலியில் படுத்திருந்தபடி ஓர் ஆன்மீக சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தாள்.

மனித வாழ்க்கைக்கு சில ஒழுக்கக்கட்டுப்பாடுகளையும், சம்பிரதாயங்களையும் வகுத்துவைத்த எமது முன்னோர் மதத்துடன் அவற்றைச் சம்பந்தப் படுத்தி வைத்துக் கொண்டதன் நோக்கங்கள் வளர்ந்து வரும் சமுதாய அமைப்பில் சிதறுண்டு கொண்டிருப்பதை நிதர்சனமாகக் காணும் நிலையில் அதனை நெறிப் படுத்தவோ, பழமையின் கட்டுக்கோப்பை மீறுதலால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையோ உணரவோ முடியாதவர்களாய் கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனும் நிலைப் பாட்டில் கண்மூடித்தனமாக நடந்து கொள்ளும் மக்களையும், அவர்களது செயற்பாட்டையும் பார்த்துக் கொண்டும் பாராமுகமாக இருக்கும் புத்திஜீவிகளையும் பார்த்து வேதனைப் படுவதைத் தவிர எதுவும் செய்யமுடியாத கையறு நிலையில் பலர் இருப்பதையும் எல்லாத்துறையிலும் காணமுடிகின்றது.



ஆக்கம் :
கே.எஸ்.ஆனந்தன்

சமயத்துடன் சம்பந்தப்பட்ட சடங்குகள், சம்பிரதாயங் களிலும் சரி, ஆலயங்களில் நடைபெறும் விழாக்களிலும் நாகரிகத்தின் பெயரால் நடைபெறும் அநாகரிகச் செயல்களின் ஆதிக்கமே மேலோங்கி வளர்வதையும் காணமுடிகின்றது.

பொருளாதார வளர்ச்சி பெருகாத காலகட்டத்திலிருந்த சமுதாய ஒற்றுமை, சொந்தபந்தங்களிடையே உள்ள உறவுப்பாலங்கள் யாவும் இன்றைய சமூகத்தில் காணமுடிகின்றதா? மெல்ல மெல்ல சிதைந்து பட்டும்படாமலும், தொட்டும்

தொடாமலுமுள்ள பந்த பாசங்களின் நாகரிக வளர்ச்சியின் பொம்மலாட்டங்களையும் தான் காணமுடிகின்றது. இத்தனைக்கும் அடிப்படைக்காரணம் வெளிநாடுகளிலிருந்து வரும் பணம். பணம் படுத்தும் பாடு எமது சமூகத்தின் கட்டுக்கோப்பை, பண்பாட்டு விழுமியங்களை மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருக்கின்றது. பணத்தின் மேல் பற்றுவைப்பவர்களின் உணர்வுகள் உடலோடு, உயிரோடு, உணர்வோடு உறைந்துள்ள பாசப்பிணைப்புக்களையே செல்லரித்துக் கொண்டிருக்கின்றது என்பதை ஒவ்வொரு குடும்பங்களின் வாழ்க்கை முறையிலும் காணமுடிகின்றதாயினும் வெளியில் பொய்ம்மை நிழல்களையே காணமுடிகின்றது. பாசப் பிணைப்புக்குள் கட்டுப்பட்டிருந்த சுந்தரம்பிள்ளையின் குடும்பத்தில் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றுவிட்ட மக்கள், மருமக்கள், புதுவரவாக வந்துகொண்டிருந்த பணப்புரள்வுகள் குடும்பத்தில் ஆழவேரூன்றியிருந்த பாசவேர்களையே அசைத்துவிட்டிருந்தது. அடுக்களையில் பார்வதிக்கும் கணவனுக்குமிடையில் ஏதோ வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பதை சாய்வு நாற் காலியில் படுத்திருந்த சுவேதா கவனித்துக் கொண்டிருந் தாளாயினும் விடயம் என்னவென்று புரியாமலிருந்தாள். அவர்களது அமளியை நிறுவத்துவதற்காக "அம்மா, அம்மா" என்று அழைத்தாள்.

"என்ன சுவேதா? ஏதும் தேவையா?"

"எனக்கு எதுவும் வேண்டாம். காலையில் ஸ்கூலுக்குப் போக வேணும். பால் காய்ச்சினால் தாருங்கோ. இல்லை என்றால் உறைபோட்டு வையுங்கோ நான் படுக்கப் போறன்" என்று கூறினாள்.

"அவளை வேலைக்குப் போகவேண்டாம் என்று சொல்" என்று சுந்தரம்பிள்ளை சத்தம் போட்டுச் சொன்னது கேட்டது.

"லீவு எல்லாம் முடிஞ்சுது. லீவு போட முடியாது. நின்றால் சம்பளம்தான் வெட்டுப் படும்" என்று கூறினாள்.

"வேலையே வேண்டாம் என்று எழுதிக்கொடு. சுவேதா வேலைக்குப் போகத் தேவை யில்லை மாமா நிறுத்தி விடுங்கள் என்று நவனீதன் சொல்லிவிட்டான். உன்ரை சம்பளம்



அவனுக்குப் பிச்சைக்காசு" என்று கூறியவாறு அவளிருந்த இடத்துக்கு வந்தார் சுந்தரம்பிள்ளை. அவரைத் தொடர்ந்து பார்வதியும் ஓடிவந்தாள்.

தகப்பனுடைய பேச்சைக் கேட்டு ஒருகணம் அதிர்ந்துபோன சுவேதா தாயைப்பார்த்தாள். அவளோ சுந்தரம்பிள்ளையின் கையைப் பிடித்து இழுத்து "உங்களுக்கு என்ன பிடிச்சிருக்கு. அந்த விசரன் கூறியதை நீங்கள் அவளிடம் போய் சொல்லிக் கொண்டிருக்கிறியள்" என்று தலையிலடித்துக் கொண்டாள்.

"கல்யாணத்துக்கு நாள் வைத்தாச்சு. மண்டபத்துக்கு காசு கட்டியாச்சு, எப்படி அவளுக்கு சொல்லாமல் மறைப்பது?" என்றார்.

"என்னம்மா இரண்டுபேரும் கதைக்கிறியள். யாருக்கு கல்யாணம்?"

"உனக்கும் நவனீதனுக்கும்தான்" என்றார் சுந்தரம்பிள்ளை.

"யாரைக் கேட்டு முடிவு செய்தீர்கள்?"

"யாரைக் கேட்கவேணும்"

"என்னைத்தான் முதலில் கேட்கவேண்டும்! அவன் யார் என்னை ஸ்கூலுக்குப் போக வேண்டாம் என்று கூறுவதற்கு? அவன் ஏற்கனவே கல்யாணமாகி பெண்டாட்டியை விட்டவன். அவனை எனக்கு கணவனாக்கும் நினைவு உங்களுக்கு எப்படி வந்தது? அதுவுமில்லாமல் நான் படித்தவள். வெளிநாட்டிலை போய் உதவாக்கரையாய் இருக்கும் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டால் அவளை நடுத்தெருவில் விட்டது போல என்னை விடமாட்டான் என்பதைக் கூட சிந்திக்காத நீங்கள் ஒரு தகப்பனா?" பெண் புலியாகச் சீறினாள். "சுவேதா! என் சொல்கேட்டு நடந்தால் அவன் உனக்கு தன் சொத்துக்கள் அனைத்தும் எழுதுவதாகக் கூறியுள்ளான்"

"யாருக்கு தேவை அவனுடைய சொத்தும் வாழ்வும். எனக்குத் தேவை ஒரு நல்ல, கண்ணியமான, மனிதநேயமுள்ள அன்பான புருஷன். அவனை நானே தேர்ந்து எடுத்துள்ளேன். எனக்கு வாழ்வு தேடித்தருவதாக நினைத்துக் கொண்டு உயிருடன் சாகடிக்க வேண்டாம்"

"உன்னைப் படிக்க வைத்ததால்தானே இப்படி எல்லாம் கதைக்கிறாய். பெட்டைச்சிக்கு படிப்பு ஆகாது என்று அந்தக் காலத்தில் சொன்னவங்கள் தெரியாமலா கூறினாங்கள்"

"எப்ப கூறினாங்கள்? எங்கே படிச்சனீங்கள்? படிப்பறிவில்லாததால் பணத்தாசை உங்களைப் பிடித்தாட்டுகின்றது. என்னைப் படிக்கவைச்சது என் அண்ணனும் சகோதரங்களும். அவங்கள்

சொல்லட்டும் நான் கேட்பேன். பணம்! பணம்!! ஏன் தான் அலையுறீங்கள்.!!
“என்ன சொன்னாய்? உனக்காகத்தான்டி. உனக்கு சீதனம் தர என்ன கிடக்குது?”
“உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். என் படிப்பே எனக்குச் சீதனம். அதுபோதும் எனக்கு. நீங்கள் எனக்காக அலைய வேண்டாம். அதே சமயம் என்னுடைய வாழ்க்கைப் பிரச்சனையில் தலையிடவும் வேண்டாம்”
“அப்படியா? சரி! சரி!! நான் உன் விசயத்தில் தலையிடவில்லை. என் சொல்லுக்கு மரியாதை இல்லை. என் பிள்ளை என்று சொல்லும் அருகதையும் உனக்கு இல்லை. என் சொத்து ஒன்றும் தேவை இல்லை என்றான பின் நீ இந்த வீட்டில் இருக்க வேண்டியதும் இல்லை”
“உங்களுக்கு என்னப்பா பிடிச்சிருக்கு? அவள் எங்கேபோயிருப்பாள்?” என்று பார்வதி கதறினாள்.
“எங்கேயோ போகட்டும். நான் இருக்குமிடத்தில் அவளிருக்கக் கூடாது. இது என்னுடைய உழைப்பில் கட்டின வீடு. என் சொத்து நான் தேடிய சொத்து” என்று ஆவேசமாகக் கத்தினார்.

அதுவரை மௌனமாயிருந்த சுவேதா தாயைக் கட்டியணைத்துக் கொண்டு சிரித்தாள். அவள் ஏன் அப்படிச் சிரிக்கிறாள் என்று புரிந்து கொள்ள முடியாத பார்வதியின் தாயுள்ளம் தவித்தது. தகப்பன் அப்படிச் சொல்லியதால் புத்திபேதலித்துப் போனாளோ என்று துடித்தவளாய் “சுவேதா நீ சிரிப்பதைப் பார்த்தால் எனக்கு அடிவயிற்றைக் கலக்குது. அந்த மனிசனுக்கு ஏதோ பிடிச்சு ஆட்டுது. நீ எங்கேயும் போக வேண்டாம்” என்று மகளை வருடி வருடி அணைத்துத் தேற்றினாள்.
“பொல்லாப்பிள்ளையில் இல்லாப் பிள்ளை என்று நினைத்துக் கொள்ளேன். இந்த வீட்டில் அவளுக்கு இடம்கிடையாது” என்று பார்வதியைப் பார்த்து சீறினார் சுந்தரம்.
“இந்த வீடு யாருடையது என்று புரியாமல் அவர் உளறினால் நீங்கள் ஏனம்மா பயந்து நடுங்குறியள். நான் இந்த வீட்டினை விட்டுப் போவதாயிருந்தால் அந்த வீடு என் புகுந்த வீடாய்த்தானிருக்கும். அதுவரை நான் இங்கேதானிருப்பேன். இது என் அக்கா சாருலதாவின் வீடு. அவளுக்குத்தான் அந்த உரிமையுண்டு. மற்றவை சொல்லி நான் போகவேண்டியதில்லை. அவருக்கு இது விளங்காமலிருக்கலாம். சொல்லிவையுங்கோ”

என்று கூறிவிட்டு தன் படுக்கையறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டாள். பூட்டிய அறைக்குள் நின்று கொண்டு "அம்மா, அம்மா" என்று அழைத்தாள்.

"சுவேதா! பேசாமல் படுத்துத் தூங்கம்மா" என்றாள் பார்வதி.

"கேட்பார் புத்தி கேட்டுத்தானாம் யாரோ கீழ்சாதியானாள். அது போல முட்டாள்களின் புத்திகேட்டு வலுக்கட்டாயமாகவோ, வன்முறையாகவோ எதுவும் நடக்க முனைந்தால்..... பொலிஸ் நிலையத்தில் தான் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் முன்னெச்சரிக்கையாகச் சொல்லிவைக்கின்றேன்" என்று மின்விளக்கை நிறுத்திவிட்டு படுக்கையில் சாய்ந்துகொண்டாள்.



சுந்தரம்பிள்ளை வாயடைத்துப் போய் மௌன மானார். சுவேதா இப்படிக் கதைப்பாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவள் பேசாமல் திரிந்ததைத் தனக்குப் பயந்து பேசாமலிருப்பதாகத் தான் நினைத்துக் கொண்டார். கேவிக் கேவி அழுது கொண்டிருந்த பார்வதியம்மாள் கணவன் வாயடைத்துப் போயிருப்பதைப் பார்த்து பரிதாபப் பட்டவளாய் மனதுக்குள் மச்சாள் மரகதத்தைத் திட்டித் தீர்த்தாள். அதுவரை எதுவும் பேசமுடியாது மனதுக்குள் புதைத்து வைத்திருந்த ஆத்திரத்தை சுந்தரம்பிள்ளை பார்வதி மீது கொட்டித் தீர்த்தார்.

"ஏன் பார்வதி இப்ப உனக்கு சந்தோஷம்தானே? கோட்டிலே லோயர் பேசினமாதிரி பேசினாள். கேட்டனிதானே. இவளுக்கு இத்தனை தைரியத்தைக் கொடுத்தது யார்?"

"நான் எத்தனை தடவை சொன்னேன். கேட்டீங்களா? கோயில் மாதிரி இருந்த வீட்டை உங்கள் தங்கை வந்து உங்கள் புத்தியையும் கெடுத்து குட்டிச் சுவராக்கிவிட்டாளே போதாது. வீட்டிலை வைச்சு பெற்றோருக்கு அடங்கிய பிள்ளைகளாக வளர்த்த காலம் மாறிப்போச்சு. எல்லாம் படிச்சு தங்கள் சொந்தக்காலில் நின்று சம்பாதிக்க ஆரம்பிச்சபோதே நாங்கள் கொஞ்சம் அடக்கிவாசிக்க தெரிஞ்சிருக்கவேணடும். உங்களை நான் தப்பாகச் சொல்லவரவில்லை. உங்கள் தங்கையின் துர்ப்போதனையால்

நீங்களும் தடம்புரண்டு போனீங்கள். அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிட்டு இப்ப துன்பப்படுகின்றியள். பிள்ளைகளோடை கதைப்பது மாதிரியா கதைச்சீங்கள். எதிரிகளோடை பேசுமாப் போல பேசிவிட்டு இப்ப அவளுக்கு தைரியம் கொடுத்தது யார் என்று கேட்டால் நான் என்ன சொல்வேன்? படிக்காத எனக்கே உங்கள் மாற்றம் பிடிக்கவில்லை. அவள் படிச்சவள், படித்தவர்கள் பலரோடும் பழகுபவள், கதைப்பவள் எப்படிப் பேசுவாள் என்று தெரியாதா!"

"பார்வதி கதையை நிறுத்து. எரியுற கொள்ளியிலை எண்ணெய் வார்த்தது போல நீ எனக்கு...." பேசமுடியாது தடுமாறினார்.

"உங்களுக்குக் கோபம் வந்தால் யாரிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகின்றீர்கள். நீங்களே யோசித்துப் பாருங்கள். சினிமாப்படங்களிலை வருகின்ற வில்லன்கள்போல ஒரு மருமகன், அவருடைய அம்மாக்காரி, ரி.வி நாடகங்களிலை வாற வில்லி மாதிரி. உங்களிடமிருக்கிற பலவீனத்தை பயன்படுத்தி அவளைக் கல்யாணம் பண்ணக் கேட்டால் சம்மதிப்பாளா? அவனோ ஏற்கனவே கல்யாணமாகி பெண்டில் பிள்ளைகளை விட்டவன். வெளிநாட்டிலை வழக்கு வேறை நடக்குதாம். இதுகளெல்லாம் தெரிந்து கொண்டு அவள் எப்படி நடப்பாள்? எனக்கே பிடித்தமில்லை. ஏன் சாருலதாவே எழுதியிருந்தாள். உங்களுக்குப் புத்திமழுங்கிப் போனால் மற்றவையும் அப்படியா?"

"சரி! சரி! என்னதான் நடக்கப்போகுது என்று பார்க்கத்தானே போறன்" என்று கூறிவிட்டு கட்டிலில் போட்டிருந்த தலையணைக்குக் கீழ் வைத்திருந்த சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார். மூன்று நான்கு முறை புகையை உள்ளிழுத்து வெளியே விட்டபின்பு பார்வதி கூறிய விடயங்கள் அவருக்குச் சரியானதாகப்பட ஆரம்பித்தது.

மனம் ஒன்றில் பற்றுவைக்க ஆரம்பித்துவிட்டால் அதனால் வரக்கூடிய தீயபலன்களைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை என்ற உண்மை ஓரளவுக்குப் புரிய ஆரம்பித்தது. போதைக்கு அடிமைப்படுவோர் கூட அதன் விளைவுகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. மதுபானங்களாலோ, போதைப் பவுடர்களாலோ மட்டும் மனிதனுக்குப் போதை ஏறுவதில்லை. இவை யாவும் பாவிக்காது புகழ் தேடும் புத்திசாலிகள்கூட புகழ் என்ற போதைக்கு அடிமைப்பட்டவர்கள்தான். கஸ்டநிலையிலிருந்த குடும்பம் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்றுக்கொண்ட நிலையில் ஏற்பட்ட புகழ்ச்சி மேலும் மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்ற

போதையில் அதனுடைய விளைவுகளைச் சிந்திக்காமல் விட்டுவிட்ட தவறுகளைச் சுந்தரம்பிள்ளை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டார். தன் தவறு தனக்குத் தெரியும்வரை நிம்மதி வரப்போவதில்லை என்பதை உணராதவராகவே இருந்து கொண்டார்.

வடமாகாணத்தில் நிலவிய போர்ச்சூழல் ஒரு முடிவுக்கு வந்ததும் போக்குவரத்து, தொலைத்தொடர்புகள் யாவும் துரிதகதியில் சீருக்கு வந்ததால் வீட்டில் நடந்த விடயங்களை அக்கா சாருலதாவுக்கும், அண்ணன் சிவனேசனுக்கும் உடனடியாகவே தெரியப்படுத்தியிருந்தாள் சுவேதா. ஓரளவுக்கு அவர்களும் எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனாலும் தகப்பனார் இப்படி அவசரப்பட்டு தங்களைக் கலந்தாலோசிக்காமல் செய்துவிட்டாரே என்று வருத்தப்பட்டாலும் சுவேதா புத்திசாலித்தனமாக நடந்து கொண்டுவிட்டாள் என்ற நிம்மதியும் ஏற்பட்டிருந்தது.



ஒவ்வொருவரும் வெவ்வேறு நாடுகளில் இருந்ததால் தொலைபேசி மூலமே கதைத்துக் கொள்வார்கள். எல்லோருக்கும் குடும்பச் சூழலை கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள். அண்ணன் சிவனேசன் மனைவியின் ஆளுகைக்குள் கட்டுப்பட்டிருந்ததால் முன்புபோல செயற்படமுடியாதிருந்தான். அவனுடைய நண்பன் நேசனும் திருமணம் செய்த பின்பு ஏதாவது ஒரு நிகழ்வில்தான் சந்தித்துக் கொள்வார்கள். அன்று அதிகாலை மூன்று மணியளவில் நேசனின் தொலைபேசிமணி விடாது அடித்துக் கொண்டிருந்ததால் படுக்கையை விட்டெழுந்து மொபைலை எடுத்துப் பார்த்து சிவனேசன் என்பதைப் புரிந்துகொண்டு "சிவா என்ன இந்த நேரத்திலை. ஏதும் பிரச்சினையா?" என்றான். "நேசன் பிரச்சினைதான். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உன்னுடன் கதைக்கவேண்டும். இன்றைக்கு லீவுதானே? நீங்கள் எங்கேயாவது புறப்பட்டாலும் என்றுதான் இந்த நேரத்தில் போன் செய்தேன். மன்னிச்சுக்கொள்"

“நீ என்னிடம் மன்னிப்புக் கேட்கிறியா? பைத்தியம் மாதிரி உளறாதே. உனக்கு எந்தப் பிரச்சினையானாலும் நானிருக்கிறேன். நீ இங்கே வருவியா அல்லது நான் வரட்டுமா?”

“நான் வருகின்றேன். இங்கே நம்ம ஆளடியில் இந்தப் பிரச்சினைகள் பற்றிக் கதைக்கேலாது”

“ஓகே. ஐந்துமணிக்கே வா. மிகுதியை பேசுவோம்” என்றான்.

குறித்த நேரத்தில் அழைப்புமணி அடித்தது. நேசன் வந்து கதவைத் திறந்தான்.



“குட் மோனிங் சிவா”

“குட் மோனிங் நேசன்”

“உள்ளே வா. வைவ் சேர்ச்சுக்கு போயாச்சு. உனக்காகத்தான் வெயிட் பண்ணினேன். கனகாலமாய் பிரச்சனை ஏதுமின்றியிருந்தாய். இப்ப என்ன வந்தது? உட்கார் சிவா”

சோபாவில் அமர்ந்து பெருமூச்சு விட்ட சிவநேசன் “ஒரே குளிராயிருக்கு. கோப்பி குடிக்க வேண்டும் போலிருக்கு நேசன்”

“இதோ பிளாஸ்கில் எல்லாம் ரெடியாய் வைச்சிருக்கேன்” என தேநீர்க் கோப்பையை எடுத்து ஊற்றி அவனிடம் கொடுத்தான். கோப்பியைப் பருகிவிட்டு விடயத்தைக் கூறலானான்.

“ஏன் சிவா. உங்கள் அப்பா நல்லாய்த்தானேயிருந்தார். அவர் இப்படி நடப்பதற்கு அடிப்படைக் காரணம்தான் என்ன?”

“எல்லாம் பேராசைதான். எதுவும் என்னைக் கேட்காமல் செய்யாதவர் இந்த விடயத்தில் தங்கையின் சொத்துக்கு ஆசைப்பட்டுவிட்டார். இல்லை என்றால் அவனை சுவேதாவுக்குக் கட்டிவைக்க தன்னிஸ்டப்படி முடிவு எடுப்பாரா? உனக்குத்தான் அவனைத் தெரியுமே. போயும் போயும் அவனை. இந்த மனிசன் வீட்டிலிருக்கப்படாது என்றால் அவள் சும்மா விடுவாளா? இந்த விடயத்தில் அம்மா நடுவில் கிடந்து இடிபடுகுது. அதை நினைச்சால்தான் எனக்கு வேதனை” கண்கலங்கினான் சிவநேசன்.

“சுவேதா ரீச்சர்தானே”

“ஊருக்குள் தான் படிப்பிக்கின்றாள்”

“ஒருவேலை செய்வோமா? சுவேதாவின் கல்யாணம் வரை வேறு இடத்துக்கு மாற்றம் வாங்கட்டும். அங்கே போயிருந்தால் அப்பாவும் அமைதியாயிடுவார். நாங்கள் ஜனவரியில் போய் எல்லோரையும் சமாதானப்படுத்தி சுவேதா கல்யாணத்தை நடாத்தி வைப்பம்”

“நல்ல ஐடியாதான். ஆனால் அப்பா ஒரு பிடிவாதக்காரர்தான். முன்பு கையில பணப்புழக்கம் குறைவு. நாங்கள் சொல்வதைக் கேட்பார். இப்ப அப்படியில்லை. தாராளமாய் பணவசதியுண்டு. ஆளே மாறிவிட்டார். அம்மா சொல்லிச் சொல்லி அழுதா. என்ரை வைவ் என்னைப் பேசுறாள். தன்ரை சீதனப்பணம் அவரது குணத்தை மாற்றிவிட்டது என்று வேறு சொல்லுறாள். ஒருமுறை போய்வரலாம் என்றால் அதுவும் முடியாமலிருக்கு. மனம் அமைதியாயிருந்தால் தான் எதையும் செய்யலாம். அதனால்தான் உன்னை அழைத்தேன்”

“பரவாயில்லை, சுவேதாவுக்கு மெசேச் அனுப்பு. விசயம் கொஞ்சம் அமுங்கிவிடும்”

“சரி, இன்றைக்கே நான் செய்தி அனுப்பிவிடுகின்றேன். அதுசரி நேசன் ஏதோ சொல்ல நினைக்கின்றாய் சொல்லும்”

“சிவா உன்ரை வைவ் சொன்ன விடயத்தை தான் யோசிச்சன். அவ சொன்னதும் சரிதான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள். தேவைக்கு மிஞ்சிப் பணம் வந்தால் அது மனதில் ஆசையை வளர்த்து நல்ல மனதை நஞ்சாக்கிவிடும். அதுதான் அப்பா மனதில் ஆசையை வளர்த்து பேராசைப்பட வைத்துவிட்டது. அவரை நீ கோபிப்பதில் அர்த்தமில்லை சிவா. சுவேதா பிரிந்திருந்தால்தான் அப்பாவுக்கும் பிள்ளைகள் மேல பாசம் வரும். நீ மனதைப் போட்டுக் குழப்பிக்காதே. சந்தோஷமாயிரு. நல்லதை நினைப்போம் நல்லதே நடக்கும். ஏதாவது சாப்பிடுகிறாயா?”

“நேசன் உன்னுடன் கதைத்ததே போதுமப்பா. மனமும் வயிறும் நிரம்பியிருக்கு. மனமும் லேசாயிருக்கு” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அவனை வழியனுப்பிவிட்டு வந்து சோபாவில் உட்கார்ந்த நேசனின் மனதில் பல்வேறு நினைவுச் சுழல்கள் உயிருக்குப் பயந்து உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வந்தவர்கள் சிலர். பொருள் தேட வந்தவர்கள் பலர். படித்தவர்களும் சரி படிக்காதவர்களும் சரி புலம்பெயர்ந்த சமூகத்தில் ஒன்றே குலம் என்று வாழ்ந்தாலும் அரசியல் சகதியில் தோய்ந்தவர்கள் அந்தச் சகதியைக் கழுவாது அங்கேயும் அந்த நாற்றத்தில் நீந்திக்கொண்டு மற்றவர்களைச் சுரண்டிக்கொண்டிருக்கும் அற்பத்தனத்தை எண்ணி சலித்துக் கொண்டான். புலம்பெயர்ந்து வாழும் நாட்டிலாவது நிம்மதியுடன் வாழ்கின்றார்களா என்றால் அதுவும் இல்லை. இவர்கள் ஊரில் உள்ள உறவுகள் நிம்மதியாக

வாழ்கின்றார்களாவென்றால் அதுவும் கேள்விக்குறியே! எந்த வழியில் பணம் தேடமுடியுமோ அப்படியே தேடும் சிலரது கேவல நிலையை எண்ணி மனம் வருந்தினான். வெளிநாடுகளிலிருந்து உறவுகளுக்குச் செல்லும் உதவிகள் கூட அங்கே நல்லாயிருந்த உறவுகளிடையே பிரிவினைகளை, குரோதங்களை உருவாக்கி பந்த பாசத் தொடர்புகளை, கலாச்சாரவிழுமியங்களை எல்லாம் சீரழித்துக் கொண்டிருக்கின்ற கொடுமைகளை நினைத்து மனம் கொதித்தான். இந்த விஷக்காய்ச்சல் சிவநேசன் குடும்பத்திலும் தொற்றிவிட்டதே எனும்போது எங்கள் இனத்துக்கு எப்பதான் நல்லறிவு வரும்?" என்று வாய்விட்டே கூறிவிட்டான். அதேசமயம் அழைப்புமணி ஒலித்தது. சிந்தனைச் சுழற்சியிலிருந்து விடுபட்டு எழுந்து சென்றான்.

மனிதன் நினைப்பது நல்லதோ – கெட்டதோ அதற்கு முன் ஆண்டவன் திடமான தீர்ப்பை எழுதிவைத்து விடுகின்றான். அதன்படிதான் எதுவும் நடக்கும் என்பதைக் கதவைத் திறந்துபார்த்ததும் உணர்ந்து கொண்டான்.

**(வளரும்......)**

---

# மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

அவனொரு விளையாட்டு வீரன்! அன்று மாலை நேரமிருக்கும். பாடசாலை மாணவர்கள் ரவியின் வீட்டிற்கு வந்தனர். ரவியோ பயந்த சுபாவமுடையவன். ரவியின் நண்பர்கள் பாடசாலையின் பின்புற வயல்வெளியில் விளையாட வரும்படி கேட்டனர். ரவி வற்றுடனும் போலுடனும் நண்பர்களுடன் சென்றான். அந்த வயல்வெளி பிரதேசமானது ஒரு தனிமையானது. மனித நடமாட்டம் குறைவு. சற்று தூரத்திலும் ஒரு சுடலையும் அருகில் ஒரு மடமும் இருந்தன.

ரவியும் நண்பர்களும் மகிழ்ச்சி பொங்க விளையாடிக் கொண்டிருந்தனர். திடீரெனக் காற்று, மின்னல், மழை பெய்யத் தொடங்கியது. எங்கு பார்த்தாலும் இருண்ட வானமுமாகக் காணப்பட்டது. இருட்டைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

நண்பர்கள் அருகிலிருந்த மடத்திற்குச் சென்றனர். ரவி தனியே வெட்டைவெளியில் நின்றான். நண்பர்களோ ரவி வீடு சென்றுவிட்டான் என நினைத்து தாமும் தமது வீட்டிற்குச் சென்றனர். ரவியின் 'வற்' மழையில் நனைந்ததால் உக்கிவிடும் என அவர்கள் மடத்தில் வைத்துச் சென்றனர்.

ரவியோ! பாவம் தனியாக வெட்டை வெளியில் நின்றான். ரவியின் மனம் படபடத்தது. வெட்டை வெளியிலே ஒரு ஆலமரமும் உண்டு. அதன் கீழ் பேய் இருப்பதாகத் தனது பாட்டி சொன்னது ஞாபகம் வந்தது. ஆலமர விழுது அசைய பேய் எனப் பயந்து அழுதான். ஆலமர விழுது நிலத்தில் முட்டவில்லை. அப்போது பேய்க்குக் காலில்லை என்பது ஞாபகம் வர அவன் விம்மி விம்மி அழுது செய்வதறியாது திகைத்தான்.

பேய் அங்கால நிக்கட்டும் நான் வீடு செல்லப் போகிறேன் என்று செல்ல முறிந்திருந்த வாழை மரத்தைப் பார்த்து இராணுவ வீரன் துப்பாக்கியுடன் நிற்பது போல் தெரிந்தது. பாவம் அவன் நெஞ்சு படபடத்தது.



பின் அவ்விடத்திலிருந்து சற்று விலகி மடத்திற்கு வந்தான். மடத்தில் யாரோ இருப்பது போல் இருந்தது. ரவியின் நிலை என்ன? ரவிக்கு பயம் உச்சி மண்டையை மேவிப்பாயுமளவிற்கு வந்து செய்வதறியாது திகைத்தான். "ஒருதனுக்கு ஒரு பிரச்சினை" ஆனால் ரவியை விடுவதில்லை என்று மூன்று பிரச்சினைகள் வந்தன. கடவுளாய் மின்னலடிக்க அது தனது விளையாட்டு உபகரணமென இனங்கண்டுகொண்டான். பயம் சற்றுக் குறைந்தது. பின் மடத்தில் தங்கினான். எப்ப விடியுமென எதிர்பார்த்திருந்தான். "சூரியனும் அவன் வந்த தேரும் பாதாளத்துள் விழுந்ததோ" எனப் புலம்பினான். மடத்திலேயே நித்திரை செய்து கொண்டான்.

காலை எழுந்து பார்த்தான். உண்மையை அறிந்தான். இயற்கை மாறவில்லை. தன் மனமே மாறியது என உணர்ந்து கொண்டான். பின் தனது நண்பரது குணஇயல்பை எண்ணி வீடு நோக்கிப் புறப்பட்டான்.

☆ மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

☆ அன்பான நண்பரை ஆபத்திலறியலாம்.


தே. தனோஜன்

தரம் - 10

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## பாப்பாவிற்குப் பாரதியார் சொல்லும் புத்திமதி

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?", "வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்பர் ஆன்றோர். ஒரு சமூகம் சிறந்ததாக அமையவேண்டில் சமூகத்தில் தனிமனிதனின் பண்புநலன் ஆரம்பத்திலேயே சிறந்ததாக அமைந்துவிட வேண்டும் என்பதை முதலில் பெற்றோரும் மற்றோரும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். "தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை", "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்றாங்கு உலகம் நடப்பது இலைமறைகாயாக இருப்பதை அனுபவசாலிகள் அறிவர். இதனால் பால்மணம் மாறாத பச்சிளம் பாலகர்களை அவர்களின் அடிப்படை வளர்ச்சியில், மெதுவாக பசுமரத்தில் ஆணி ஏற்றுவதைப் போல பாரதியார் தன்னுடன் வளர்ந்த பாப்பாக் குழந்தைகளுக்கும், எதிர்கால குழந்தைகட்கும், அவர்களின் மனதில் பட்டு சிந்தையில் ஊறி நதியாகப் பாய நற்புத்திமதிகளைப் புகட்டியுள்ளார். பாப்பாப்பாட்டு பாலகர்களை மட்டுமன்றி தாத்தாமார் வரை எல்லாரையும் விழித்து உணரவைக்கின்றது.



ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

என்ற இப்பாடல் பாப்பாப் பாடலின் முதற்பாடல். இந்த ஒரு பாடலே குழந்தையின் மனதைத் தொட்டு சிந்தனைகளை விரியச் செய்கின்றது. பாரதியார் கவிஞன் மட்டுமல்ல சாதனை பொருந்திய சிந்தனையாளன். வெறும்சொற்களால் பாப்பாப் பாடலைப் பாடவில்லை. பாப்பாப் பாடலின் ஒவ்வொரு வரியிலும் ஆழமான உண்மையான தத்துவங்கள் மறைந்திருப்பதைச் சிந்தனையாளர், அனுபவசாலிகள் உணர்வர். பாப்பா மண்ணில் விழுந்ததும் அசைவுகள் உண்டாவதை

அன்னையார் அறிவர். அசைவின் மிகுதியால் இரத்தோட்டம் முதலாக வளர்ச்சி புத்தி அறிவு முதலியன முளைவிடுகின்றன.

காலப்போக்கில் பாப்பா சோம்பி இருக்காது ஓடி விளையாடுகின்றபோது உடம்பில் புத்துணர்ச்சி, உடல்வளர்ச்சி, இரத்தோட்டம் என்பவற்றுடன் மனமகிழ்ச்சியும் உண்டாகின்றது. பல பாப்பாக்களுடன் சாதி, இனம், வேற்றுமை, உயர்வு, தாழ்வு இன்றி "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம், யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பு பிஞ்சுள்ளத்தில் படிந்து விடுகிறது குழந்தை உள்ளத்திற்கு வேற்றுமை தெரியாதென்பதை, உறுதியாக உணர்ந்த பாரதியார் "கூடிவிளையாடு பாப்பா – ஒரு குழந்தையை வையாதே" (ஏசாதே) பாப்பாவென உணர்வு தூண்டப்பாடுகிறார்.

**பாரதியார் கவிஞன் மட்டுமல்ல சாதனை பொருந்திய சிந்தனையாளன். வெறும்சொற்களால் பாப்பாப் பாடலைப் பாடவில்லை. பாப்பாப் பாடலின் ஒவ்வொரு வரியிலும் ஆழமான உண்மையான தத்துவங்கள் மறைந்திருப்பதைச் சிந்தனையாளர், அனுபவசாலிகள் உணர்வர்.**

பறவைகளில் பலபல இனங்கள் உண்டு. மிகவும் பெரிய பாரமான, பறவைகள் தம்மை ஆபத்துக்காலத்தில் விடுவிக்க முடியாமல் தத்தளித்து பிடிபட்டு இறந்து விடுகின்றன. ஆனால் மிக மிகச் சின்னஞ் சிறுகுருவி விரைவாகப் பறந்து தப்பித்து விடுவதுடன் மிகவும் உற்சாகமாகவுமுள்ளது. வண்ண வண்ணப் பறவைகளைக் கண்டு மனதில் மகிழ்ச்சி கொள்வது போல பலபல தர இனக்குழந்தைகளையும் மதிப்பதில் மனமகிழ்ச்சி பெருமை ஏற்படுகின்றது.

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

காலை நேரம் இனிமையான நேரம், அமைதியான நேரம், ஞாபக சக்தியில் மிகுந்த நேரம், அமைதியான நேரம் மனனம் செய்வதால் மனனமாகி விடுகின்றது. ஆதிகால மக்கள் காலை நேரத்தைக் கடவுள் வழிபாட்டிற்கும், தியானத்திற்கும் ஒதுக்கி வைத்து அதன்படி நடந்தமையால் புகழ்பூத்த புண்ணியவான்களாக வாழ்ந்த சுவடுகள் பல. இருளும் ஒளியும் சந்திக்கின்ற வைகறை, அந்திப் பொழுதுகள் பிரமமுகூர்த்த காலமெனக் கணிக்கப்பட்டுள்ளன. இந்த நேரம் கல்வி கற்க, கடவுள் வழிபாடு செய்ய உகந்த நேரமெனப் பலநூல்கள் செப்புகின்றன. சாதனையாளர்கள் வலியுறுத்தி

யுள்ளனர். தேவர்களுக்கு ஒருநாள் மனிதருக்கு ஒருவருடம். தேவர்களின் பிரமமுகூர்த்தகாலம் மார்கழி மாதம். எனவே தான் மார்கழியில் திருவெம்பாப் பாடி மக்கள், சிறப்பாக கன்னிப் பெண்கள் விரதம் இருப்பார்கள். காலையில் கற்ற கல்வி மனனம் ஆகியதும் அது இனிமையான சிந்தனைக் கீதமாகி இனிக்குமாம்.



மாலையில் உடம்பு சோர்வடையாது நன்றாகவிளையாட வேண்டும். இதனைத் தினசரி வழக்கப்படுத்திவிட்டால் நோயாளருக்கு இடமில்லை. மாணவப் பருவத்திலோ பிள்ளைப் பிராயத்திலோ பொய் சொல்லும் பழக்க வழக்கங்கள் புறம்கூறும் வழக்கங்களை கிள்ளி எறிந்து விட வேண்டும். பொய்யும் புறம் கூறுவதும் மனிதனை மாளச்செய்துவிடுகின்றன. தெய்வம் துணையாக இருக்க வேண்டுமானால் பொய்யை விசமாகத் தள்ளிவிடவேண்டும். பலாப்பழம் வெட்டமுன் கையிலும், வெட்டும் கத்தியிலும் வாய் இதழிலும் எண்ணெய் பூசியபின் வெட்டினாலும் சாப்பிட்டாலும் பலாப்பாலின் உபத்திரவம் அறவே இருக்காது. அதுபோல தெய்வத்தை முழுமுழுதாக நம்பினால் தெய்வீக அருளினால் கேடு உண்டாகாது என்பது இராமகிருஷ்ணரின் அருள்வாக்காகும். இன்று பலசமுதாயங்கள் பூரணமான தெய்வசந்நித்தியம் அடையாத காரணத்தால் உலகம் பல கேடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆதி மனிதவாழ்க்கை தெய்வீகமான மெய்ஞ்ஞானத்தோடு சங்கமமாகி இருந்தமையால் அக்காலம் பொற்காலமாக இருந்தது.

பாரதியார் தீர்க்க தரிசனத்தால் மூன்று காலத்தையும் உணர்ந்தவராதலால்,

“பாதகம் செய்வாரைக் கண்டால் – நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா”

பாரதியார் காலத்திலும், நாட்டிற்கும் வீட்டிற்கும் சமூகத்திற்கும் பாதகங்கள் அதாவது துரோகங்கள் மலிந்து காணப்பட்டன. இப்பாதகம் சிறுவர் தொடக்கம் முதியோர் மட்டுமல்ல படித்தவர்கள் படிக்காதவர்களிடத்தும் காணப்பட்டது. தொடர்கதையாக அரசு தொடக்கம் சமூகம்வரை படர்ந்து

கொண்டே வருவது கண்கூடு. இதனால் கொலை, களவு போன்ற தீயசக்திகள் பெருகி மனிதனின் மனதை, அமைதியைச் சீர்குலைப் பதுடன் ஆன்மீக வாழ்விற்கும் தடையாகி விடுகின்றன. இதனைப் பாப்பாவின் பிஞ்சுள்ளத்திலேயே நீக்கிவிட வேண்டுமென்பது பாரதியாரின் கோட்பாடு "நாயின் வாலை" நிமிர்த்த முடியுமா? அது இன்றும் சுடர்விடுவது கண்கூடு.

இன்ப துன்பம் மனிதவாழ்க்கையில் இயல்பாக இருப்பது இயல்பு. பாப்பாவுக்கும் இக்குறைபாடுகள் கண்டிப்பாக வரத்தான் செய்யும். இத்துன்பம் பலவகையால் ஏற்படும். தன்னால் பரிசனத்தால் பிறரால் ஏற்படுவது. இவற்றை நீக்க இறைவன் எப்போதும் துணையென்பதை மனதில் அழுத்தமாக நினைத்தல் வேண்டும். "நன்றும் தீதும் பிறர்தர வாரா" என்பது புறநானூறு. "எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்புமில்லை முழுவதும் உண்மை" என்பது யாழ்ப்பாணத்துச் சித்தர் தவத்திரு யோகர்சுவாமிகள் அருள்வாக்கு.

பல மக்களும் சிறுவர்களும் சோம்பலாக இருப்பதால் நோய்க்கு இடம்கொடுப்பதுடன் "நேரம் பொன்னானது" என்பதையும் உணராது காலத்தை வீணடித்துவிட்டுக் கண்கலங்குவது இயல்பு. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. இவற்றை உணரவைக்க சோம்பல் மிகக் கெடுதி என்று சுட்டிக் காட்டுவதும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்பதை வலியுறுத்தி தாய் சொல்லைத் தட்டக்கூடாதென்பதைத் "தாய் சொல்லைத் தட்டாதே" என்று வலியுறுத்தப் பாடுகின்றார்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனி சிறந்தனவே" என்பதை மனதிற் கொண்ட பாரதி அதனை வலியுறுத்தி "தமிழ்த்திருநாடுதன்னைப் பெற்றவள் தாய்" என்று வணங்க வேண்டும். தமிழ் என்ற சொல்லுக்கு அமுதம் என்ற பெயர். அமுதம் மிக மிக இனியது. அமுது சாவா மருந்தாகும். அதனால் தினமும் தமிழன்னையைப் போற்றிப் போற்றி பேசவேண்டும். ஒரு காலத்தில் பிறமொழிகள் கலப்படமாகாமல் தனித்தமிழ்மொழியே தலை சிறந்திருந்தது. இதனாலே தான் பாரதி "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்றும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என்றும் பாடியதுடன் "யாமறிந்த புலவர்களிலே கம்பன் போல இளங்கோ போல் வள்ளுவன் போல்........" எனத் தமிழ்ப்புலவர்களையும்,

அவர்களால் யாக்கப்பட்ட நூல்களையும் போற்றினார். தமிழ் மொழியில் மட்டுமே பண்பாடு முதல் சகல கலைகளும் காணப் பட்டமையால் அவற்றைப் பேணி உண்மைகளை, சத்தியங்களைப் பாதுகாத்து, கொலை களவு தொடர்பான பஞ்சமாபாதகங்களை ஒடுக்கி வந்தனர்.

தமிழ்மொழி தாய்மொழி மட்டுமல்ல தெய்வமொழி தெய்வத்தால் பேசப்பட்ட மொழி. தெய்வத்தால் எழுதப்பட்ட மொழியுமாகும். இதற்கு அகச்சான்று புறச்சான்றுகள் பலவுண்டு. எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் ஆலால சுந்தரரின் திருமணத்தை முதிய அந்தணனாக வந்து தடுத்தாண்ட பின் சுந்தரரைநோக்கி எனக்குச் செய்யும் அருச்சனை தமிழ்ப்பாட்டே என்றருளியதாகப் பெரிய புராணத்தில் கூறப்படு கின்றது. பெரியபுராணம் பாட எம்பெருமானே, "உலகெலாம்" என்று தமிழ்ச்சொல்லில் அடியெடுத்துக் கொடுத்தார்.

ஒருமுறை பாண்டியன், தமிழில் எழுத்தும் சொல்லும் இருக்கப் பொருளில்லையே என்று வருந்திய போது இறையனார் எழுதிய அகப்பொருள் நூலும் சான்று கூறுகின்றது. மேலும் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தை எம்பெருமான் அந்தணன் வடிவத்தில் வந்து எழுதியதுடன் "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என அருள மணிவாசகப் பெருமான் கோவை நானூறு துறையும் பாடியதாக திருவாதவூரடிகள் புராணம் பாடுகின்றது.

இவ்வாறான நிகழ்வுகள் எந்தமொழியும் தெய்வம் பாடியது, எழுதியது பேசியதாக இல்லாமையால் தமிழ்மொழி ஆதி அந்தம் இல்லாத இனிமையான தெய்வீக மொழியென "உயர்வு தமிழ்ச் சொல்லே" எனப் பாரதியார் சுட்டியுள்ளார்.

பாலர்களின் சிந்தைகளில் பலவாறான குணநலப் பண்புகளை ஊறச் செய்த பாரதியார் ஆதிகாலந்தொட்டு தொற்று நோயாகப் படர்ந்துவரும் சாதிக்கொடுமைகள் பற்றிக்கூற மறக்க வில்லை. ஆதிகாலத்தில் வேதங்களால் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்ற நான்கு இனங்கள் வகுக்கப்பட்டன. ஒவ்வொரு வகுப்பு இனத்திற்கும் ஒவ்வொரு சிறப்பான தொழில் வாழ்க்கை முறைகள் விதிக்கப்பட்டதாக அறிகின்றோம். இப்போது வருணத்தாரை விடத் தீண்டாச் சாதியென ஒரு இனம் உண்டு. இந்த இனச்சாதிக் கொடுமை இந்தியாவில் காட்டுத்தீயைப்போல் பரவியமை பற்றிப்பல ஊடகங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. ஔவையார் காலத்திலும், வள்ளுவர் காலத்திலும் காணப் பட்டதாக அவர்களின் வாய்மொழி மூலம் அறியக்கிடக்கின்றது.

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்” என்றும், “வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு” என்றும் மக்களின் பண்பு முதலிய நலன்களில் சாதியை ஒப்பிடுகின்றார்.

“சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் – மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி” செந்தமிழ்ச் செல்வி ஔவையார்.

சாதிபற்றிய இலக்கணம் பாடியுள்ளார். இதனையே பாட்டுக்கொரு புலவனாம் பாரதியாரும் வரவேற்று சாதிகளில்லையடி பாப்பா” என அருளினார்.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.” உயர்ந்த உத்தம பண்புகளை அளிப்பது ஆகையால் நீதி உயர்ந்த மதி இவை நிறைய உடையவர்கள் மேலோர். பண்பு போன்ற நற்குணமில்லாத உலோபிகளும் கல்வியால் உயர்ந்ததாக எண்ணுவர். அது பொருத்தமில்லை “கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர்எனின்” என்பது குறள்.

பாப்பாவாக இருக்கும் காலத்திலேயே எல்லா உயிர்களிடத்தும் அன்பு வேண்டும். தெய்வம் என்பது உண்மை. கடவுள் எங்கும் இருக்கின்றார். அவரே எல்லா உயிர்களையும் படைத்தவர் என்ற நம்பிக்கை உண்டாகும் போது அனைத்து உயிர்களும் இறைவனது குழந்தைகள். நாமெல்லோரும் உடன்பிறப்பு என்ற நிறைவு உண்டாக எல்லா உயிர்கள் மீதும் கருணையும் அன்பும் தானாகவே பெருகுகின்றது.

“அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்” என்பது வள்ளுவம், எல்லா



உயிர்கள் மீதும் வைராக்கியமான அன்பு உண்டாகு மானால் ஜீவகாருண்யம் பெருக வேற்றுமையெல்லாம் தேய்ந்து ஒற்றுமை முதலான பண்புகள் வளர “பாப்பா” வயதிலேயே வைராக்கியம் கொள்ள வேண்டும். பால்மணம் மாறாத பாப்பாப் பிள்ளைகள், பாரதியாரின் பாப்பாப் பாட்டின் உட்கருத்தை நன்கு உணர்ந்து சிந்தித்து வைராக்கிய விரதம் காக்க, பிற்காலத்தில் அவர்களின் மனித சமுதாயம் விடிவெள்ளியாகும் என்பது ஆன்றோர் துணிபாகும்.

மாதாஜி.

# கவலை விடு என் தோழா!

பரீட்சையில் தோல்வி என்ற
கவலையா தோழா உனக்கு
கவலை விடு என் தோழா
உந்தன் கண்ணீரைத்
துடைத்து விடு
என் தோழா!

தோல்விகளைக் கண்டு
துவண்டு போகாதே
அவை உனக்கு மட்டுமே
சொந்தமானவையல்ல...!
தூற்றலைக் கண்டு
தலை குனியாதே
தூற்றுபவர்கள் வாழ்த்தும் காலம்
தொலைவிலில்லை
கலங்காதே!

வித்து விதைத்தவுடன்
ஒரு போதும்
பூப் பூப்பதில்லை
குழந்தை பிறக்கும் போதே
நடை பழகிக் கொண்டு
வருவதில்லை
விதி உன்னை விட்டு
வைக்கவில்லையென
விரக்தி கொள்ளாதே!

சூரியனைக் கண்டு மலரும்
செந்தாமரையைப் போல
வெற்றி என்ற
உயரிய இலக்குக்காய்
விழித்தெழு!
நேற்றைய தோல்விகளை
நாளைய வெற்றிகளின்
இலட்சியங்களாக்கிக் கொள்!

பிறகு பார்
விதை போல நீயுமொரு நாள்
விழித் தெழுவாய்!
விருட்சமாவாய்!

ஓடிக் கொண்டேயிருக்கும்
நதியைப்பார்
முட்டி முட்டி முன்னேறும்
முகில்களைப் பார்.
தொடர்ந்து முயற்சி
செய்து கொண்டே இரு
தோல்விகள் கூட உன்னிடம்
தோற்றுப் போகும்
காலம் வரும்...!

தன்னம்பிக்கையையும்
மனவலிமையையும்
உன் முன்னேற்றத்தின்
மூலதனங்களாகும்
'முடியாது' என்ற வார்த்தைக்கு
முழுக்குப் போடு
அதோ பார் தெரிகிறது
புதிய ஒளிக்கீற்று
சந்தேகமில்லை
நாளைய வெற்றிகள்
உனக்குத்தான்!




கவியாக்கம்:.
குறிஞ்சிக்கவி — செ. ரவிசாந்
(இளங்கவிஞன்)
வீரமனை, குப்பிளான்

## சினிமாத் திரையும் - சின்னத் திரையும் - சிறுபார்வை

சினிமாத்திரை என்றால் அதை சாதாரணமாக இரு சொற்களில் கூறிவிடமுடியாது. உலக மக்கள் அனைவரையும் ஆட்டிப்படைக்கும் இத்துறையின் வளர்ச்சியும் சாதனையும் இமாலயத்துக்கு ஒப்பிடக்கூடியது. எத்தனையோ மக்களை விழிப்படையச் செய்தது. எத்தனையோ மக்களை அறிவாளியாக்கியது. பலரைப் பைத்தியகாரனாகவும் ஆக்கியது. ஒரு காலத்தில் அனைவராலும் ஏற்று மதிக்கக்கூடிய கலை இலக்கிய ஊடகமாக விளங்கியது. ஆண்டவனை நேரில் காண விரும்பியவர்களும் ஆலயங்களை தரிசித்து ஆத்மதிருப்தி பெற வேண்டுமென்ற பக்த கோடிகள் பலர் சினிமாத் திரையின் மூலம் ஆலய தரிசனத்தையும் ஆண்டவனையும் கண்டுகளித்தனர். அதன் மூலம் திருப்தி அடைந்தனர். பல்வேறு குடும்பப் பிரச்சினைகளில் சிக்குண்டவர்கள் அதிலிருந்து விடுபடமுடியாதவர்கள், சினிமாப் படக் கதாநாயகர்களால் கதைக்கு ஏற்றவகையில் வெளிப்படுத்தப் பட்ட எண்ணக்கருக்களை தமதாக்கிக் கொண்டு அந்த சிக்கல்களிலிருந்து தம்மை மீட்டு சீரிய வாழ்க்கையை அமைத்துக் கொண்ட வரலாறுகள் பல உண்டு. சிறந்த கதை, வசன அமைப்பு, கருத்துள்ள தத்துவம் பொதிந்துள்ள இனிமையான இசையுடன் கூடிய பாடல்கள், உணர்ச்சிவசமான தத்ரூபமான நடிப்பு சாதாரண மக்கள் அனைவரையும் கவர்ந்தன. யதார்த்தமான காட்சிகள் அமைந்திருந்ததால் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து சினிமாப்படங்களைப் பார்த்து மகிழ்ந்தனர். தென்னிந்திய சினிமாத்துறையின் ஒவ்வொரு எடுத்துக்காட்டும் இலங்கைத் தமிழ் மக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. உலகளவில் தமிழ்ப் பண்பாடு, கலாசாரம், இலக்கியம், நீதிநெறி முறைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த சாதனமாக சினிமா அமைந்திருந்தது. படிப்பறிவு குறைந்த பாமர மக்கள் கூட சினிமாத் திரைப்படங்களை பார்த்து அதன் கதாபாத்திரங்கள் போல தம்மையும் கற்பனை செய்து சிறந்த அறிவாளிகளாகவும் உழைப்பாளிகளாகவும், நீதி நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவர் களாகவும் மாறியதுடன்

**படிப்பறிவு குறைந்த பாமர மக்கள் கூட சினிமாத் திரைப்படங்களை பார்த்து அதன் கதா பாத்திரங்கள் போல தம்மையும் கற்பனை செய்து சிறந்த அறிவாளிகளாகவும் உழைப்பாளி களாகவும், நீதி நெறிமுறைகளைக் கடைப் பிடிப்பவர்களாகவும் மாறியதுடன் தன்சார்ந்த சமூகத்தினரின் வழி காட்டியாகவும் உருவாக்கிய பெருமை தமிழ்ச் சினிமாத்துறைக்கே சொந்தமானது.**

தன்சார்ந்த சமூகத்தினரின் வழி காட்டியாகவும் உருவாக்கிய பெருமை தமிழ்ச் சினிமாத்துறைக்கே சொந்தமானது.



வடவரணி ச.சபா

தென்னிந்திய தமிழ் திரைப்படங்களின் வருகை 1933ம் ஆண்டு யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் அருகில் உள்ள ஒரு கொட்டகையில் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து 1935இல் றீகல் தியேட்டர் என அழைக்கப்பட்ட தகரக் கொட்டகையில் காண்பிக்கப்பட்டது. இதன்பின் மனோகரா, வெலிங்டன் போன்ற ஏனைய தியேட்டர்கள் உருவாகின. அதன்பின் படிப்படியாக யாழ்மக்கள் தென்னிந்திய திரைப்படங்களை கண்டுகளித்தனர். காலப்போக்கில் அதனுடன் ஒன்றிணைந்து கொண்டனர்.

தமிழ் நாட்டில் தி.மு.க கட்சியின் வளர்ச்சி அதன் அரசியல் பிரவேசம் ஆட்சியமைப்பு, இன்றைய தமிழக ஆட்சியமைப்பு அனைத்துக்கும் வித்திட்டது அல்லது வழி சமைத்தது தமிழ் சினிமாத்துறைதான் என்றால் மிகவும் பொருத்தமானது.

அப்படிப் பெருமை வாய்ந்த தமிழ் சினிமாத்துறை இன்று மட்டரகமான ரசனையின் வெளிப்பாடாகத் திகழ்வது மிகவும் வேதனைக்குரியதாகும்.

அன்றைய காலகட்டத்தில் திரைக்கு வந்த சினிமாக்கள் “யதார்த்தத்தை” அடிப்படையாக வைத்து வெளியிடப்பட்டன. அதாவது மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் ஒத்துப்போகக் கூடிய நடைமுறைச் சாத்தியங்களையே இங்கு “யதார்த்தம்” என்று குறிப்பிடப்படுகிறது.

தற்போது ஒரு சில தசாப்த காலத்துக்குப் பிற்பட்ட சினிமாத்திரைப்படங்கள் ஆங்கிலப்பாணியை பின்பற்றி யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட காட்சிகளையும், கலை கலாசாரத்திற்கு ஒவ்வாத காட்சிகளையும், பாலுணர்வைத் தூண்டும் பண்பாட்டுச் சிதைவான காட்சிகளையும் வெளிப்படுத்துவதனால் அதை மட்டரகமான ரசனைத்தன்மையைக் கொண்டவர்களுக்காக தயாரிக்கப்பட்ட திரைப்படங்களாகவே பலர் உற்று நோக்குகின்றனர். அதாவது பருவ வயதினருக்காகவும் (டீன் ஏச்) நாகரிகப் போக்குடையவர்களுக்காகவும் பொழுதுபோக்கினை விரும்புபவர்களுக்காகவும் தயாரிக்கப்பட்ட படங்களாகவே கருதுகின்றனர். இப்படங்கள் லட்சக்கணக்கில், ஏன் கோடிக்

கணக்கில் கூட வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்றன. இந்த வருமானத்தில் குறிப்பாக உள்ள தயாரிப்பாளர்கள், விமர்சனத்தைக் குறைப்பதற்காக "கஞ்சிக்குப் பயறு போட்டது போல" சில யதார்த்தமான காட்சிகளையும், காதல், வீரம், சோகம் போன்ற ஒருசில காட்சிகளையும் இணைத்துக் கொள்ளத் தவறுவதில்லை.

கதாநாயகன் கஞ்சிக்கும் வழியில்லாத பரம ஏழையாக இருப்பான். ஆனால் அவன் அணிந்திருக்கும் உடை கோடீஸ்வரன் அணியும் உடையாக இருக்கும். ஐம்பதுக்கும் மேற்பட்ட குண்டர்களுடன் சண்டை பிடிப்பான், அவனை யாரும் வெல்ல முடியாது. அரை நொடியில் அனைவரையும் அடித்து வீழ்த்தி விடுவான். இரும்புக்கூட்டுக்குள் பெரிய சங்கிலியால் கட்டியிருந்தாலும் உடைத்துக் கொண்டு வெளியில் வருவான். ஒரு கட்டிடத்திலிருந்து தலைகீழாக குதிக்கும் போது இரு எதிரிகளை காலால் அடித்து வீழ்த்துவான். இப்படிப்பல காட்சிகள் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டிருக்கும்.



இவற்றைப் பார்ப்பவர்கள் ஓர் "மாயாஜால வித்தையை" பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருப்பர். சிலர் விசில் அடித்துக் கைதட்டுவார்கள். இதுதான் சினிமா. அண்மையில் மாயாஜால வித்தையின் மன்னனான இந்தியாவைச் சேர்ந்த "மஜிக் மன்னன் மிஸ்ரா" இலங்கைக்கு வந்து வித்தை காட்டியபோது அதைப் பார்ப்பதற்கு ரசிகர்கள் முண்டியடித்தனர். பத்தாயிரம் ரூபாவுக்கும் ரிக்கற் கிடைக்கவில்லை. மிஸ்ரா காட்டிய வித்தைகள் மிகவும் அபூர்வம். "மாயாஜாலவித்தை - இது சினிமாத் திரைப்படம்" என்பதை உணரும் ரசிகர்கள் குறைவு.

சினிமாத்திரை யதார்த்தத்தைவிட்டு வெகுதூரம் விலகிச் செல்வதனால், தரமான ரசிகர்கள் சின்னத்திரையின் பக்கம் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றனர்.

யதார்த்தமானதும் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த வெளிப்பாடுகளைப் பிரதிபலிப்பதுமான "சின்னத்திரை"க்கு இப்போது மவுசு ஏற்படத் தொடங்கியுள்ளது.

ஒரு குடும்பத்தில் நடக்கக்கூடிய சம்பவத்தைக் கொண்ட பின்னணியுடன் இணைந்த கதை. அதைச் சித்திரித்துக்காட்டும்

காட்சிகள், உயிரோட்டமான நடிப்பு, சிறந்த வசன அமைப்பு என்பன சின்னத்திரையின் சிறப்பான அம்சங்களாக அமைந்துவிடுவதனால், அதனை ரசித்துப்பார்க்கும் ரசிகர்கள், அதனுடன் ஒன்றிணைந்து விடுவது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது. இதனால் சின்னத்திரைக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு காணப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து, குறிப்பாகப் பெண்கள் ரசிப்பது ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் அன்றாட காட்சியாக உள்ளது.

தமிழ்த் திரைப்படங்கள் யதார்த்தத்தை விட்டு வெகுதூரம் விலகியபோதும், ஏனைய மலையாள, ஹிந்திப் படங்கள் இன்றுவரை வெகுதூரம் விலகவில்லை என்றே கூறவேண்டும். மேலும் யதார்த்தத்தின் வெளிப்பாடாக அமைந்த சில பிறமொழிப் படங்களையும், இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. 1968/69ம் ஆண்டு காலப்பகுதியில் திரைக்கு வந்த "செம்மீன்" என்ற மலையாளப் படத்தை உதாரணமாகக் கொள்ளலாம். இதன் கதாநாயகன் "சத்தியன்" என்ற நடிகர். இது மீனவக்குடும்பம் ஒன்றின் கதை. அந்தக் குடும்பத்தைக் காட்டுகிறார்கள். கடற்கரையில் ஓர் சிறுகுடிசை. அதற்குள் ஓர் கயிற்றுக்கட்டில். வீட்டுக்குள் கட்டப் பட்டிருக்கும் கயிற்றுக்கொடியில் ஒரு துவாய், சில சாறங்கள், ஒரு போர்வை, வீட்டு தாழ்வாரத்தில் மீன்பிடிக்கும் வலை, தூண்டில் அவ்வளவுதான். கதாநாயகன் கதாநாயகியை சந்திக்கும் காட்சி, அங்கு பூஞ்சோலை இல்லை. மொட்டை மாடி இல்லை. கடற்கரையில் கழித்து விடப்பட்ட உடைந்துபோன ஓடங்களின் மறைவிடம். அங்குதான் சந்திப்பு இப்படத்துக்கு அந்நாளில் இந்திய ஜனாதிபதியின் பரிசு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இதேபோல் அமையப்பெற்ற தமிழ்ப்படங்கள் இல்லையா? என்ற கேள்வி எழலாம். தமிழில் தயாரிக்கப்பட்ட படங்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப ஒப்பீடு செய்து பார்க்கும் போது அப்படி அமைந்த படங்களின் விகிதாசாரம் குறைவு என்றுதான் கூறவேண்டும். மலையாளத்திரைப்படத்தில் ஓர் உதாரணம் கூறியது போல ஆங்கித்திரைப்படத்திலும் ஓர் உதாரணம்.

காந்தி திரைப்படத்தில் மகாத்மா காந்தியை "கோட்சே" சுட்டுக் கொன்றுவிட்டான். அஹிம்சா மூர்த்தியும், தேச பக்தனுமான காந்தியை இந்த உலகம் இழந்துவிட்டது. காந்தியின் மரணத்தினால் இந்த முழு உலகமுமே கண்ணீர்விட்டு அழுகிறது. அவரின் மரண ஊர்வலத்தில் வானமே அழுவது போன்று

சோகம் கப்பிக்கிடக்கிறது. எல்லோர் இதயத்திலும் இரத்தம் கசிவது போன்ற மனோநிலை. இது ஓர் பிரதான காட்சி. இங்குதான் படத்தின் உயிரோட்டம்.

இக் காட்சியைப் படமாக்க ஆயிரக்கணக்கான மக்களை வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். அதில் சிறுவர்கள் குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப்பலரும் அடங்கியிருந்தனர். காந்தியின் மரண இறுதி ஊர்வலத்தை அவர்களை வைத்துப் படமாக்கினர். காட்சியைத் திரையிட்டுப் பார்த்தபோது இயக்குனர் திருப்திப்படவில்லை. காரணம் அவர்கள் எவரின் முகத்திலாவது சோகம் காணப்படவில்லை. அவர்கள் அனைவருக்கும் தெரியும் நாங்கள் படப்பிடிப்புக்காக அழைத்துச் செல்லப்படுகிறோம் என்பது. தங்களை நேர்த்தியாக அழகுபடுத்தி முகங்களை கமிரா முன் நீட்டியிருந்தமைதான் அதற்குக் காரணம். இக்காட்சியில் இயக்குனரால் எதிர்பார்க்கப்பட்ட கவலையோ! சோகத்தின் சாயலோ அவர்கள் முகங்களில் காணப்படாமையினால் 300 அடிவரை படமாக்கப்பட்ட காட்சி வெட்டி எறியப்பட்டது.

இதன்பின்னர் எவ்வித முன்னறிவிப்புமின்றி அரச அனுமதியுடன் ஓர் ஊருக்குச் சென்று, ஏன்? எதற்கு? என்று தெரியாமல் அங்குள்ள அனைவரையும், அதாவது ஏழை, பணக்காரன், சிறுவர், சிறுமி, யுவதிகள், இளைஞர், முதியவர்கள், அரச ஊழியர்கள், பலரையும், அரச வாகனங்களில், குடும்பங்களாகவும், தனியாகவும் ஏற்றி ஓர் இடத்துக்குக் கூட்டிச் சென்றனர். தாம் எங்கு கொண்டு செல்லப்படுகிறோம், தமக்கு என்ன நடக்கப் போகிறது என்பது தெரியாமல் பயத்துடனும் பலர் அழுதபடியும் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரிடமும் மரணபீதி காணப்பட்டது. அவர்களை வைத்து ஒருசில மணித்தியாலயங்களில் மகாத்மா காந்தியின் மரண ஊர்வலம் படமாக்கப்பட்டது.

பின் அவர்கள் அனைவரும் உரிய இடங்களில் இறக்கிவிடப்பட்டு அவர்களிடம் மன்னிப்புக் கோரியதுடன் சிலருக்கு சன்மானமும் வழங்கப்பட்டது.

இக்காட்சி பின்னர் திரையிட்டுப் பார்த்தபோது காந்தியின் மரண ஊர்வலத்தில் முழு உலகுமே சோகத்துடன் அழுவது போன்று அக்காட்சி தத்ரூபமாக அமைந்திருந்தது. சினிமாத் துறையின் அதிஉச்சவிருது சூர்க்கால் (ஓர்க்காஸ்) என அழைக்கப்படுகிறது. இதில் ஒருவிருதைப் பெறுவதே கடினம்.

ஆனால் காந்தி படத்துக்கு ஆறுக்கு மேற்பட்ட (ஒரே படத்துக்கு) ஆர்க்காஸ் விருது கிடைத்தது ஒரு வரலாற்றுச் சாதனை ஆகும். இதற்குக் காரணம் அப்படத்தின் "யதார்த்தம்" என்றால் மிகவும் பொருத்தமானது.

இந்த யதார்த்தத்தின் வெளிப்பாடுகளை சினிமாத்திரையை விட சின்னத்திரையே கூடுதலாக வெளிப்படுத்துகிறது. மேலும் கதாபாத்திரங்களின் அளவான அல்லது பொருத்தமான நடிப்பும் எம்முடன் இணைந்துவிடுகிறது.

சினிமாத்திரையை விட சின்னத்திரை மக்கள் மத்தியில் கூடுதலான ஈடுபாட்டினைக் கொண்டிருந்தாலும் சின்னத்திரையால் ரசிகர்களை முழுமையாக திருப்திப்படுத்த முடியாத சில குறைபாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.



சின்னத்திரை மூலம் வெளிப்படுத்தப்படும் காட்சித் தொடர், சினிமாத்திரையில் வெளிப்படுத்தப்படும் காட்சித் தொடரைப் போல, இரண்டரை அல்லது மூன்று மணித்தியாலங் களில் முடிவடைவதில்லை. ஆறு மாதங்களோ அல்லது ஒரு வருடங்களோ தொடரும் நிலை தென்படுகிறது. இதனால் ரசிகர் களின் பொறுமை சோதிக்கப்படுகிறது. நாளாந்தம் அரை மணித்தியாலங்கள் காண்பிக்கப்படும். தொடர் காட்சிகள், அதிலும் அடிக்கடி விளம்பரங்கள், இவை ரசிகர்கள் மத்தியில் மேலும் சலிப்புத் தன்மையை உருவாக்குகின்றன. இக் குறைபாடுகள் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் இருந்தபோதும் எதிர்கால்த்தில் அவற்றை மாற்றியமைக்க வழிவகைகள் உருவாக்கப்படவேண்டும்.

சினிமாத் திரைப்படங்களின் வெளிப்புறக் காட்சிகள் பல்வேறு நாடுகளில் எடுக்கப்படுவதினால் அக்காட்சிகளை ரசித்து மகிழும் ரசிகர்களுக்கு சின்னத்திரையில் அக்காட்சிகளைப் பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பம் மிகவும் அரிதாகிறது. சின்னத்திரை, ஒரு குடும்பக்கதையை யதார்த்தமாக வெளிப்புறக் காட்சிகளை உலக நாடுகளில் எடுக்க வேண்டிய கட்டாயமில்லாது விடுகிறது. அக்காட்சிகள் மிகைப்படுத்துவதாகவும் அமைந்துவிடும். எனவே

மலைகள், நீர்வீழ்ச்சிகள், வானுயர்ந்த கட்டிடங்கள், விமான நிலையங்கள், கோட்டை கொத்தளங்கள், அழகான வீதிகள், பூங்காக்கள் போன்ற இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பம் சின்னத்திரை ரசிகர்களுக்குக் கிடைப்பதில்லை. கதையோடு சம்பந்தப்பட்டிருந்தால் மட்டுமே அக்காட்சிகள் இடம்பெறும் சந்தர்ப்பம் உண்டு.

**சின்னத்திரையில் இடம்பெறும் காதல் காட்சிகள் மிகைப்படுத்திக் காண்பிக்கப்படுவதில்லை. இருவரும் காதலிக்கிறார்கள் அவ்வளவுதான். அதை வெளிப்படுத்த ஒருசில சந்தர்ப்பங்கள். விபச்சாரத்தின் வெளிப்பாடான "அம்மணக்" காட்சிகள் கூட அடக்க ஒடுக்கமான சமூகப் பார்வையுடன்தான் வெளிப்படுத்தப்படுகிறது. இதுதான் தேவை.**

மேலும் சின்னத் திரையில் செவிக்கினிய பாடல்களையும், அப் பாடல்களில் உள்ள தத்துவங்களையும் கவித்துவங்களையும் காணமுடிவதில்லை. இதுவும் பெருங்குறைபாடாக ரசிகர்களுக்கு இருப்பதனால் ரசிகர்கள் சினிமாத்திரையை நாடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மேலும் சின்னத்திரையின் மூலம் ரசிகர்கள் பூரண திருப்தியை அடையவில்லையே தவிர கலாசார பண்பாட்டு சீரழிவுகளைச் சந்திக்கவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

சினிமாத்திரையில் காண்பிக்கப்படும் காதல் காட்சிகள் மிகவும் அருவருக்கத்தக்கதாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. தலைவாரிப் பொட்டுவைத்து பூமுடித்து "மகாலட்சுமி" போல் காட்சிதந்த தமிழ்ப்பெண், தலைவிரி கோலமாக கூந்தலை விரித்து ரவிக்கை கூட இல்லாது கட்டிப்புரளும் காட்சி, பின் காதலனால் ஏமாற்றப்படும் போது தான் ஒரு தமிழ்ப்பெண் என்பதை நிரூபிக்க, வீரவசனம் பேசி சமூகத்துக்கு விளக்கும் நிலை "சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது"

சின்னத்திரையில் இடம்பெறும் காதல் காட்சிகள் மிகைப்படுத்திக் காண்பிக்கப்படுவதில்லை. இருவரும் காதலிக்கிறார்கள் அவ்வளவுதான். அதை வெளிப்படுத்த ஒருசில சந்தர்ப்பங்கள். விபச்சாரத்தின் வெளிப்பாடான "அம்மணக்" காட்சிகள் கூட அடக்க ஒடுக்கமான சமூகப் பார்வையுடன்தான் வெளிப்படுத்தப்படுகிறது. இதுதான் தேவை.

இரு பக்கங்களையும் ஆராய்ந்து கூட்டவேண்டியதைக் கூட்டி, கழிக்க வேண்டியதைக் கழித்து சமூகத்துக்குச் சொல்ல

வேண்டியதைச் சொல்லி காட்டவேண்டியதைக் காட்ட வேண்டும். அதற்காக சினிமாத்திரை பழைய படங்களில் வரும் வசனங்களைப் போன்று மனைவி கணவனை "நாதா – சுவாமி" என அழைக்க வேண்டுமென்பதல்ல. கன்னிப்பெண் 16 முழசேலையை வரிந்து கட்டிவர வேண்டுமென்பதல்ல. தியாகராசா பாகவதர் காலத்து பாடல்களைப் புகுத்த வேண்டுமென்பதல்ல. ஒரு படத்தில் 20க்கு மேற்பட்ட பாடல் இருக்க வேண்டுமென்பதல்ல. காலமாற்றத்துக்கும் அதன் போக்குக்கும் அமைய ஏற்படும் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு, சமூக கலாசார பண்பாட்டுச் சீரழிவுகளைத் தவிர்த்து யதார்த்தரீதியில் மட்டரக ரசனையற்ற சினிமாப் படங்களைத் தயாரிக்க வேண்டுமென்பதே நோக்கமாகும்.


இந்த அடிப்படை அம்சங்களைக் கவனத்தில் கொள்ளாது தயாரிக்கப்படும் படங்களால் பல ரசிகர்களின் கைதட்டல்களைப் பெறமுடியும், கொழுத்த வசூலைப்பெறமுடியும். மேலும் பொழுதுபோக்காக ரசிக்க முடியுமே தவிர, பெறுமதி மிக்க இந்த ஊடகத்தினால் சமுதாயத்துக்கு எதையுமே செய்யமுடியாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## சிந்தனைத் துளிகள்

1. மலையளவு உபசாரம் செய்தாலும் கடுகளவு அபகாரம் செய்யாதே
2. தீயோனுக்கு நல்லோனாக இருந்தாலும் இரு. நல்லோருக்கு மட்டும் தீயோராக இராதே
3. அறிவாளி ஒருவன் கெட்டதையும் ஏற்று சிந்திக்கத் தொடங்குகிறான்.
4. பார்த்தவுடன் புரிந்து கொள்பவன் ஞானி பழகாமல் புரிந்து கொள்பவன் அறிவாளி பழகிப் புரிந்து கொள்பவன் ஏமாளி.
5. உன்னைவிட மேலானது எல்லா வகையிலும் உண்டு என்பதை மறக்காதே நானே எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதை மறந்துவிடு.
6. ஏற்காதவனுக்கு அறிவுரை வழங்காதே அது உனக்கே ஆபத்தைக் கொண்டு வரும்.
7. பல வழிகளிலும் வருமானத்தைத் தேடும் ஒருவனால் தான் அநேகர் ஏமாற்றப்பட்டிருப்பார்கள்.

# பாலு(ன்) பாடம்

அந்தப் பாடசாலை வெகு அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. மங்கல தோரணங்கள் பிரதான நுழைவாயிலின் இருபுறமும் வீதியெங்கணும் கட்டப்பட்டிருந்தன. சோடி வாழைகள் பசிய இலை பரப்பி சூழலை மெருகூட்டின. வாசலில் சம்பிரதாய பூர்வமாக நிறைகுடம் வைக்கப்பட்டிருந்தது. பொருத்தமானவரின் கைகளால் ஏற்றப்பட்டு சுடர்விட்டெரிவதற்காக குத்துவிளக்கு காத்திருந்தது. அன்று பாடசாலையில் ஏதோ விழா நடக்கப் போகின்றது. ஆம்! பாடசாலையின் வருடாந்த முத்தமிழ் விழா அன்று தான். அதற்காகத் தான் அத்தனை ஏற்பாடுகள். விழா மண்டபம் சிறப்பான அலங்காரத்தில் மிளிர்ந்தது. வர்ண மாலை களாலும் பலவர்ண மின்குமிழ்களாலும் அழகுப்படுத்தப்பட்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட விழா மேடையிலே முக்கியஸ்தர்கள் அமர்வதற்காய் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. மேடையின் முன் ஓரமாய் ஒலிவாங்கி தன் கடமைக்காய் பவ்யமாய் பார்த்திருந்தது. மண்டபம் முழுமையும் ஆசனங்கள் ஓர் ஒழுங்கில் அடுக்கப்பட்டிருந்தன.



நேரம் காலை ஒன்பது மணி. "எமது பாடசாலையின் 2012ம் ஆண்டிற்கான முத்தமிழ் விழா இன்னும் சற்று நேரத்தில் ஆரம்பமாக வுள்ளது." வழமையான அறிவித்தல் காற்றில் கலந்தது. அறிவித்தலின் அரைமணி நேரம் கழித்து பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டவர் கல்லூரி மண்ணில் கால் பதித்தார். பாடசாலை மாணவர் களின் வாத்திய வரவேற்புடன் அவர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். மாலை அணிவித்துக் கௌரவிக்கப் பட்டார். அதிதியால் மங்கலவிளக்கு ஏற்றப்பட்டது. பாடசாலைக் கொடியை அதிபர் ஏற்றிய போது பாடசாலைக்கீதம் இசைக்கப் பட்டது. இறைவணக்கம் முடிந்து விருந்தினர், மேடைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

நிகழ்வுகள் நடந்தேறின. அதிபர் ஆசியுரை வழங்கினார். மண்டபத்தில் மாணவர்கள் அமைதியாக நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். தினமும் வெள்ளைச் சீருடை அணிந்து அன்னப்பட்சிகளாய் சிறகடிக்கும் அவர்கள் இன்று தூரிகையால்

வரைந்த வண்ண ஓவியங்களாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தனர். ஆண் மாணவர்கள் அனைவருமே வேட்டி கட்டியிருந்தனர். வெள்ளை சேட் அணிந்திருந்தனர். சிறு பிள்ளைகள் வேட்டியுடன் அமர்ந்து தங்களைப் பெரியவர்களாய்ப் பாவனை செய்து கொண்டிருந்தனர். அவர்களது குழந்தை முகங்களில் தென்பட்ட பெருமிதத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை.

ஆண்பிள்ளைகள் இப்படியென்றால் பெண்பிள்ளைகளின் சந்தோசத்தைச் சொல்லவே தேவையில்லை. பாதம் தொடும் பட்டுப் பாவாடை. ஏற்றாற் போல் சட்டை அணிந்து பட்டாம் பூச்சிகளாய்ப் பறந்தனர். கலை நிகழ்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. முன்வரிசையில் இருந்த ஒரு சிட்டுக்குருவி வெள்ளை வேட்டி சட்டையுடன் தன் விரிந்த விழிகளால் மேடையைக் கவனித்துக் கொண்டிருந்தது. நடனம் மேடையில் நடைபெற்ற போது தானும் ஆடுவதாய் அசைந்தது. பாடல் நடைபெற்ற போது தானும் இதழசைத்துக் கொண்டது. கலகலவெனச் சிரித்தது. முகம் முழுக்க சந்தோசச் சாயலோடு அந்தக் குழந்தை, நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தது. இடையிடையே அருகிலிருந்த தன் நண்பனுக்கு ஏதேதோ கூறியது. நிகழ்வுகள் பற்றிய அதன் விமர்சனம் அது. அவனது பார்வை பல தடவைகள் அதன் வேட்டி சட்டையிலே பதிந்து மீண்டது. அதனை நான் அடிக்கடிப் பார்த்து மனதுள் சிரித்துக் கொண்டேன். புதிதாகத் தான் அணிந்த ஆடையால் அவனுக்குப் பெருமிதம் ஏற்பட்டு விட்டது. அவனது சுட்டித்தனமும், குறுகுறு பார்வையும், அழகும் என்னை வெகுவாகவே கவர்ந்துவிட்டன.

தொடரும் நிகழ்வாகத் தரம் ஒன்றைச் சேர்ந்த மாணவன் செல்வன் கிருஷ்ணா திருக்குறள் சொல்ல வருகிறார். மேடையிலிருந்து ஒலி வரவும் என் கவனத்தை ஈர்த்த அந்தச் சுட்டிப்பையன் ஒரு கையால் வேட்டியைப் பிடித்துக் கொண்டு அழகு நடையில் மேடை நோக்கிச் சென்றான். இவன் பெயர் கிருஷ்ணாவா? பொருத்தமான பெயர்தான். சபையோர்க்குத் தன் மழலைக் குரலில் வணக்கம் சொன்னான். விருந்தோம்பல் எனும் அதிகாரத்திலிருந்து குறள் கூற ஆரம்பித்தான்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

வீட்டிலே இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம் விருந்தினரை உபசரித்து அவர்கட்கு உபசாரம் செய்வதற்கே ஆகும். மழலை மொழியாயினும் தமிழ் உச்சரிப்பில் மாற்றமேதுமின்றித்

தெளிவாகத் தயக்கமின்றி அழகாகத் திருக்குறளையும் அதன் பொருளையும் கூறினான். பத்துக் குறள்களையும் அவற்றின் பொருளையும் செம்மையாகக் கூறியபின் நன்றி கூறி விடைபெற்றுச் சென்றான். தன் இருக்கையில் அமர்ந்து மேடை நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.



மேடையில் அமர்ந்திருந்தவர்களுக்கு தேநீர் உபசாரம் நடைபெற்றது. தேநீரும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. கேக், பிஸ்கட், வடை என்று மாணவர்கள் பரிமாறினார்கள். அவர்களும் மேடையில் அமர்ந்தவாறு அவற்றைச் சாப்பிட்டனர். நான் கிருஷ்ணாவைப் பார்த்தபோது அவன் மேடையில் அமர்ந்திருப்பவர்கள் சாப்பிடுவதையே ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். வேறு சில பிள்ளைகள் போல் குழப்பம் செய்யாமல் அவன் ஆரம்பத்திலிருந்தே மேடை நிகழ்வுகளைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்ததால் அவன் இப்பொழுது பார்த்ததையும் நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சற்று நேரம் தாமதித்து அவனைப் பார்த்த போதும் அவர்கள் சாப்பிடுவதையே அவன் பார்த்துக்கொண்டிருந்தான். முகம் பல்வேறு உணர்வுகளின் ஒட்டுமொத்தக் கண்ணாடியாகத் தெரிந்தது. எனக்கு என்னவென்று புரியவில்லை.

"மதிப்பிற்குரிய எமது பிரதம விருந்தினர் அவர்கள் இப்போது உரையாற்றுவார்கள்." அறிவிப்பைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையாற்றத் தொடங்கினார். பாடசாலையின் நல்ல அம்சங்கள் பற்றிக் கூறினார். கல்வி இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஏற்படும் முன்னேற்றம் பற்றிக் கூறினார். இன்றைய முத்தமிழ் விழா நிகழ்வில் மாணவர் அனைவருமே தமிழ் கலாசார ஆடைகளுடன் வந்திருப்பதையிட்டு தன் மகிழ்ச்சியைக் கூறி பாராட்டுக்களையும் தெரிவித்தார். திறமையாகச் செயற்பட்ட மாணவர்க்கு வாழ்த்துக்களைக் கூறினார். அதிலும் தரம் ஒன்று மாணவன் கிருஷ்ணா திருக்குறள் விருந்தோம்பலை என்ன அழகாக மனனம் செய்து கூறினான். அந்த மாணவனுக்கு விசேட பாராட்டுக்கள் என்றும் கூறினார். இவ்வளவு நேரமாக பிரதம

விருந்தினர் உரையைக் கவனித்துக் கொண்டிருந்த நான் கிருஷ்ணாவின் பெயர் கேட்டபோது தான் அவனைத் திரும்பிப் பார்த்தேன். அங்கே... அங்கே... கிருஷ்ணாவின் அகன்ற விழிகள் இரண்டும் நீரால் நிரம்பியிருந்தன. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. மெல்லிய விசும்பல ஒலி. கைகள் ஒன்றுடனொன்று பிசைந்து கொண்டிருந்தன. கிருஷ்ணாவைப் பார்க்க எனக்கு என்னவோ போலிருந்தது. அந்தக் குழந்தையிடம் நெருங்கினேன். "தம்பி கிருஷ்ணா, ஏனய்யா அழுகிறாய்? என்ன பிரச்சினை சொல்லுங்கோ" அவன் தலையைக் கோதியவாறு கேட்டேன். தன் பிஞ்சு விரலால் மேடையைச் சுட்டிக் காட்டினான். எனக்கு என்னவென்று விளங்கவில்லை. அவனது விசும்பல் இன்னும் அதிகரித்தது. என்னவென்று புரியவில்லை. ஏன் இவன் மேடையைக் காட்டி அழுகிறான். நான் கிருஷ்ணாவை அவ்விடத் திலிருந்து தனிமையில் அழைத்து வந்தேன். "கிருஷ்ணா அழவேண்டாம். அழாமல் என்னவென்று சொல்லுங்கோ" பசி...க்....குது விசும்பலின் இடையே எழுத்துக்கள் ஒவ்வொன்றாய் வந்து சேர்ந்தன. ஓ! என் இதயம் கசக்கப்பட்டது. இந்தக் குழந்தைக்குப் பசியா? பசியால் தான் அழுததா? இவ்வளவு நேரமாக ஆசையாய் ஆர்வமாய் நிகழ்ச்சிகளைப் பார்த்திருந்த குழந்தை பசியால் அழுகிறது. மேடையை அது சுட்டிக் காட்டியதன் அர்த்தம் இப்போது தான் எனக்குப் புரிந்தது. பசியோடு இருந்த குழந்தை. மேடையில் இருந்தவர்கள் விதவிதமாய்ச் சிற்றுண்டிகளை உண்டபோது அவனது பசி இன்னும் தூண்டப்பட்டு விட்டது. குழந்தை தானே அடக்க முடியவில்லை அழுதுவிட்டான். பசியால் பரிதவித்தது அந்தப் பிஞ்சு. அவனை ஆறுதல் படுத்தினேன். கரங்களால் கண்ணீரைத் துடைத்தேன். அந்தக் குழந்தையின் பசியைத் தீர்ப்பது தான் எனது அந்நேர உடனடிக் கருமமாய் இருந்தது. சிற்றுண்டி கொடுத்த உயர்தர மாணவியை அழைத்தேன். ஒரு தட்டில் சிற்றுண்டிகளை வைத்துக் கொண்டு வருமாறு கூறினேன். கிருஷ்ணாவை ஒரு கதிரையில் இருத்தி அவன் முன்னால் சிற்றுண்டித் தட்டை வைத்தேன். கிருஷ்ணா ஆவலாக ஆசையாக அவற்றை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான். தேநீர் வேண்டாம் என்று மறுத்து விட்டான். வைத்த உணவில் தன் பசிதீர உண்டு விட்டு மிகுதியைத் தட்டிலேயே விட்டுவிட்டான். "சாப்பிடு" என்று நான் சொன்னபோதும் "காணும்" என்று மறுத்து விட்டான். தன் குட்டி வயிறு நிரம்பி பசி மறைந்த பின் தான் அவனது முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. சந்தோசமாய்ச் சிரித்தான். கதிரையிலிருந்து துள்ளி இறங்கினான். "நான் நிகழ்ச்சி பார்க்கப் போறேன்" மழலையாய்க் கேட்டான். "சரிபார்ப்போம் வா" என்று அவனை மண்டபத்திற்கு

அழைத்துச் சென்றேன். சந்தோசமாகத் தன் கதிரையில் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தொடங்கினான் கிருஷ்ணா.

அந்த நேரத்திலே ஒரு குழந்தையின் பசியை உடனடியாகத் தீர்க்க முடிந்ததில் எனக்கு ஆத்ம திருப்தி! ஆனால் அந்தச் சபையிலே இன்னும் எத்தனை எத்தனை கிருஷ்ணாக்கள் பசியோடு இருப்பார்கள்? ஒவ்வொரு கிருஷ்ணாவையும் என்னால் அடையாளம் காண முடியுமா?


அந்த நேரத்திலே ஒரு குழந்தையின் பசியை உடனடியாகத் தீர்க்க முடிந்ததில் எனக்கு ஆத்ம திருப்தி! ஆனால் அந்தச் சபையிலே இன்னும் எத்தனை எத்தனை கிருஷ்ணாக்கள் பசியோடு இருப்பார்கள். ஒவ்வொரு கிருஷ்ணாவையும் என்னால் அடையாளம் காணமுடியுமா?

மேடையில் கிருஷ்ணன் கூறிய திருக்குறள் ஏனோ என் ஞாபகத்திற்கு வந்தது.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

---

## பெண் என்று பிறந்து விட்டால்......




பெண் என்று பிறந்து விட்டால் - பாரில்
பெரும் சுமை உள்ளதடி
குடும்பமதைக் கோயிலாக்கும் - பெண்தான்
இவ்வுலகை நன்கு பேணிட வழி வகுப்பாள்
பெண் என்றால் பேயுமிரங்குமென்று
சொன்ன காலமது போய் விட
ஆணுக்கு அவள் சமனென்று
கணக்கிடும் காலமிது புரிந்து கொள்

அன்றொரு காலம் பெண் வீட்டில்
அடிமையாய் முடங்கியிருந்தாள்
ஆண்களுக்கு அவள் அடங்கியே – அவள்
கண்ணீருடன் காலமதை ஓட்டினாள் - இன்றோ
பெண்ணில்லையென்றால் எதுவுமேயில்லையென்று
உன் புகழ் உயருதடி அறிந்துகொள்

சமையலோடு மற்றும் பல – வேலைகள்
சுமந்து கொண்டு பணியாற்றி
கூலிகள் ஏதுமின்றியே – அவள்
அடிமையாய் வாடி நின்ற காலமது

மறந்து போய் விட்டதடி – என
உன் புகழ் தான் கொடி கட்டி பறக்குதடி



பாரதி வந்தார் மெல்ல –விடிவு
கண்டிட குரல் கொடுத்தார்
ஆணுக்கு பெண் தானிங்கு – நிகர்
இதனை உணர்வாய் என்றார்
பாரதி கண்ட புதுமைப்பெண் தான் - இன்று
பூவுலகை ஆள்கின்றாள் பார்


சட்டங்கள் ஆளவும் - பாரில்
பட்டங்கள் பல பெற்றிடவும்
பெண் இன்று தயங்கவில்லை
எல்லாத்துறையிலுமின்று அவள்
வல்லமை படைத்து நிற்கின்றாள் - இது
வரலாறு கண்ட உண்மை தெரிந்து கொள்

குடும்பமதை உயர்த்திடவும் - வீட்டில்
பொருளாதாரம் வளர்த்திடவும்
பெண் இன்று படும் பாடு கொஞ்சமல்ல
குடிகாரக் கணவன் ஒரு புறம்
வடி கட்டி நிற்கும் வறுமை மறுபுறமாக
விடிவை நாடி நிற்கின்றாள் பெண்


கல்வியிலே முதலிடம் பிடித்தாள்
விண்வெளி பயணத்திலும் இடம்பெற்றாள்
கல்பனாவில் தொடங்கி செலனா வரை
பெண்ணவள் பெருமை பெற்று விட்டாள்
பெண் என்று பிறந்து விட்டதால்
பெருமை பல சேருதடி

உயர் பதவிகளில் பெண்கள்
பணியாற்றி சேவை செய்ய
நாட்டின் பிரதமர் தொடங்கி
அமைச்சர்கள் என்று அவள்
வகிக்காத பதவி இங்கில்லை
பெண்ணாக பிறந்த பெருமையிது தான்

பெண்ணாக பிறந்து விட்டால் - அவளுக்கு
சீதனம் சீர்வரிசை வேண்டுமென்று
கள்ளிப் பால் கொடுத்து உயிர்பறிக்கும்
கொள்ளையர் கூட்டமும் எம்மிடையே
வேகம் பெற்று வளர்கின்றார்கள் பார் - இதனால்
உன் இனம் அழியும் உணர்



அடுப்பூதும் பெண்ணாயிருந்தவள் - இன்று
துடிப்புடன் உயர்கின்றாள் இங்கு
ஆணின் துணையை நம்பாமல் அவள்
தன் வழி நடக்கின்றாள் பார்
சட்டங்களும் சடங்குகளும் உனக்கில்லை
மட்டமான மனிதனை புரிந்துவிடு



துப்பாக்கி பிடிக்கவும்
துயர் துடைக்கவும் பெண்ணின்று
துணிந்து நிற்கின்றாள்
பாரதி கண்ட புதுமைப் பெண்
நீ தானென்று தெரிந்து கொள்
சங்கே முழங்கடி பெண்ணே

நாளைய உலகம் உன் கையில்
நம்பிக்கையுடன் முன்னேறு
கோழை அல்ல நீ
வாழையடி வாழையாக வந்தவள் நீ
வரலாறு உன்னை வாழ்த்துமடி - இது
பெண்ணாக பிறந்து விட்ட பெருமையடி.

பி. நாகலோஜினி
**2013 A/L**
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

# பயணங்கள் முடிவதில்லை

**கைதடியூர் பாரதி**

"மொழி உயரத் திரு உயரும்
திரு உயரத் திறல் உயரும்"

என்று மொழிப் பெருமை பேசியவர் சுவாமி விபுலானந்த அடிகளாவார். இத்தகு பெருமை சேர் மொழியினைச் செவ்வனே இயம்ப வேண்டிய கடப்பாடுள்ளது. எழுத்துவழக்கு, பேச்சு வழக்கு எனும் இரு வழக்கிலும் நீண்டகாலப் பாரம்பரியமுள்ளது நம் தமிழ்மொழி. இம்மொழியில் தவறுகள் அமையுமாறு எழுதுவது நம் மொழிக்கு நாம் செய்யும் துரோகமாகும். இத் துரோகங்கள் தொடராது பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

"அண்ண கச்சேரியடி இறக்கம். இறக்கம், இறக்கம்" சுடிதார் பெண்ணின் குரலொலி என் சிந்தனையைக்கலைத்துப் போட்டது. இந்தப் பேருந்துச் சூழலுக்குள் என்னைக் கொண்டுவர முயன்றாலும் பத்திரிகைகளின் தமிழ்த்தவறுகள் என்னைப் பாடாய்ப் படுத்துகின்றதால் அங்கேயே என்மனம் சுற்றிச் சுழன்றது. ஒரு செய்தி 08.02.2012 X பத்திரிகையில் "எவரும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை" இச் செய்தியின் சரியான வடிவம் என்ன? இது வெவ்வேறு வகையில் வரலாம். "எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை"

எவராலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை" எனவரும். "நடவடிக்கையும்" என்ற சொல்லில் வரும் "உம்" இடைச்சொல் இங்கே தேவையற்றது. "உம்" இடைச்சொல் வரின் இச்செய்தி இவ்வாறு அமையும்.

"எவரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை"

"எவராலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை"

சிறு விடயம். ஆனால் எத்தனை வேறுபாடு, தவறுகள். இலக்கணம் என்பது செவ்வனே அமையும் போதுதான் மொழிச்செம்மை பேணப்படும். அன்றைய தினமே வேறொரு செய்தி. அதே பத்திரிகை "மின்சார சபையினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லை" இச்செய்தி எவ்வாறு அமைய வேண்டும்?

"மின்சார சபை அதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லை"
"மின்சார சபையினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை"

இவ்வாறுதான் அமைய வேண்டும். இன்னும், அதே நாளில், "மின்னஞ்சல்", "பாலியல் வண்புணர்வு" என்பவை. இவை இவ்வாறே தொடர்ந்து செல்லுமா?

பேசுவது போல் எழுதுவது என்ற நிலையிலும் சில தவறுகள் ஏற்படக்கூடும். பேசுவது போல் எழுத வேண்டும் என்ற கருத்து வெற்றி பெற்றிருக்கவில்லை. ஏனெனில், பேச்சுத்தமிழ் என்பது இதுதான் என்பதை யாரும் திட்டவட்டமாக வரையறை செய்யவில்லை. பேச்சு வழக்கில் தமிழ்மொழி பல இடங்களில் பல வகையாகப் பேசப்பட்டு வருகின்றது. பெண் கருவுற்று இருத்தலைப் பேச்சுவழக்கில் பிள்ளைத்தாய்ச்சி, வாயும் வயிறுமாய் இருத்தல், முழுகாமல் இருக்கிறாள், குளியாமல் இருக்கிறாள், சினைப்படல், பயறு ஆதல் என்று பலவாறு கூறுவர். பேச்சுமொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களுள் குறவஞ்சி, பள்ளு முதலியன முக்கியமானவை. மாமிசத்தைக் கறி, கசாப்பு, மச்சம், இறைச்சி, ஊண், புலால் என்றெல்லாம் வழங்கி வருகின்றனர். கேழ்வரகு என்று இந்தியாவின் சில மாவட்டங்களில் வழங்கும் பொருள் எதுவென்று தெரியுமா? யாழ்ப்பாணத்தின் குரக்கன் தான் அது. இந்தியாவின் சேலம் மாவட்டத்தில் "ஆரியம்" என்றும், பாண்டி நாட்டில் "கேப்பை" என்றும், திருச்சியில் "ராகி" என்றும், இன்னும் சில மாவட்டங்களில் "கேவுரு" என்றும் கூறப்படுகின்றது. விரைவாய் என்ற சொல்லை விரசலாய், வேகமாய், சுருக்கா, கெதியாய், சட்டென்று, சீக்கிரம் என்றெல்லாம் ஊருக்கூர் கையாண்டு வருகின்றனர். "சுமார்" என்ற சொல்லின் பொருளை நாம் நோக்கினால் "சுமாராக இருந்தது" எனும் போது "சாதாரணமாக இருந்தது" எனும் பொருளையே யாழ்ப்பாணத்தில் காணுகிறோம். ஆனால் "சுமார்" என்ற சொல் "நன்றாக இருக்கிறது" என்ற பொருளில் சென்னையில் வழங்கி வருவதைக் காணலாம். இங்கே



ஒரே சொல் பேச்சு வழக்கில் முரண்பட்ட கருத்துக்களைத் தருவதைக் காண்கிறோம். "கர்மம்" என்ற சொல் "தலைவிதி" என்ற பொருளில் தமிழகத்தில் வழங்கி வருகின்றது. அதைச் சொல்லும் போதே தலையில் அடித்துக் கொள்பவர்களைப் பார்த்திருக்கிறோம். மங்கலமற்ற முறையிலே இச்சொல் வழங்குவதால் இச் சொல்லிலிருந்து தான் "கருமாதி" என்ற சொல்லும் ஏற்பட்டிருக்கலாமெனத் தோன்றுகின்றது. ஆனால் "கர்மம்" எனும் சொல்லுக்குச் சில இடங்களில் வேலை, தொழில் என்ற பொருள் உண்டு. இப்பொருளிலேயே இச்சொல் நம் பிரதேசத்தில் நிலவி வருகின்றது. "கருமமே கண்ணாயினார்" என்பது பண்டை வழக்கு ஆகும். "செயற்குழு" என்பதற்கு "கருமக்குழு" என்ற சொற்றொடர் வழங்கப்பட்டு வருதலை அவதானிக்கலாம்.

பேச்சு வழக்கிலுள்ள சொற்களை எழுத்தில் கையாளும் போது வேறொரு சிக்கலும் உண்டு. சில சொற்களுக்கு இலக்கிய வழக்கில் ஒரு பொருளும் உலக வழக்கில் அது சார்ந்த வேறொரு பொருளும் வழங்கி வருகின்றன. சான்றாக இரண்டைக் குறிப்பிடலாம். நாற்றம் என்ற சொல் இலக்கிய வழக்கில் மலரின் மணத்தை அதாவது மலரின் நறுமணம், துர்நாற்றம், இரண்டையும் குறித்தாலும் உலக வழக்கில் இச்சொல் துர்நாற்றத்தையே குறிப்பிடுகிறது. "விமானம்" என்ற சொல் இலக்கிய வழக்கில் எல்லாவகையான போக்குவரத்துக் கருவிகளையும் குறிக்கும். ஆனால் உலக வழக்கில் இச்சொல் விமானத்தையே சுட்டுகிறது.

எனவே இத்தகைய பேச்சு வழக்கு எழுத்து வழக்குத் தொடர்பான மாறுபட்ட கருத்துக்கள், மாறுபட்ட பொருளைத் தரலாம். ஆனாலும் பிரதேச வழக்கில் அவை அமையும் போது மாறுபாடுகள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவே.

வேற்று மொழியாளரால் அவர் சாராத மொழி பேசப்படும் போதும் எழுதப்படும் போதும் அதிக கவனம் தேவை. பிறமொழி பற்றிய முழுமையான அறிவு அவர்களிடம் இல்லாதிருக்கலாம். ஆனாலும் எழுத்து வெளியிடப்படும் போதும் சமூக மயப்பட்டுப் பலர் கண்களைச் சென்றடையும் போதும் தவறின்றி இருத்தல் முக்கியமன்றோ. பத்திரிகைகளும், பொதுமக்களும் விசனப்பட்ட ஒரு செய்தி. பத்திரிகைச் சான்றாகவே இதோ உங்கள் முன்.

(தொடரும்....)

# சித்த மருத்துவத்தில் தாய்பாலும் நோய் எதிர்ப்பு சக்தி மேம்பாடும்

டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
B.A (Ninth English Lit) BSMS
P.G.Dip. in Pup Adim
P.G.Dip Ed, M.A



"பீரம் பேணி பாரம் தாங்கும்" என்பது தமிழர் மரபில் தாய்ப்பால் விதந்து போற்றப்படுவதைக் காணலாம் "ஏந்திதிழைக்க குள்ளி ஏற்ற முலைப்பாலே" எனவும் "மீனற் சுறாவும் மிகு முலைப்பால் தரும்" எனவும் நம்நாட்டு மருத்துவ பழமொழிகள் தாய்ப்பால் அதிகப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றிக் குறிப்பிடுவதையும் காணலாம். தாய்ப்பால் கொடுக்கும் தாய் உள்ளெடுக்கும் உணவுகளில் குழந்தைக்கு நோய் ஏற்றபடுத்துகின்றவற்றைத் தவிர்த்து பத்திய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்தை "பிள்ளை பெற்றால் வாய்க்கட்டு" என்ற தொடர் புலப்படுத்துகின்றது. தமிழர் மருத்துவத்தில் முலைப்பாலானது குழந்தையின் மிகச் சிறந்த உணவுப் பொருளாகவும், நோயில்லா நெறியை உருவாக்கும் மனிதலில் நோய் எதிர்ப்பாற்றலைத் தூண்டும் அமிழ்தமாகவும், மருந்துக்களுடன் கொடுக்கக் கூடிய அனுபானமாகவும் திகழ்கின்றது.

"வாணுத லரிவை மகள் முலையூட்டத்
தானவள் சிறுபுறங் கலையி னன்றும்
நறும் பூந் தண்புற வணிந்த
குறும்பல் பொறைய நாடு கிழவோயே"
(ஐங்குறு நூறு 404)

பல குன்றுகள் பொருந்திய நாட்டை உடைய தலைவனுடைய, ஒளி பொருந்திய நுதலையுடைய மனைவி தன் மகனுக்கு முலைப்பால் ஊட்டிய செய்தியை ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் குறிப்பிடுவதைக் காணலாம்.

"தீம்பால் சுரப் போழ் தன் முலை போன்றே" என மணிமேகலையும், "தாய் முலையின் பால் நோக்கி வாழும் குழவிகள்" என நான்மணிக் கடிகையும் "என்கை வந்தி செம்மால் நின் பாலுண்ணிய" என கலித்தொகையும் "தீதலை மென்முலைத்

தீம்பால் பிலிற்று புதல்வர் புல்லி புனிறு நாறும்மே" என நற்றிணையும் என பலவேறு தமிழ் இலக்கிய நூல்களில் தாய்ப்பால் பற்றி சிறப்பாகக் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

"தன்னிய மென் நோதிற் சருவதோஷங்களும் போம்
உண்ணிய தாப மொழியுங் காண் – சந்நிதியொரு
வதாவுரம் பித்த சுரம் வன்கபச்சுரந் தணியுங்
கோதில் வலிமை யுண்டாங்கு கூறு"

(பதார்த்த குணசிந்தாமணி 93)

"இருந்தோவும் போக்கு மிகற் கிரிச்சந் தீர்க்கும்
அருந்து மருந்தி னனுபானம் – பொருந்தும்
அஞ்சனைத் திற் காகு மறல் வறட்சி நீக்கிவிடும்
பஞ்சினடி மாதர் முலைப்பால்"

(பாதார்த்த குண சிந்தாமணி 94)



பதார்த்த குணசிந்தாமணி என்ற சித்த மருத்துவ நூலில் முலைப்பாலானது சர்வ தோஷங்கள், தாபதோஷம், சந்நிபாதசுரம், பித்தசுரம், கபச்சுரம், கிரிச்சுரம் போன்றவற்றை நீக்குவதுடன் பலத்தை உண்டாக்கி நோய்களை விரட்டுவதுடன் கற்கும் பயன் படுவதுடன் மருந்துகளின் அனுபானத்திற்கும் பயன்படுத்தலாம் என்றும் குறிப்பிடுவதைக் காணலாம்.

முலைப்பாலானது நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிப்பதன் மூலம் தொற்றுக்கிருமி நோய்களைக் குணமாக்கும் தன்மை யுடையதால் பல சித்த மருந்துகளில் அனுபானமாக முலைப்பால் பாவிக்கப்படுகின்றது. முக்கூட்டு மாத்திரை முலைப்பாலில் உரைத்துக் கொடுக்கும் போது கபசுரம் தணிவதையும், பெரிய கோரோசனை மாத்திரை முலைப்பாலில் கொடுக்கும் போது கபநோய் குறைவதையும் குங்குமப் பூ மாத்திரை தேன், முலைப் பாலில் கொடுக்கும் போது ஐயகுன்மம் குணமாவதையும், சின்ன சிவப்பு மாத்திரை, இஞ்சி, தேன், முலைப்பாலில் கொடுக்கும் போது இருமல் தணிவதையும், அஷ்ட பைரவன் குளிசை முலைப் பாலில் கொடுக்கும் போது 64 சுரங்கள் குணமாவதையும், தக்காளிச் சாற்றுக் கோரோசனை மாத்திரை முலைப்பால், கற்பூரவள்ளிச் சாறு, தேன் போன்றவற்றுடன் கொடுக்கும் போது இருமல்

தணிவதையும் காணலாம். இவ்வாறு பல்வேறு மருந்துகளோடு முலைப்பால் சேர்த்துக் கொடுக்கும் போது நோய்கள் குணமாவதைக் காணலாம்.

பரராசசேகரத்தில் குறிப்பிடப்படுகின்ற முலைப்பாலெண்ணெய், முலைப்பால் குளிசை, முலைப்பாலேரண்டெண்ணெய் போன்ற மருந்துகள் முலைப்பால் சேர்த்து தயாரிக்கப்படுவதைக் காணலாம்.

"கோரோ சனைதான் கழஞ்சொன்று கூறு வசம்பு நேர்வாளம்
ஓரே வொன்று முக்கழற்சி னுடனேதிப்பிலி யிருகழஞ்சு
சீரார் மாசிக் காய் பத்துத் தெரிவை முலைப்பா றணிலரைத்து
நீரா குன்றி யளவுள்ளட மாந்தம் பலநோய் நீங்கி விடும்"


*(பரராசசேகரம் பாலரோகம் - 530)*

கோரோசனை கழஞ்சு ஒன்று, வசம்பு நேர்வாளம் வகைக்கு மூன்று கழஞ்சு, திப்பிலி இரண்டு, கழஞ்சு மாயக்காய் பத்தும், முலைப்பால் சேர்த்து அரைத்துக் குன்றுமணி பிரமாணம் உருட்டிக் கொடுக்க மந்தம் மற்றும் பலநோய்கள் தீரும் என ஈழத்து சித்த மருத்துவ நூலான பரராசசேகரம் குறிப்பிடப்படுகின்றது.

தாய்ப்பாலிலுள்ள *Immuno globulin (IgA)* ஐ பிறபொருளெதிரிகள் *(Anti – in festive property)* நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பதுடன் தொற்று எதிர்ப்புப் பொருட்களாகக் காணப்படுகின்றது. தாய்ப்பாலூட்டுவதால் தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலுள்ள உளரீதியான பாசப்பிணைப்பும் (Phychological bonding) நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும். மேலும் தாய்ப்பாலில் உணவுக் கால்வாய் தொடர்பான நோய் எதிர்ப்பு சக்தியும் *(Gut Ummunity)* காணப்படுகின்றது. சீம்பால் குழந்தைக்கான முதல் தடுப்பு மருந்தாகக் காணப்படுகின்றது.

தாய்ப்பாலிலுள்ள *Pre - biotics* ஆன ஒலிகோ சக்கரைட்டுகள் *(Oligo – Saccharides)* ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு சக்தி தொகுதியை *(Healthy Immune system)* உருவாக்க உதவுகின்றன. முலைப்பாலிலுள்ள இலக்ரோ பெலின் *(Lacto ferin)* எனும் பதார்த்தம் குடல் கிருமிகளுக்கு எதிராகத் தொழிற்படும். தாய்ப்பாலில் பற்றீரியா, வைரசுகளுக்கெதிரான *(Anti-viral and Anti-bacterial)* பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இந்த வகையில் சிறப்பான மருந்துப் பொருளாக முலைப்பாலானது சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

# அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்கள்



போர் முடிவடைந்து A- 09 வீதி மக்கள் பாவனைக்கு விடப்பட்டு யாழ் குடாநாட்டிற்கும் வெளி மாவட்டங்களுக்குமான போக்குவரத்துக்கள் உருவாக்கப்பட்டதன் விளைவாகவும், சுற்றுலா வர்த்தக நோக்கம் கருதியும் அதிகளவான போக்குவரத்து சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான வாகனப் பயன்பாட்டிற்கு இங்குள்ள வீதிகளின் அளவு போதாது என்பதனால் வீதிகள் அகலிப்பு, செப்பனிடும் பணிகளும் பலவேறு வீதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு இருக்கின்ற போது மிக அண்மைக் காலமாக வீதி விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இது எவ்வாறான சூழ்நிலைகளில் நிகழ்கின்றது என்பதனை பின்வரும் சூழ்நிலைகளின் அடிப்படையில் நோக்குவது சிறந்ததாகும்.

1. சிறந்த சாரத்தியம் :- “வேகம் விவேகமானது அல்ல” என்பது ஆன்றோர் முதுமொழி. அந்த வகையிலே வீதியிலே நாம் வாகனத்தை செலுத்துகின்றபோது எமக்கு முன்னால் வருபவர்கள், பின்னால் வருபவர்கள், எம்முடைய சாரத்தியத்தை நம்பி எம்மோடு இணைந்து பயணிப்போர் வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள் போன்றோரது பாதுகாப்பினைக் கருத்திலே கொண்டு பொறுப்புணர்வுடன சாரத்தியம் செய்ய வேண்டும்.

“வேகம் விவேகமானது அல்ல” என்பது ஆன்றோர் முதுமொழி. அந்த வகையிலே வீதியிலே நாம் வாகனத்தை செலுத்துகின்றபோது எமக்கு முன்னால் வருபவர்கள், பின்னால் வருபவர்கள், எம்முடைய சாரத்தியத்தை நம்பி எம்மோடு இணைந்து பயணிப்போர் வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள் போன்றோரது பாதுகாப்பினை கருத்திலே கொண்டு பொறுப்புணர்வுடன் சாரத்தியம் செய்ய வேண்டும்.

அத்தோடு,

1. மது போதையில் சாரத்தியம் செய்தல்
2. இன்னுமொரு வாகனச்சாரதியுடன் போட்டி மனப் பான்மையுடன் பயணம் மேற்கொள்வது.
3. கைத்தொலைபேசியை பாவித்தவாறு சாரத்தியம் செய்வது.

4. வாகனத்திற்கு பின்னால் இருப்பவரிடம் திரும்பித் திரும்பி கதைத்தவாறு சாரத்தியம் செய்தல்.
5. வீதிக் குறியீடுகள், எச்சரிக்கைகள் என்பவற்றை அலட்சியம் செய்தல்

போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாது சாரத்தியம் செய்பவர் மற்றவர்களின் மதிப்பு பெற்ற சாரதியாகின்றார்.

2. வீதி திருத்தப் பணிகள் :– யாழ் குடாநாட்டின் A -09 வீதி உட்பட பல்வேறு வீதிகள் அகலிப்பு செய்து "காப்பெற்" இடுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்போது தடுக்கப்பட்டிருக்கின்ற பகுதிகளை அலட்சியம் செய்து பயணிக்கின்ற போது விபத்து நடைபெற்று விடுகின்றது. எம்மவர்களில் பலர் ஏற்கனவே "காப்பெற்" வீதிகளில் பயணித்து அனுபவம் கொண்டவர்கள் கிடையாது. ஆகையால் மிகவேகமாக சாரத்தியம் செய்கின்றனர். இதனால் சினிமா படங்களில் நடைபெறுகின்ற காட்சிகள் போல சம்பவங்கள் நடைபெற்று அதன் விளைவாக உயிர் இழப்புக்கள், உடைமை இழப்புக்கள், அவையங்களை இழத்தல், ஊனமாதல் போன்றவை நடைபெறுகின்றன. இவற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள பாதசாரிகள், பொதுமக்கள் ஏனைய வாகன சாரதிகள் ஆகியோர் நன்மை கருதி வீதிகளின் தனிமைக்கு ஏற்பவும் வாகனத்தை மனித சக்தியின் கட்டுப்பாட்டிற்குள் வைக்கக் கூடியதுமான முறையில் சாரத்தியம் செய்வது சிறந்ததாகும்.




3. குறியீடுகள் சமிக்ஞைகள் : இந்த நாட்டினுடைய ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் எமது மாவட்டத்திலே வீதிக் குறியீடுகள், சமிக்ஞைகள் என்பன மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. ஆனால் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. இந்நிலையில் இவ்வாறான வாகனங்களில் செல்வோர் சமாந்தரமாக பயணம் செய்வதனை தவிர்க்க வேண்டும். பொறுப்பானவர்கள் வீதிகளில் பாதசாரிகள்

கடவை, வீதிக் குறியீடுகள், சிக்னல்கள் என்பவற்றை பொருத்தி நடவடிக்கையில் இறங்க வேண்டும். இந்த விடயத்தில் ஊடகங்களும் விழிப்புணர்வு பொறிமுறையை உரிய முறையில் வழங்குவது பொருத்தமானதாகும்.

4. அனுமதியற்ற சாரத்தியம் :- வீதியால் பயணம் செய்கின்ற ஒருவர் முறையான சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி சாரத்தியம் செய்ய முடியாது. ஆனால் இன்று பலர் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி பயணிக்கின்றனர். இதனால் இரண்டு விதமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

   1. வீதி பற்றிய சட்ட நடைமுறைகள் இல்லாத சாரத்தியத்தால் விபத்து ஏற்படுகின்றது.
   2. பொலிசார் நிறுத்துகின்ற போது நிற்காது செல்கின்றனர். இவ்வாறு பொலிசார் கலைக்கின்ற போது வேகமாகச் சென்று கட்டுப்பாட்டை இழந்து விபத்து நிகழ்ந்து விடுகின்றது. இதைவிட வரி, காப்புறுதி, அனுமதிப்பத்திரம் இன்றி பயணிப்பது, தரம் குறைந்த பரிசோதனை செய்யாத வாகனங்களை பயன்படுத்துவது என்பவற்றால் விபத்து நிகழ்கின்றது. இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

5. பாதசாரிகள் பொதுமக்கள் விழிப்புணர்வு தேவை :- இன்று நடைபெறுகின்ற அனைத்து விபத்து தொடர்பான நடவடிக்கைகளிலும் எமது அவதானம் செல்லுகிறது. ஆனால் அவற்றை ஒரு புதினமாகவும், செய்தியாகவும் பார்க்கின்ற அதேவேளை அதற்கு உயிரூட்டம் கொடுத்து நடைமுறைப் படுத்த முன்வராமையானது கவலைக்குரிய விடயம். இது தொடர்பில் ஆலயங்கள், கல்விக்கூடங்கள், அரச அலுவலகங்கள், நகரங்கள், கிராமங்கள் தோறும் விழிப்புணர்வை மேற்கொண்டு எமது ஆரோக்கியமான சமூகத்தினை கட்டி வளர்த்தல் எல்லோருடைய கடமையுமாகும்.



6. விபத்து நடைபெற்றால் :- விபத்து ஒன்று நடைபெற்று விட்டால் நாம் சம்பவ இடத்திலோ அருகாமையிலோ நின்றால் விபத்தில் சிக்கியவர்களினை மீட்டு காப்பாற்றுவது என்பது எல்லோருடைய தலையாய கடமையாகும். ஆனால் எம்மவர்களில் பலர் தாம் சாட்சி சொல்லி ஏனைய வம்புகளில் மாட்டி விடுவோம் என்ற பயத்தினால் உதவ முன்வருவதில்லை. இதனால் ஏனையவர்களைத் தாக்கிவிட்டு நிறுத்தாமல் கூடச்சென்று விடுகின்றனர். இது தவறான முன்னுதாரணம் ஆகும். விபத்தில் சிக்கியவர்களை பாதுகாத்து வைத்தியசாலையில் சேர்ப்பது என்பது ஒரு மனிதநேய கடமை. இது இந்த நாட்டிலுள்ள யாவர்க்கும் இன, மத, மொழி பேதமின்றி உருவாகி மனித உயிர்களை காக்கின்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

இந்த கட்டுரையை 15.10.2012 எழுதிக் கொண்டிருக்கின்ற போது இன்று K.K.S வீதி இணுவிலில் மோட்டார் சைக்கிள் பாதசாரி விபத்து. நாச்சிமார் கோவிலடியில் இரண்டு மோட்டார் சைக்கிள் விபத்து என்பவற்றைப் பார்த்துவிட்டும் அண்மையில் கிளிநொச்சி, ஆனையிறவு, பளை, இருபாலை, சுண்டிக்குளிச் சந்தி என்பவற்றில் அடுத்தடுத்து நடந்த விபத்துக்களால் இறப்பு. மாரிகாலமாகையால் விழிப்புணர்வுடன் பயணிப்பது அனைவருக்கும் நன்மை தரும்.

இவ்வீதி விபத்துக்கள் குறித்த மேலோட்டமான கருத்துக்களே என்னால் வரையப்பட்டுள்ளன. சம்பவங்களின் (விபத்து) காரணம் குறித்து சாரத்தியம், பாதசாரிகள், பொதுமக்கள் என்போரின் கவனமும் எமது தேவை. இதைவிட யாரையும் குறை காண்பது, அல்லது விமர்சனம் செய்வது எமது நோக்கம் அல்ல என்பதுடன் எமது சமுதாயம் தேவை இல்லாத உயிர் இழப்புக்களைத் தவிர்ப்பது நாளைய தலைமுறைக்கு நன்மை தருவதாகும்.

சி. சிறீதரன்
சமுர்த்தி முகாமையாளர்

# மழை அனுபவங்கள்



மழை அனுபவங்கள்
எல்லோருக்கும் இருக்கும்

கோடை வெம்மை குறைந்து
குளிர்மூடி தூமிக்கும் போது
புழுதி வாசம் கிளம்பும்
இதை நுகர்திருக்கிறாய் அல்லவா?

குடையில்லாமல் சிறுதூமியில் நனைந்து
வீட்டுக்குள் ஓடிவந்து
மழை அதிகரிக்க அதிகரிக்க
மகிழ்ச்சியும் அதிகரித்திருக்கிறதல்லவா?

திடீரென கொட்டிய
மழை நாளில்
உன்விருப்பத்துக்குரியவள்
ஓடிவந்து

அவசரமாய் தலைதுவட்டும் போது
வெளியே மழை நின்று விட்டிருக்கும்
உன்னுள்ளே மழை பெய்ய ஆரம்பிக்கும்

நனைந்து மரங்கள் ஆடும் அழகில்
மனதை தொலைத்து
குளிரை பகிர மனதுக்கு விருப்பமானவளை
மனதுள் அழைத்திருக்கிற அனுபவம்
வாய்திருக்கிறதல்லவா?

சுடு தேனீருடன்
குளிர் மழை அழகை
ஜன்னல் வழியே ரசித்தபடி
ஒரு கவிதை எழுதும் அனுபவம்
அலாதியானதல்லவா?

இரவு தூக்கத்தில்
தொடரும் மழையில் போர்வை இறுக்கி
அதன் ஓவென்ற ஓசைலயத்தில்
மனமொன்றி
வருகின்ற தூக்கமும் சுகமும்
மிகப் பிரியமானதல்லவா?

இதைவிட
இப்படியும் ஓர் அனுபவம் இருக்கிறது தெரியுமா
நடுநிசி நேரம்
வெளியே செல்விழும்
உயிர் நடுங்கும்
மழை கொட்ட ஆரம்பிக்கும்
பங்கருக்குள் வெள்ளம்
குளிர் உயிர் கொல்லும்
உருண்டையாய் நீளமான
ஐந்து ஒன்று காலில் சுற்றி
மேலே நகரும்.



வேலணையூர் - தாஸ்


## தமிழருவியில் உங்கள் ஆக்கம் இடம்பெற வேண்டுமா?

**கவிதை, கட்டுரை, சிறுகதை, நகைச்சுவைத் துணுக்கு எதுவானாலும் அனுப்பி வையுங்கள்!**

தரம் கண்டு பிரசுரிக்கிறோம்!

அனுப்பவேண்டிய முகவரி :

தமிழருவி, பலாலி வீதி,
டிப்போ அருகாமை,
உரும்பிராய்.



## உயிரியல் செறிவான வீட்டுத்தோட்டம்

மேற்படி தொடரில் கடந்த தமிழருவிகளில் விவசாய முயற்சிகளின் கடந்தகால நிகழ்வுகளை அதாவது 1950ம் ஆண்டிற்கு முற்பட்ட பாரம்பரிய விவசாய முறைகளை நேற்று என்றும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக அதிகரித்த சனத் தொகை வளர்ச்சிக்கு ஈடாக செயற்கை விவசாய இரசாயனங்களை பயன்படுத்தி பசுமைப்புரட்சி மூலம் அதிகரித்த உணவுற்பத்தி முறைகளை இன்று என்றும், குறிப்பிட்டுள்ளேன்.




# இன்று நாளை

பூமதி யோகநாதன்
விவசாயப்போதனாசிரியர்

மேலும் நகரமயமாதல், காடழிப்பு, விவசாய நிலங்கள், தொழிற்சாலைகள், வீடமைப்பு மற்றும் தேவைகளுக்கு பயன்படுத்துவதால் விவசாய செய்கை பரப்பு குறைவடைதல் விவசாயத்தில் அதிகரித்த விவசாய, இரசாயனப் பாவனை, காலநிலை மாற்றங்கள் புவிவெப்பமடைதல் போன்ற இன்னோரென்ன காரணங்களால் மீளப் புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்களின் சீர் குலைவு, சூழல் மாசடைதல் காரணமாக விவசாயிகள் பின்வரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி இன்று பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

விவசாய நிலங்களின் மறைவு
நீருக்கான போட்டி
பசளைத் துயர்

விவசாய முயற்சியில் இருந்து விலகிச் செல்லல்


உற்பத்திச் செலவு அதிகரிப்பு

விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமை

எனவே இன்றைய மேற்குறித்த பிரச்சினைகளுக்கு நாளை தீர்வு காணும் விவசாய முறையான விவசாய வனவளர்ப்பு அல்லது உயிரியல் செறிவான வீட்டுத் தோட்டம் பற்றியே விளக்கப் படுகின்றது.

அத்துடன் இலங்கையில் புற்றுநோயால் வருடத்திற்கு புதிதாக 20000 (இருபதாயிரம்) பேர் இனங்காணப்படுவதாகவும் குறிப்பாக வடபகுதியில் வருடத்திற்கு புதிதாக ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இனங்காணப்படுவதாகவும் பாடசாலை செல்லும் மாணவர்களில் பெரும்பகுதியினர் உடற்பயிற்சியின்மை காரணமாக உடல்நிறை அதிகரிப்பு, நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களிலும் பாதிகப்படுவதாகவும் பத்திரிகை மூலம், சுகாதார துறையினரின் அறிக்கைகள் மூலம் அறியக் கிடக்கிறது.

### வடமாகாணத்தில் புதிதாக கண்டறியப்பட்ட புற்றுநோயளர்களின் எண்ணிக்கை (ஆதாரம் 07.10.2012 ஞாயிறு தினக்குரல்)



வடபகுதியில் புற்றுநோய் பாதிப்பிற்கு பல காரணங்கள் தெரிவிக்கப் பட்டாலும் விவசாயத்தில் பயன்படுத்தப் படும் விவசாய இரசாயங்களான நைதரசன், செயற்கை பசளைகள் மற்றும் பூச்சி பீடை நாசினிகளால் குடிநீரும், மரக்கறி, பழங்களில் எஞ்சியுள்ள விவசாய இரசாயனங்கள் மூலமும் எமது உடலை அடைந்து புற்றுநோய் வரக்காரணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. புற்றுநோய் மட்டுமல்லாமல் எமது பாரம்பரிய முறைகளை (நேற்றைய) கைவிட்டதன் காரணமாக உடற்பயிற்சியின்மை அளவுக்கதிகமான அல்லது போசாக்கற்ற நொறுக்குத்தீனிப் பழக்க வழக்கங்கள் காரணமாக இரத்தக் குழாய்களில் கொழுப்புப் (கொலஸ்ரோல்) படிவு போன்ற நோய்கள் மூலம் வயது வேறுபாடின்றி வடபகுதி மக்கள் நோய்வாய்ப்பட்டு ஆரோக்கியமற்ற சமுதாயம் ஒன்று

உருவாகிக் கொண்டிருப்பதால் எமது சமூக மேம்பாடு எல்லா வழிகளிலும் தடைப்பட்டு வருவதை அறிய முடிகிறது.

இதுமட்டுமில்லாமல் எமது மூத்தவர்களை விட நாம் நாகரிகத்தில், அபிவிருத்தியில் மற்றும் சகல வழிகளிலும் உயர்ந்தவர்கள் என்று கருதும் நாம் எமது மூத்தோர் அவரவர் வீடுகளில் சேரும் திண்மக் கழிவுகளை வினைத்திறனாக சேகரித்து இயற்கைப் பசளையாகப் பயன்படுத்திய முறையைக் கைவிட்டு வீட்டுக்கழிவுகளை வீதிக்கு வீசும் நாகரிகம் காரணமாக டெங்கு, சிக்கின்குனியா, மலேரியா மற்றும் தொற்றுநோய்கள் மூலம் அவதிப்படுவதும் இன்றைய நிலை. இவைகளை நிவர்த்தி செய்து நாளை நலமாகவும் சமூக மேம்பாட்டுடனும் வாழவும் நாளைய தேவைகளைப் பூர்த்தி செய்து அடுத்த சந்ததியை வாழ வைக்கவும் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் புனிதத்துடன் பாரம்பரிய முறைகளையும் இணைத்து சகல துறையினரும் தமது இல்லங்களை சுற்றியுள்ள இடத்தில் உயிரியல் செறிவான வீட்டுத்தோட்டத்தை அமைத்து உணவுற்பத்தியில் ஈடுபட்டு சுயதேவைப் பூர்த்தி, உடல்நலம், உளநலம், சுற்றுச்சூழல், பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, உடற்பயிற்சி ஊடாக தொற்றா நோய்களில் இருந்து விடுபடுவோம்.


## உயிரியல் செறிவான வீட்டுத்தோட்டம் மூலம் சமுதாய மறுமலர்ச்சி எவ்வாறு?



உயிரியல் செறிவான தோட்டச் செய்கை முறையானது இரசாயன முறை களற்ற ஆனால் சிறிய பரப்பொன்றில் (வீட்டுத்தோட்டத்தில்) செறிவான முறையில் பயிர்ச்செய்கை பண்ணுவதன் மூலம் சூழலில் இயற்கையாகவே காணப்படும் மூலப்பொருட்களை பயன்படுத்தி மண்ணின் உற்பத்தித் தன்மையை மீளக்கட்டிய மைப்பதும் பராமரிப்பதுமாகும். மண்ணின் போசணை வழங்கும் தன்மையை நிலை நிறுத்துவதே இம் முயற்சியின் பிரதான நோக்கமாகும். இம்முறையில் பயிர் செய்யும் வீட்டுத்தோட்டச் செய்கை யாளரின் நோக்கம் இயற்கையாகவே காட்டு

நிலைமைகளை தூண்டுவதாகும். இம்முறையை விவசாய வனவளர்ப்பு முறை என்றும் கூறப்படுகிறது. இம்முறைகள் எமது யாழ் பாரம்பரிய விவசாய முறையை (நேற்றைய) ஞாபகப் படுத்துகிறது. அரை நூற்றாண்டிற்கு முன் யாழ் மாவட்ட மக்களின் 95% மேலானவர்கள் உயர்பதவி வகித்தவர்களும் ஆசிரியர்களும் தமது கடமைகளைத் திறம்பட அர்ப்பணிப்புடன் புரிந்ததுடன் விவசாய முயற்சியில் அதிகாலையிலும் மாலையிலும் ஈடுபட்டு தமது உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத்தையும் பொருளாதார மேம்பாட்டுடன் சமூக மேம்பாட்டுடன் சூழல் பாதுகாப்பிலும் கூட்டு மொத்தமாக ஈடுபட்டதால் உலகத்திலேயே உயர்நிலை வகித்த பெருமை இந்த இயற்கை விவசாய முயற்சி பெறப்பட்ட பக்க விளைவுகள் என்றால் அது மிகையாகாது.

உயிரியல் செறிவான வீட்டுத்தோட்ட செய்கை சிறிய பரப்பளவிற்கே சிபார்சு செய்யப்படுகிறது. இது மண்வளத்தை படிப்படியாக முன்னேற்றி மண் நுண்ணங்கிகளின் வளர்ச்சிக்கும் வழி செய்யும். வளமான மண் சிறந்த தாவர வளர்ச்சியை உறுதி செய்வதுடன் பூச்சிகள் மற்றும் நோய்த் தாக்கங்களையும் குறைக்கின்றது. இத்தோட்டச் செய்கையை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் விளைவானது படிப்படியாக அதிகரித்து குறித்த மட்டத்தை அடைந்தவுடன் உறுதி நிலையை (நிலைபேறான நிலை) எட்டும். இந்த உறுதி நிலையே கிடைக்க கூடிய அதிகரித்த விளைவாகும்.



## தாவர விலங்கு கழிவுப்பொருட்கள் பயன்படுத்தல்

உயிரியல் செறிந்த முறை தோட்டம் செய்வோர் தாவர, விலங்கு மற்றும் வீட்டுக் கழிவுகளை பயன்படுத்தி உச்ச பலனைப் பெற முயல்வார்கள்.

அதாவது கூட்டுப்பசளை (கூட்டெரு) தயாரித்துமண்ணிற்கு மின்சேர்ப்பு செய்து மண்ணில் இருந்து உறிஞ்சப்பட்ட கனியுப்புக்கள் போசணைப் பதார்த்தங்கள் மீண்டும் மண்ணில் சேர்க்கப்படுகிறது. இதனால் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

இயற்கையான உக்காத பிளாஸ்ரிக், பொலித்தின் பொருட்கள் தனியாக வேறுபடுத்தி சேர்த்து அகற்றப்படுகிறது. இப்பொருட்கள் மட்டும் வீதிக்கு பிரதேச சபையின் கழிவகற்றல் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. இயற்கை பொருட்கள் யாவும் வீட்டுத் தோட்டத்திற்கு பசளையாக சேர்க்கப்படுகிறது. மண்ணுடன் சேர்க்கப்பட்டு பயிர்களுக்கு போசாக்காகிறது. இதன் மூலம் மண்வளம் அதிகரிக்கிறது. நீர் பிடித்து வைத்திருக்கும் திறன் அதிகரிக்கிறது.

## சேதன பசளையின் நன்மைகள் (தாவர விலங்குக் கழிவுகள்)

மண்வாழ் பயன்தரும் உயிரினங்கள் நிலைத்து வாழ்ந்து விவசாயிகளுக்கு உதவுகிறது. அவற்றிற்கு ஒரு பகுதி உணவாகிறது. மண்புழுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் மண்ணின் காற்றோட்டத்தைப் பெருக்கிப் போசணைப் பதார்த்தங்களை வழங்குகிறது. மண்ணின் கட்டமைப்பை முன்னேற்றி மணியுருவாக்கம், களியின் ஒட்டும் தன்மையை குறைக்கிறது.

பலவகையான தாவரங்கள் தோட்டத்தில் வளர்க்கும் போது மண்ணின் வெவ்வேறு படைகளுள்ள போசணை சத்துக்களை உறுஞ்சுவதால் மண்ணின் போசணைக் கொள்வனவு பாதிக்கப்பட மாட்டாது வெவ்வேறு வகையான தாவரங்கள் வேறுபட்ட ஆழத்திற்கு செல்லும் வேர்த்தொகுதியை உருவாக்குவதே மண்வளத்தின் அழிவைக் குறைக்கும்.

## உள்ளூர் உள்ளீடுகள் சுயமுயற்சி, சுய உற்பத்தியில் நம்பிக்கை வைத்தல்

உயிரியல் செறிவான வீட்டுத்தோட்டத்தில் விலை கூடிய பெற்றோலியத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய இரசாயன உரங்கள், பூச்சி நாசினிகள் தங்கி இருக்காது. இவற்றை தவிர்க்க தாவர, விலங்கு, கழிவுப்பொருட்களையும், மாச்சாம்பல், இயற்கை கனியுப்புக்கள், எலும்புகள், முட்டை ஓடுகள், உக்கிய குப்பை, கோழி எரு, மாட்டெரு, பசுந்தாட்பசளை, (பூவரசு, கவினாய், வேம்பு, பாவட்டை, எருக்கலை, சணல்) கூட்டெரு என்பவற்றைப் பசளையாகப் பயன்படுத்தலாம்.

இறக்குமதி செய்த விலை கூடிய செயற்கை இரசாயனப் பொருட்கள் பயன்படுத்துவது மீளப் புதுப்பிக்க முடியாத இயற்கை

வளங்களின் அழிவிற்கே வழிவகுக்கும். அத்துடன் மனித ஆரோக்கியத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

## உயிரியல் செறிவான வீட்டுத்தோட்ட செய்கை மூலம் கிடைக்கும் நன்மைகள்

01. நிலத்தின் உச்ச பயன்பாடு : ஓரலகு காணித்துண்டில் இருந்து அதிக விளைவு பெறலாம்.
02. குறைந்த மூலதனத்துடன் அதிக மனித உழைப்புடன் (குடும்ப உறுப்பினர் பகுதிநேர உழைப்பு) உயிரியல் வீட்டுத்தோட்டம் செய்யலாம் : இதனால் குடும்ப அங்கத்தவர்களின் உடல் ஆரோக்கியம் மேம்படும் தொற்றா நோய்கள் தடுக்கப்படும்.
03. நீரை பாதுகாத்தல் தாவர மீதிகள் மூலம் மண் மூடப்படும் மற்றைய முறைகளை விட நீர் தேவை குறை இயற்கை பசளை அதிகம் இடுவதால் நீர்பிடித்து வைத்திருக்கும் திறன்கூட.
04. தாவர பிறப்புரிமை வளங்கள் பாதுகாத்தல் : சுதேச மரக்கறி மற்றும் தாவரங்கள் பல்லின செய்கை மூலம் பயன்படுத்தல் சுதேச மரக்கறி பயிர்கள் சுதேச வைத்திய முறையில் சில நோய்களையும் குணப்படுத்துவதற்குப் பயன்படும்.
05. பீடைக்கட்டுப்பாடு : பரந்த பல்வகைமையான மரக்கறி வளர்ப்பதன் மூலமும் சில சுதேச மணம்பரப்பும் தன்மை கொண்ட பயிர் வளர்ப்பதாலும் பீடைகள் விரட்டப்படும். தாவர அடிப்படையிலான தாவர சாறுகள் பீடை முகாமைக்கு பயன்படுத்தப்படுவதால் உடல் நலக்கேடு விளைவிக்கும் தன்மை இவ்வுற்பத்திகளில் இல்லை.
06. பீடைநாசினிகளில் சம்மந்தப்பட்ட உடல்நலக்கேடுகளை தவிர்த்தல்.
07. குடும்ப போசணையை மேம்படுத்தல்.
08. அதிகரித்த வருமானம் பெறலாம்.
09. சூழல் பாதுகாப்பு.
10. இழப்புக்களை குறைத்தல் இயற்கை வளங்களே இம்முறையில் முற்றாகப் பயன்படுத்துவதாலும் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பை ஈடுபடுத்துவதாலும் நிதி சம்மந்தப்பட்ட இழப்புக்கள் மிகக்குறைவு. செயற்கை விவசாய இரசாயன பசளை பாவித்த விவசாயிகள் நட்டம் காரணமாக கடனை மீளச் செலுத்த முடியாமல் தற்கொலை இழப்புக்களை மேற்கொண்டமை

குறிப்பிடத்தக்கது. உயிரியல் செறிவான வீட்டுத்தோட்டத்தில் பலவகையான பயிர் வகைகளும் பயிரிடப்படுவதால் பீடை தாக்க இழப்போ அல்லது காலநிலை மாற்றத்தால் போக பயிர்களுக்கான இழப்போ சில பயிர்கள் தாக்கப்பட்டாலும் ஆண்டு பயிர்கள் மற்றும் பிறபல பயிர்கள மூலம் இழப்பு ஈடு செய்யப்படும். எனவே உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் ஒரு சில பயிர்களை மட்டும் பயிர் செய்தால் பாரிய இழப்புக்கள் உணவுக கட்டுப்பாடு ஏற்பட வழிவகிக்கும்.

11. சூழலியல் ரீதியில் நிலைபேறான முறை : இம்முறை மூலம் மனதில் இயற்கையுடன் இணைந்தே உற்பத்தியில் ஈடுபடுகிறான். எனவே சூழல் மீது மனிதனின் கட்டுப்பாடு குறைவு, சூழல் மாசுபடல் மிகக் குறைவு, சூழல் சுகாதாரம் மற்றும் மனித உடல் நலம் சம்மந்தமான பிரச்சினைகளைக் குறைக்கின்றது.

ம. யோகநாதன்
(ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியர்)
சந்தைப்படுத்தும் ஆலோசகர்
இதம் உளவள நிறுவனம்

**வேலையே கிடைக்கவில்லை என்று கவலைப்படுகிறீர்களா?**

கவலையை விடுங்கள்!

**பணத்தை உழைப்பதற்கோர் பொன்னான வாய்ப்பு!**

தமிழருவி சஞ்சிகை தருகிறது.

நீங்கள் பத்திற்கும் மேற்பட்ட தமிழருவி சஞ்சிகைகளை விற்றுத்தந்தால் உங்களுக்கு ஒரு சஞ்சிகைக்கு 20/- கிடைக்கும். 100 ரூபாவிற்கு விற்ற சஞ்சிகையில் 80 ரூபாவை மட்டும் எமக்குத் தந்தால் போதும். விளம்பரங்களை சேர்த்துத் தாருங்கள். சேர்த்த தொகையில் 20% உங்களுக்குச் சொந்தம். ஆர்வம் உள்ளவர்கள் விரைந்து வாருங்கள். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :

077 7743055, 077 4736459

முகவரி :

தமிழருவி, பலாலி வீதி,
டிப்போ அருகாமை,
உரும்பிராய்.

# பனையோலை இராமன் க(ர)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

## 5. சஞ்சலம் தீர்த்த காதை

ம.பா.மகாலிங்கசிவம்

பனையோலை ராமன் சேர் மாணவரின்ரை பிரச்சினையை மட்டுமில்லை தன்ரை பிரச்சினையையும் மற்றவையின்ர பிரச்சினையையும் தீர்த்த விதம் பற்றிக் கதைகதையாச் சொல்லியிருக்கிறார்.

இவர் ஒரு நாள் தனக்கு நீண்ட நாளாகியும் வழங்கப்படாத ஒய்வூதியம் பற்றிக் கதைக்கக் கச்சேரியின் ஒய்வூதியக் கிளைக்குப் போனார். போறவழியிலை ஒரு இடத்திலை "சிறுநீர்ப்பாசனக் கிளை" என்ற போட் கண்ணிலை பட்டது. *Minor Irrication Branch* எண்டதைக் தான் மொழிபெயர்க்கத் தெரியாமல் மொழி பெயர்த்து "சிறுநீர்ப்பாசனக் கிளை" எண்டு போட்டிருந்தாங்கள். பனையோலை ராமன் சேருக்கு இந்த விடயம் தெரியாது. அந்தக் கிளையின் உள்ளே நுழைந்து தலைமை அதிகாரியின் முன்னே போய் நின்றார். "வாங்கோ ஐயா என்ன வேணும்?

"சிறுநீர் பாசனக்கிளை எண்டு போட கிடந்தது. அதுதான் வந்தனான்..." எண்டு இழுத்தார்.

"ஓம் இது சிறுநீர்ப்பாசனக் கிளைதான் உங்களுக்கு என்ன வேணும்?"

"என்ரை பெஞ்சனுக்கு மாதக் கணக்கிலை அலைஞ்சு திரியிறன் தாறியள் இல்லை. வேலிக்கரையிலை ஒதுங்கினாத் தன்ரை பாட்டிலை போற விஷயத்துக்கு ஒரு கிளை வச்சிருக்கிறியளோ?" எண்டு தன்ரை பென்சன் இழுபடுகிற கோவத்திலை பொரிஞ்சு தள்ளிப் போட்டு விறுவிறெண்டு வெளியே நடந்தார்.

ஒருநாள் வெளிநாட்டிலை இருந்து வந்திருந்த நண்பரைக் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் ரௌணுக்கு வந்தார். நண்பரோ கடைச் சந்துகளிலை சிலர் "யூரின் பாஸ்" பண்ணுறதைப் பார்த்திட்டு இலங்கையரைப் பற்றித் தரக்குறைவாச் சொல்லிக் கொண்டே வந்தார்.

அதைப் பற்றியே கதைச்சுக் கொண்டு வந்ததாலை வெளிநாட்டு நண்பருக்கும் அதுவந்து விட்டது. உடனை பனையோலை ராமன் சேர் அவரை யாழ்ப்பாண பஸ்ராண்டுக்கை இருந்த அதுக்குரிய இடத்துக்கு கூட்டிக்கொண்டு போனார். அங்கை காவலுக்கு நிண்டவர் வெளிநாட்டு நண்பரிட்டை ஐந்து ரூபா வாங்கிக் கொண்டு தான் உள்ளுக்குப் போகவிட்டார்.

சஞ்சலம் தீர்த்துக்கொண்டு வெளியிலை வந்த நண்பர் பனையோலைராமன் சேரிட்டை "ஏன் ஐந்து ரூபா வாங்கினவை?"



எண்டு கேட்டார். நண்பர் தன்ரை நாட்டைப் பற்றி நெடுகலும் நக்கல் விடுகிறார். என்ட கோபத்திலை நிண்ட சேர் சொன்னார், "அது உள்ளுக்கை போய் இருந்ததுக்குப் பைன்" நண்பர் விடவில்லை. "அப்ப அப்போதை வெளியிலை அடிச்சாங்களே அவங்களுக்கு பைன் இல்லையோ?"

"இல்லை"

"என்ன தலைகீழான 'கன்றியா' இருக்குது" எண்டு நண்பர் தன்ரை மேதா விலாசத்தை வெளிப்படுத்தினார். அதுக்கு மேலையும் சேராலை எரிச்சலை அடக்க முடியேல்லை.

"உங்கடை 'கன்றி'யிலை வெளியிலை அடிச்சாப் பைன். எங்கடை கன்றியிலை உள்ளுக்கு அடிச்சாப் பைன்" எண்டு அந்தக் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

பனையோலை ராமன் சேர் ஒருநாள் அடிக்கடி தலையைச் சுத்துது எண்டு வைத்தியரிட்டைப் போனார். அந்த வைத்தியர் சேரின் ஊரிலேயே பலவருடங்களாகத் தொழில் செய்து வருபவர். சேர் ஒருநாளும் நோய், நொடி எண்டு அவரிட்டைப் போனது கிடையாது. சேரும் அதே ஊரைத்தான் சேர்ந்தவர் எண்டது தெரிஞ்சதும் அவருக்கு ஆச்சரியமாய் போய்விட்டது.

"நான் இந்த ஊருக்கு வந்து இருபது வருஷமாகி விட்டது. நீங்க என்னட்டை ஒருதரம் கூட மருந்தெடுக்க வரேல்லை. என்ன காரணம்?"

"எனக்கு ஒரு நோயும் இல்லை. அதுதான் நான் வரேல்லை"

"இந்த வயதிலை ஒரு நோயும் இல்லாமல் நீங்க இருக்கிறது எனக்கு பெரிய ஆச்சரியமாக இருக்கிறது"

"இதிலை ஆச்சரியப்பட ஒண்டுமில்லை. எனக்கு எப்பவும் கடவுளின்ரை உதவி இருக்கிறது தான் அதுக்கு காரணம்" என்று உறுதியாகச் சொன்னார் சேர்.

டாக்டரால் இதை நம்பவே முடியவில்லை.

"கடவுள் உங்களுக்கு உதவியா இருக்கிறார் என்பதை நான் எப்படி நம்பிறது."

"சொல்லிறன். உதாரணம் சொல்லிறன். நேற்று ராத்திரி ஒரே இருட்டு. நான் அவசரமாக யூரினுக்குப் போகவேணும் ஒரு மாதிரித் தடவித்தடவி போய் பாத்ரூம் கதவைத் திறந்தன். உடனே லைற் எரிஞ்சுது. பிறகு வேலை முடிஞ்சவுடனை கதவைச் சாத்தினன். லைற் நிண்டுது. அப்ப என்ரை தேவைக்கு லைற்றைப்

போட்டுப் பிறகு தேவையில்லை எண்டவுடனை லைற்றை நிப்பாட்டினது ஆர்? கடவுள் தானே?"

டாக்டருக்கு ஒரே குழப்பமாகிவிட்டது. இந்த ஆள் ஒரு "மறை கழண்ட ஆளோ?" எண்டும் சந்தேகம் வந்துவிட்டது. பனையோலைராமன் சேரிட்டை இருந்து தந்திரமாக அவற்றை வீட்டு ரெலிபோன் நம்பரை வாங்கி டயல் செய்தார்.

"ஹலோ"

"நான் டாக்டர் கதைக்கிறன். உங்கடை வீட்டை இருந்து வயது போன ஒராள் இஞ்சை மருந்துக்கு வந்திருக்கிறார். அவர் தனக்கு கடவுள் உதவி செய்யிறவர் எண்டு சொல்லிறார். நேற்றும் தான் யூரினுக்குப் போகக் கடவுள் லைற் போட்டு நிப்பாட்டினவர் எண்டும் சொல்லிறார். உண்மையே?"

"அடப்பாவி. உந்தக் கிழவனே நேற்றுப் பிறிட்சுக்கை.... பெய்தவன்" கோபத்தோடு வந்த குரல் டாக்டரின் காதில் அறைந்தது.




பனையோலை ராமன் சேர் ஒருநாள் ஓ.எல். 2ஆம் தரம் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார். இம் முறை பரீட்சைக்கு வரும் எண்டு நினைச்ச முக்கியமான விடயத்தை வலு சீரியஸாக விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். திடீரெண்டு ஒரு மாணவன் எழும்பினான்.

"சேர் யூரின் பாஸ் பண்ணப்போறன்"

"ஒழுங்கா ஓ.எல் பாஸ் பண்ணத் தெரியாத நீ என்னெண்டு யூரின் பாஸ் பண்ணப் போறாய்? படிப்பிக்கைக்கே குழப்பாம இரடா"

இவர் 'வள்' என்று பாய்ஞ்சதும் அவன் பேசாமல் இருந்திட்டான். ஒரு கொஞ்ச நேரத்துக்கு மேலாலை அவனாலை "ஐம்புலனும்" அகத்தடக்கி இருக்கேலாமப் போட்டுது. திரும்பவும் எழும்பினான்.

"சேர் அடக்கேலாமை இருக்கு சேர்"

"முரட்டுக்காளையை அடக்கக் கூடியவன் நீ. இதை அடக்க மாட்டியே"


"சேர்.... சேர்...." காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்.

"படிப்பிக்கிறதைக் குழப்பாதை. இடத்திலை இரடா எண்டெல்லே சொன்னான்" இடத்திலை இரடா என்பதைப் பிழையா விளங்கிக் கொண்ட அவன் அந்த இடத்திலேயே "பாஸ்" பண்ணி விட்டான்.

(தொடரும்....)

# இதய நோயும், இரத்த அழுத்தமும்.....!

தொகுப்பு :- டாக்டர். B. சயந்தன்



நாகரிகம் வளர வளர மனிதனுக்கு விதவிதமான நோய்களும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளில் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யும் உணவுகளையும், இரசாயனம் கலந்த உணவுகளையும் சாப்பிடுவதால் உணவு போல் தன் ஆயுளையும் சுருக்கிக் கொண்டு தினமும் செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டிருக் கின்றான்.

நோயின்றி நூறாண்டு வாழ்ந்த முன்னோர்கள் எங்கே? தினமும் 10 மாத்திரைகள் விழுங்கும் நாம் எங்கே?

## ஏன் இந்த மாற்றம்....?

நவீனத்தின் புதுமைதான் இது. அதிக மன உளைச்சல் ஓய்வில்லாத உழைப்பு, தீய பழக்கங்களுக்கு அடிமை என பலவாறானவை மனிதனுள் புகுந்து இப்படி ஆட்டிப்படைக்கின்றன.

எண்ணெயில் பொரித்த உணவுகள், டின்களில் அடைக்கப்படட்டு பதப்படுத்தப்பட்ட உணவுகள், கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகள், போதிய உடற்பயிற்சியின்மை இவைதான் மனிதனை அதிகம் பாதிக்கின்றன.

உடம்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் மனிதனின் செயல்பாட்டுக்கு முக்கிய காரணிகளாகின்றது.

மனிதனின் செயல்பாடுகளில் முதன்மை வகிக்கும் தாயின் கருவில் இருக்கும் போதே துடிக்க ஆரம்பித்து இறுதிவரை துடித்துக் கொண்டிருக்கும் ஒரே உறுப்பு இதயம் தான்.

ஒவ்வொரு மனிதனின் கைப்பிடி அளவே உள்ள இந்த இதயம் நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கும்.

இந்த சுருங்கி விரியும் தன்மையின் அழுத்தமானது 120/80 என்ற கணக்கில் இருக்கும். டென்ஷன், மனஅழுத்தம், மன எழுச்சி மிகுதியாகும் போது அழுத்தம் அதிகரிக்கும். ஓய்வெடுக்கும் போது சற்று குறைந்து காணப்படும். இந்த இரத்த அழுத்தம் உடலமைப்பையும் வயதையும் பொறுத்து மாறும்.

இரத்த நாளங்களில் கொழுப்புக்கள் படிவதால் இரத்த ஓட்டத்தின் தன்மையைக் குறைக்கிறது. இதனால் இதயத்திற்கு தேவையான இரத்தம் கிடைப்பதில்லை. இது இருதயத்தின் சுருங்கி விரியும் தன்மையை சீர்கேடடையச் செய்கிறது. இதனால் இருதய அடைப்பு ஏற்படுகிறது. இதனால் சிலர் சில நொடிகளில் மரண வாசலை நெருங்க நேரிடுகிறது.

இதயநோய் தாக்குவதைச் சில காரணிகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

### மார்புவலி

சிலருக்கு மார்பின் நடுப்பக்கத்தில் அல்லது இடது பக்கத்தில் வலி தோன்றலாம். சிலருக்கு வயிற்றில் அஜீரணக் கோளாறு ஏற்பட்டும் இதுபோன்ற வலியை ஏற்படுத்தலாம்.

### மூச்சு விடுதலில் சிரமம்

சிலருக்கு திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது. அதிக வேலை செய்யும்போது, ஓய்வெடுக்கும் போது இவ்வாறு மூச்சுத்திணறல் ஏற்பட்டால் அது இதய நோயின் அறிகுறியாகும்.

### நெஞ்சு படபடப்பு

இதயம் வேகமாக துடிக்க ஆரம்பிக்கும். அப்போது இலேசாக மயக்கம் இருப்பது போல் தோன்றும், மேலும் வியர்வை அதிகமாக இருக்கும். அப்படி இருந்தால் அது இதய நோயின் அறிகுறியாக இருக்கலாம்.

### கணுக்கால் வீக்கம்

இரண்டு கணுக்கால்களிலும் அடிக்கடி வீக்கம் உண்டாகலாம். மேலும் மார்பு, வயிறு, தொடை, முகங்களில் வீக்கம் உண்டாகும். அந்த இடத்தில் கை வைத்து அழுத்தினால் பள்ளம் ஏற்படும். இப்படி இருந்தால் அது இதய நோயின் அறிகுறியாக இருக்கலாம்.

### இடது கை துடிப்புடன் வலி

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நரம்புத் தளர்ச்சிக்கு ஆளானவர்களுக்கும் மார்பு வலியுடன் இடது கை வலித்தால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

### மயக்கம் ஏற்படுதல்

இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் வியர்வை படபடப்புடன் மயக்கம் ஏற்படும். இதை நன்கு கவனித்து உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

## அதிக இரத்த அழுத்தம்

பொதுவாக இரத்த அழுத்தம் ஒரு உடனடியாக பாதிப்பினை ஏற்படுத்தும் ஒரு நோய் அல்ல. ஆனால் அதை அப்படியே குணப்படுத்தாமல் விட்டுவிட்டால் அது இதய நோய்க்கு காரணமாக அமைந்துவிடும். எனவே இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ள வேண்டும். சில நேரங்களில் இரத்த அழுத்தமானது சிறுநீரகங்களைச் செயலிழக்கவும் கண், பார்வை மங்கவும் செய்துவிடும்.

கோபம், கவலை, இயலாமை, மனஅழுத்தம், மன உளைச்சல், தூக்கமின்மை, அதிக வேலைப்பளு இவற்றால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

## இதய நோயிலிருந்து விடுபட

☆ புகை, மது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

☆ உணவில் உப்பைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

☆ உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

☆ டென்ஷனைக் குறைத்து மன அழுத்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

☆ தேவையான ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

☆ உடற்பயிற்சி அல்லது நடைப்பயிற்சி செய்வது நல்லது.

☆ இதய நோயிலிருந்து விடுபட உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம்.

☆ இனிப்பு வகை உணவுகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

☆ குளிரூட்டப்பட்ட பானங்கள், அதிக வாசனை கலந்த உணவுகள் சாப்பிடக் கூடாது. அதுபோல் பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் தவிர்ப்பது அவசியம்.

☆ அதிகம் கொழுப்பு சேர்ந்த பொருட்களைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடுவதும் நல்லதல்ல.

☆ தேநீர், கோப்பி, சோடா போன்ற பானங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

☆ உணவில் அதிகம் காய்கறிகளையும், பழங்களையும், கீரைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## ஆரம்பக்கல்வி ஆசிரியரும் மாணவர்களும்

ஆரம்பக்கல்வியே மனிதனின் அறிவு வளர்ச்சியின் அடிக்கல்லாகும். அதுவே வாழ்வில் ஒருவன் பெறக்கூடிய சகல வெற்றிகளுக்கும் அத்திவாரமாக அமைகின்றது. இந்த ஆரம்பக்கல்வி சிறப்புற அமைய வேண்டுமானால் அது ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது.

ஆசிரியர் தான் பெறுகின்ற வேதனத்திற்காகத் தனது தொழிலைச் செய்யாது ஒரு கல்வி கற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற இலக்கினை மனதிலே கொள்ள வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்றுக் கிணங்க இம்மன்னர்களை உருவாக்குகின்ற பாரிய பொறுப்பு ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே நட்புறவு இருந்தால் தான் மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்கலாம். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களிடம் சில குண இயல்புகள் முக்கியமாக இருக்க வேண்டும். அவையாவன அன்பு, பொறுமை, கருணை, நடுநிலைமை, நேர்மை என்பனவாகும்.

இம்மாணவர்கள் சுறுசுறுப்புள்ளவர்கள், ஆராய்வூக்க முள்ளவர்கள்; விளையாட்டு ஆர்வம் உள்ளவர்கள்; படைப்பாற்றல் உள்ளவர்கள்; கற்பனையாற்றல் மிகுந்தவர்கள்; தம்மை மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்ற இயல்புடையவர்கள் இத்தகைய இயல்புகளுக்கேற்றவாறு ஆசிரியரும் இயங்க வேண்டும்; ஆரம்ப பாடசாலை மாணவர்கள் ஆசிரியரைக் கண்டு பயந்தால் அவர்களால் படிக்கவே முடியாது. அவர்களோடு தோழமையாக நடந்து கொண்டால் தான் அச்சம், கூச்சம் நீங்கிச் செயற்படுவார்கள்.

ஆசிரியர்கள் நல்லொழுக்கம் உடையவராகவும், சமயப் பற்றுடையவராகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியரைப் பின்பற்றித் தான் மாணவர்கள் நடந்து கொள்வர். ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர் மீது தான் நம்பிக்கை உடையவர்கள். அவர்களது பெற்றோர் எந்தளவு படித்திருந்தாலும் தங்கள் பெற்றோர் சொல்வதிலும் பார்க்க தனது ஆசிரியர் சொல்வது தான் சரியென ஏற்றுக் கொள்வார். இதுவே இவர்களின் இயல்புமாகும். எனவே அந்த நம்பிக்கையை இழக்கா வண்ணம் ஆசிரியரும் நடந்து கொள்ள வேண்டும்.

திருமதி. த. தர்மரத்தினம்
ஆசிரியர், யா/ இந்து ஆரம்ப பாடசாலை

# திறமைசாலிகளைத் தமிழருவி கௌரவிக்கும்

பல்வேறு கலைத்துறைகளிலும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியவர்களை மாதம் ஓர் எழுத்தாளர் அறிமுகம் என்ற பகுதி மூலமும் கவிதை, கட்டுரைப்போட்டிக்கான பரிசில்கள் மூலமும் தமிழருவி சஞ்சிகை தொடர்ந்து கௌரவித்தே வந்துள்ளது.

இந்த வரலாறுகளின் தொடர்ச்சியாக புலமைப் பரிசில் பரீட்சையில் (தரம் 5) சித்தி பெற்ற வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவரான தனலிங்கம் ஜேவிட்சனுக்கும் நிதிஉதவி வழங்கி, தமிழருவி நிர்வாக இயக்குநரும், உதவி ஆசிரியருமான த. கணேசமூர்த்தி கௌரவித்துள்ளார்.

சின்னையா தனலிங்கம் திருமதி. தனலிங்கம் மியூரில் கலிஸ்ரா ஆகியோரின் மகனான தனலிங்கம் ஜேவிட்சன் யா/டிறிபேக் கல்லூரி மாணவன் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த இம் மாணவனுக்குத் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும் பாடசாலைக் கல்வியைத் திறமையாகக் கற்று 2012 புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார். இவருக்கு வகுப்பாசிரியரான திருமதி தவமலர் தெய்வேந்திரன் முழுமையான வழிகாட்டலை வழங்கினார்.

குடும்பத்தின் வறுமைச்சூழலை வெற்றிகொண்டு சாதனை படைத்த இம்மாணவருக்கு தமிழருவி நிர்வாக இயக்குநர் த.கணேசமூர்த்தி 4000 ரூபாவை அன்பளிப்பாக வழங்கியதுடன் கற்ற பாடசாலைக்கு இவரின் பெயரால் 1000 ரூபாவை அன்பளிப்புச் செய்யவும் உதவினார். இம் மாணவரைத் தாங்களும் பாராட்ட, கௌரவிக்க விரும்புவர்கள் 0774324295 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

தமிழருவியின் பணிகள் மேலும் தொடரும்.





இலங்கை இந்துமத குருபீடாதிபதி

சர்வதேச இந்துமத குருபீடம்

INTERNATIONAL HINDU RELIGIOUS GURUPEEDAM

REGD. N/A/920

(Approved by the Government of Sri Lanka)

பட்டமளிப்புப்

பாராட்டுப் பத்திரம்

இலங்கை இந்துமத குருபீடாதிபதி

'சிவாகமஞானி', கலாநிதி, அருள்ஜோதி

ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

அவர்களின் ஆவது ஆண்டு ஞாபகார்த்த

ஆன்மீகப் பெருவிழாவில்

சிவஸ்ரீ தி. ஜோதிநாதக் குருக்கள்

அவர்களின் கோண்டாவில்

சமய, சமூக, கலைப்பணிகளைப் பாராட்டி,

பொன்னாடைபோர்த்தி

சிவாச்சார்ய சிரோமணி

எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது

வழங்கப்பட்ட பாராட்டுப் பத்திரம்.

அன்னாரின் ஆன்மீகப் பணிகள் சிறப்புற

எமது பரிபூரண அருளாசிகளை வழங்குகிறோம்.

சுபம்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

**பாராட்டி வாழ்த்துகிறோம்!**

சர்வதேச இந்துமத குருபீடத்தால் இலங்கை இந்துமத குருபீடாதிபதி, சிவாகமஞானி, கலாநிதி அருள்ஜோதி, ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட ஆன்மீகப் பெருவிழாவில் **கோண்டாவில் சிவஸ்ரீ. தி. ஜோதிநாதக் குருக்கள்** அவர்களின் பணிகளைப் பாராட்டி **சிவாச்சார்ய சிரோன்மணி** என்ற சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டது இப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஜோதிநாதக் குருக்களின் பணிகள் மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

எழுதுங்கள்! வெல்லுங்கள்!

## வெண்பாப் போட்டி

புலவர்மணி அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் நினைவாக அவரது மகன் காப்பியப் புலவர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்கள் நடத்தும் வெண்பாப் போட்டி "மல்லிகைப் பூ வாசம் வரும்" என்னும் அடியை இறுதியாகக் கொண்டு ஒரு வெண்பா எழுதி அனுப்புங்கள். முறையே 700/-, 500/-, 300/- முதல் மூன்று பரிசில்களாக வழங்கப்படும். வெண்பா அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 31.01.2013. அனுப்ப வேண்டிய முகவரி,

எழுதுங்கள்! வெல்லுங்கள்!

## பாடசாலை மாணவர் களுக்கான மாதாந்த கட்டுரைப் போட்டி இல - 7

"இளைஞர்களின் ஒழுக்க விழுமியங்களைச் சீர்படுத்துவதில் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் பங்களிப்புப் போதுமானதா? இல்லையா?" என்பதை மையமாகக் கொண்டு கட்டுரை அமைய வேண்டும். 500 சொற்களுக்குக் குறையாததாக இருக்க வேண்டும். முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவருக்கு முறையே 1000/-, 750/-, 500/- வழங்கப்படும். இந்த ஆக்கம் குறித்த மாணவருடையது என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

த.கணேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய இறுதித்திகதி ~~31.01.2013~~ 31.03.2013

வெண்பா பற்றிய தெளிவு இல்லாத வாசகர்களுக்காக "வாழ்வதற்கு என்ன வழி?" என்ற இறுதி அடியை வைத்து எழுதப்பட்ட வெண்பா ஒன்று கீழே தரப்படுகிறது.

## வெண்பா

மண்ணெயுடன் சீனிபால் மாவோ டரிசிவகை
விண்ணினையே முட்டும் விலையேற்றம் - எண்ணியெண்ணி
நாளெல்லாம் வாடும் நலிந்தோர்கள் இந்நாட்டில்
வாழ்வதற் கென்ன வழி?

இச் சஞ்சிகையானது அதன் நிர்வாக இயக்குநரும் உதவி ஆசிரியரும் வெளியீட்டாளருமான செ. த. கணேசமூர்த்தி அவர்களால் 29.01.2013இல் ஆனைக்கோட்டை றூபன் பிறிண்டேர்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.







அச்சுப்பதிப்பு:- றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை. 021 225 5566